T.18388

ஸ்ரீ

கிருஷ்ணசகாயம்.

நவகுமாரசரித்திரமெனும்

அம்ஸராஜன்கதை.

இஃது,

பூவிருந்தவல்லி

சு. தங்கவேலுமுதலியாரால்

இயற்றப்பட்டு,

விலை] [அணா-12.

திரிசிரபுரம்.

சடகோபநாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy Right.

1904.

நவகுமாரசரித்திரமெனும்

அம்ஸராஜன்கதை.

முற்பாதி.

கடவுள்வணக்கம்.

வித்தைமுத்தி விளங்கும்பராபர
கத்தனடியைக் கருத்திலிருத்தியே
சுத்தகுணவீரர் சுந்தரகாதையை
பத்தியாயோத பரனருளெய்துமே.

கடல் சூழ்ந்த நெடிய உலகத்தின்கண் ஐம்பத்தாறு தேசத்து ளொன்றாகியும் நீர்வளம் நிலவளம் குடிவளம் மிகுந்து மகா சிறப்புற்றிருக்கும் புஷ்பபுரி யென்னுமோர் நகரமுண்டு. அந்நகரத்தையாண்டுவந்த அம்ஸராஜனென்பவன், நான்கு வேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைக்கியான மனுவிக்கியான முதலியவற்றை, ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, அழகில் மாரனைப்போலும், வீரத்தன்மையில் இந்திரனைப்போலும், பொருமையில் தருமனைப்போலும், ஈகையில் கர்ன்னனைப்போலும், சத்தியத்தில் அரிச்சந்திரனைப்போலும், தன்னுயிர்போல் மன்னுயிர்களைப்பாதுகாத்து, புத்திசாதுரியமுள்ள தனது மந்திரிகளாகிய தருமபாலன்-பத்மோபவன்-சீதவர்மன் - என்னுமூன்று மந்திரிகளுடன் ஆறிலொரு கடமைகொண்டு அம்புவியை ஆண்டு வந்தான்.

அவ்வரசனுக்கு தன்மனதுக் கிசைந்த இல்லாளொருத்தி யில்லாததினால், மனவருத்தமுற்றவனாய் அளகாபுரியை யாண்டு வந்த அசுமுகிராஜன் மகளாகிய வசுமதி யென்னும், அருந்ததிக்கொப்பாகிய பெண்ணை மணம்புரிந்து, முப்பத்திரண்டு தருமங்களையும் குறைவின்றி நடத்திவந்தான். அக்காலையில் தன் முதன்மந்திரியாகிய தருமபாலனுக்கு சுமந்திரன், சுமத்திரன், காமபாலன், என்னும் மூன்றுகுமாரரும், இரண்டாவது மந்திரியாகிய பத்மோபவனுக்கு இரத்தினோபவனும், மூன்றாவது மந்திரியாகிய சிதவர்மனுக்கு சுமதி, சத்தியவர்மன் என்னும் இரண்டு குமாரரும் பிறந்தார்கள். இப்பிள்ளைகள் அறுவரும் நான்கு வேதம் ஆறுசாஸ்திர முதலியயாவும் கற்றுணர்ந்தார்கள். அவர்களில் காமபாலன் துர்நடத்தையிலும் களவிலும் சூதிலும் சிற்றின்பத்திலும் தன் வாழ்நாளைப்போக்கி துர்ச்சனருடன்கூடி தேசாந்திரியாய்விட்டான். இரத்தினோபவன் வியாபாரத்தில் மனமுடையவனாய் கப்பலேறி தீவாந்திரம்சென்றுவர்த்தகஞ்செய்யப்போனான். சத்தியவர்மன் துறவியாய் காஷாயந் தரித்து சன்னியாசியாய்ப்போனான். மற்ற குமாரராகிய சுமந்திரன், சுமத்திரன், சுமதி, யென்னும் இம்மூன்று குமாரர்களும், தமது தந்தைகளாகிய மந்திரிகள் காலஞ்சென்றவுடன் அம்ஸராஜனிடமே மந்திரிகளாகி வாழ்ந்திருந்தார்கள்.

இவ்வாறு அரசன் செங்கோல்செலுத்திவரும்நாளில், இவன் செல்வச் சிறப்பைக்கண்டு பொறாமையுற்று மாளவதேசத்தரசனாகிய மதனசேனன், புஷ்பபுரியின்பேரில் படையெடுத்து நால்வகை சேனைகளோடுவந்தெதிர்த்தான். இதைக்கண்டஅரசன் தன்னுடையசேனைகளோடு மதனசேனனையெதிர்த்து ஒருவர்க்கொருவர் அகோரமானயுத்தஞ்செய்து, கடைசியில் மதனசேனனுடைய சேனைகளைக்கொன்று நாசப்படுத்தி அவனையும் கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டுதன்னகரம்வந்துசேர்ந்தான். பின்பு அரசனுக்கு மாளவதேசத்தை தன்வசமாக்கிக்கொள்ள மனமில்லாதவனாய் மதனசேனனையழைத்து, வேண்டியபுத்திமதிகளைச் சொல்லி முன்போல் அவன்தேசத்தையாளும்படி அனுப்பிவிட்டு தான் அரசுசெலுத்திவரும்நாளையில், தனக்குப்பின் தன்னைப்போல் அரசாளும்படி ஓர்புத்திரனில்லாதமனவருத்த முள்ளவ

னாய், தானும் தன்மனைவியாகியவசுமதியும் ஸ்ரீமந்நாராயணனைத்தியானித்து ஒருவேளை அன்னம்புசித்து விரதமனுஷ்டித்துக்கொண்டு வரும்நாளையில், ஒருநாள் பக்தவற்ஸலனாகிய பகவான் கிருபை கூர்ந்து அரசனுடைய மனைவியின் கனவில் தோன்றி ஓ-வசுமதி! நீயாதொன்றும் சஞ்சலப்படவேண்டாம், உன்னிஷ்டப்படியே ஓர் புத்திரனைப்பெறுவாய், அவன் ஐம்பத்தாறு தேசத்துக்கதிபதியாய் அரசுபுரிவானென்றுசொல்லி மறைந்துவிட்டனர். இவ்விதமாய் தான்கண்ட கனவை தன்கணவனிடம்சொல்லி இருவரும் சந்தோஷமுற்றிருந்தார்கள். பின்பு தேவானுகூலத்தால் வசுமதிக்கு கெர்ப்பம்தரிக்க அரசன் பிரம்மானந்தத்தில் மூழ்கினவனாய், அந்தணர்களுக்கும் ஏழைபரதேசிகளுக்கும் குறைவில்லாமல் முப்பத்திரெண்டுதானங்களைச் செய்துவந்தான்.

இவ்வாறு வசுமதிக்கு ஏழுமாதம் சென்றபின்பு அரசன் ஸ்ரீமந்தம்செய்ய எண்ணங்கொண்டு வேதவேதியரால் முகூர்த்தம் நிச்சயித்து, தன்நகரத்தை அலங்காரஞ்செய்யதிட்டம்செய்து, ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் நிருபம் அனுப்பி அவர்கள் வரவுக்கெதிர்பார்த்திருந்தான். அக்காலையில் மிதுலாநகரத்தரசனாகிய பிரகாரவர்மன் அம்ஸராஜனனுப்பிய நிருபத்தை தானும் மனைவியாகிய பிரியவதனையும் தெரிந்துக்கொண்டு, வசுமதியும் தன்மனைவியும் இளமையில் ஓரேபள்ளிக்கூடத்தில் வாசித்தவர்களாதலால் வசுமதியை ஆசிர்வதிக்க தன்நாயகியும், தன்னிரண்டு குமாரர்களுமாக புஷ்பபுரிபட்டணம்வந்துசேர்ந்தார்கள். அப்போது அம்ஸராஜன் வந்தவர்களுக்கெல்லாம் தகுந்தவிடுதிகளமைத்து, நல்லசுபமுகூர்த்தத்தில் ஸ்ரீமந்தம்நடத்தி வேதவேதியர்களுக்கெல்லாம் அபரிமிதமாக தான தர்மங்கள் செய்து, அரசர்களுக்கெல்லாம் தேவாமிர்தம்போன்ற போஜனமளித்து அவரவர்களுக்குத் தகுந்தமரியாதைசெய்து, மிதுலாநகரத்தரசனாகிய பிரகாரவர்மன்தவிர மற்ற அரசர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்பினான்.

இப்பால் சிலநாள்சென்றபின்பு ஒருநாள் அம்ஸராஜன் தனதுநேசனாகிய பிரகாரவர்மனுடனும் மந்திரிமார்களுடனும் இராஜவிசாரணை நடத்திவருகையில், ஓர்சேவகன் அரசனெதிர்வந்து

தீர்க்கதெண்டம்செய்து ஓ-சுவாமி! பராக்கு! யாரோ ஒருமுனிவர் மகாதபசியாய் இருக்கிறார், அவர் தங்களிடம் யாதோசிலகாரியார்த்தமாக வந்திருக்கிறேனென்றார். நான் அவரைவணங்கி தமது காமதேயமென்னவென்று கேட்க அவர்சொன்னதாவது, தன்பெயர் யதியென்றும் உம்மைக்காணும்படி வந்ததாகச்சொல்லச்சொன்னாரென்றான். அதைக்கேட்டரசன் அவரை தன்னிடமழைத்துவரும்படி உத்திரவளித்து, சபையிலுள்ளவர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்பி, மந்திரிகளைமாத்திரம்தன்னிடம் நிருத்திக்கொண்டு, யதிமுனிவர்க்கெதிர்பார்த்திருக்கையில், அப்போதுமுனிவர் ஆசாரவாசலில்சேவகனுடன்வருவதை அரசன் கண்டு எதிர்கொண்டழைத்துவந்து ஆசனமளித்துவணங்கி ஓ-சுவாமி! தேவரீர் அடியேன்பொருட்டு இவ்வளவுதூரம் பாதசாரியாகவந்தது நாங்கள்செய்த மாதவம்யாதோ தெரிவிக்கவேண்டுமென்றுகேட்க, முனிவர் அரசனை ஆசீர்வதித்து அம்ஸராஜனே! உனக்கு அந்தரங்கமானவிஷயம் சொல்லவந்தேன் என்னவெனில், ஓர் ஆரண்ணியத்தில் நான்தவத்திலிருக்கையில் மாளவதேசாதிபதியாகிய மதனசேனன் உன்னிடம் தோல்வியடைந்ததைப்பற்றி வருத்தமுற்று, உன்னை ஜெயிக்கவேண்டி சிவபெருமானைநோக்கித்தவஞ்செய்தான். அவர்பிரசன்னமாய் வாளொன்றையளித்து எதிரிகளைவெல்வாயென்று ஆசிர்வதித்தேகினர்.

இவ்வரத்தைப்பெற்ற மதனசேனன் கர்வங்கொண்டு அந்த வாளினால் உன்னைஜெயிக்க எண்ணங்கொண்டு, சேனைகளோடுவருவதாய் தீர்மானித்திருக்கிறான். ஆதலால் அதற்கு வேண்டிய முயர்ச்சியை நீ தேடுமென்றுசொல்லி விடைபெற்றுப் போய்விட்டார். இதைக்கேட்டரசன் மனவருத்தமுற்று ஒன்றுந்தோன்றாமலிருப்பதை மந்திரிகள் கண்டு, ஓ - இராஜசேகரா மதனசேனன் நம்முடன்வந்தெதிர்த்தால் ஜெயம்பெருவானேயன்றி தோல்வியடையான், ஏனெனில் தபஞ்செய்து வாளைப்பெற்றிருப்பவனதலால் நாங்கள் சொல்லுவதென்னவெனில், தாங்களும் கர்ப்பவதியாயிருக்கும் பத்தினியும் சில ஏவலாளர்களையும் அழைத்துக்கொண்டுவேண்டியதிரவியங்களை எடுத்துக்கொண்டு, ஓர் பலமானகோட்டைக்குள் சென்று சுகமாயிருப்பீரென்று வணங்கினார்கள். அதைக்கேட்டரசன் அவர்கள் கருத்துக்கிசை

No. 1.

(அம்ஸராஜன் கொலுவு.)

மதனசேனன்யுத்தம்.

LITHO-MEENAKSHIAMMAH PRESS MYLAPORE. 1905.

யாதவனும் தானேமுன்னின்று தன்னால் கூடியவரையில் யுத்தஞ்செய்வதே நலமென்றுதீர்மானித்துக்கொண்டான். இப்படிக்கிருக்க சிலநாளைக்கெல்லாம் பகைவனுகிய மதனசேனன்சேனைகளோடு யுத்தத்திற்கு வருவதை ஏவலாளிகளால் தெரிந்துக்கொண்ட அரசன் தனதுபத்தினியாகிய வசுமதியையும் பிரியவதனுவையும் அவள் இரண்டுபிள்ளைகளையும் சிலதாதிகளுடன்படைவீரர்கள்வசம் ஒப்புவித்து இவர்களையழைத்துக்கொண்டுபோய் விந்தியமலைச்சாரலில் புதிதாய் ஒரு கோட்டைகட்டி அதிலிருக்கும்படி திட்டம்செய்துவிட்டு தானும் தன்மந்திரிகளும் பிரகாரவர்மனும் அளவற்றசேனைகளோடு புறப்பட்டு கோட்டை வெளியில்வந்து பகைவரை எதிர்பார்த்திருக்கையில், மாளவதேசத்தரசனுகிய மதனசேனனும் சிவபிரானளித்தவாளைக் கொண்டு தனது நால்வகைச் சேனைகளோடு அம்ஸராஜனுடன் வந்தெதிர்த்து மூன்றுநாள்வரையில் ஒருவர்க்கொருவர் ஜெயாபஜெயந்தெரியாமல் போர்புரிந்து கடைசியில் மதனசேனன் வாளாயுதத்தைவிட்டு சாரதியைக்கொன்று அம்ஸராஜன் மந்திரிமுதலிய யாவரையும் மூர்ச்சையாய் விழும்படிசெய்தான்.

இவ்வாறு அரசன் மூர்ச்சையாகவே தேரிற்கட்டிய குதிரைகள் சாரதியில்லாமையால் ரணக்களமெல்லாம் சுற்றிவழிதெரியாமல் மிரண்டு விந்தியமலைக்காட்டில் போய்ச்சேர்ந்தது. பின்பு மந்திரிகள் மூர்ச்சைதெளிந்து அரசனைக்காணுமல் மனவருத்த முற்று பகைவரிடமிருந்து உயிர்தப்பி ஓடினுர்கள். மதனசேனன்கண்டு இனிநமக்கெதிரிகளாருமில்லையென்று புஷ்பபுரியை தன்வசப்படுத்திக்கொண்டு பிரகாரவர்மனையும் சிலசேனைத்தலைவர்களையும் பிடித்து புத்தி மதிகளைச்சொல்லி துரத்திவிட்டு தனது நகரம்போய்ச் சேர்ந்தான். இப்பால் ரணக்களத்தில் உயிர் தப்பினவர்களில் சிலர் விந்தியமலைச்சாரலில்சென்று வசுமதியைக்கண்டு போர்க்களத்தில் தோல்வியடைந்ததும் அரசனுக்குநேரிட்ட ஆபத்தையும் சொல்லி விசனமுற்றுர்கள். அதைக்கேட்ட வசுமதி துக்கசாகரத்தில் மூழ்கினவளாய் வருத்தமுற்றிருக்கையில் மந்திரிகள் மூவரும் அரசனைத்தேடிக் காணுமல் அவ்விடம் வந்து தாங்கள் உயிர்தப்பி வந்ததும் அரசனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டதாகவும் சொல்லி விசனப்பட்டார்கள்.

இவ்வாறு சொல்லியதை வசுமதி கேட்டு ஓவென்றலறி பிராண மூர்ச்சை யடைந்து தாதிகளால் உபசரிக்க சற்றுநேரம் பொறுத்து தெளிவுபிறந்து தன்கணவன் இறந்துபோனன் என்று தீர்மானித்துக்கொண்டு தன்னுடன் கூடவந்த வேதியர்களைப்பார்த்து ஓ-சுவாமிகளே! எங்களுக்குவந்த ஆபத்தும் அரசன்தோல்வியடைந்துங்காணுமையால் அவர்உயிரோடிருப்பதும் அல்லது பகைவரால் இறந்துவிட்டதும் அடியாளுக்குதெரிவிக்கவேண்டுமென்றுவணங்கினுள். அவ்வேதியர்கள் சோதிடஆராய்ச்சிசெய்து அம்மா இராஜபத்தினியே உன்கணவன் உயிரோடிருக்கிறார். பகைவர்கையில் அகப்படவில்லை இன்னம் இரண்டொருதினத்தில் உன்னிடம் வரப்போகிறர் மேலும் உன்வயிற்றில் உதிக்கும் புதல்வன் சக்கிரவர்த்திபட்டாபிஷேகம் பெறுவான் அவனல் முன்போல் உங்கள் ராச்சியத்தை கைகொண்டு சுகமாய் வாழ்வீர்களென்று ஆசிர்வதித்து இராஜபத்தினியை சந்தோஷிக்கச் செய்தார்கள். அப்படியும் விசனமாராதவளாய் அன்று இராத்திரி நித்திரையில்லாமல் நடுஜாமத்தில் எழுந்து தாதிகளுக்கும் காவலாளிகளுக்கும் தெரியாமல் வெளியே புறப்பட்டு சமீபத்திலிருக்கும் காட்டிற்சென்று ஒரு மரத்தின்கிளையில் தன்புடவையைக் கிழித்துக்கட்டிகழுத்தில் மாட்டிக்கொண்டு பிராணனைவிட நிச்சயித்து கடவுளைத்தொழுது புருஷனைநினைந்துபெருங்குரலிட்டு அழத்தொடங்கினுள்.

அச்சமயத்தில் போர்க்களத்திலிருந்து வழிதப்பி அக்காட்டில் வந்துசேர்ந்து ஒன்றுந் தோன்றாதவனாய் விசனமுற்றிருக்கும் அம்ஸராஜன் தனக்கு சமீபமாகயாரோ ஒரு ஸ்திரீதனியாக அழுகிற சத்தங்கேட்டு அவ்விடம்போய் பார்ப்போமென்றெண்ணி அங்குவந்து அம்மரத்தடியில் அழுகிறபெண்ணைப்பார்த்து ஓ-மாதுசிரோண்மணி இந்த நடுச்சாமத்தில் நீ தனியாய் வந்து அழவேண்டியகாரணமென்ன நீயார் உன்பெயரென்ன சொல்லுமென்றுகேட்ட அரசனுக்கு வசுமதி தன்வரலாறு முழுதும் சொல்லி தன் பிராணனை போக்கடித்துக்கொள்ள இவ்விடம் வந்தேனென்றாள். இதுகளையெல்லாங்கேட்ட அரசன் தன்மனைவியென்று தெரிந்துக்கொண்டு ஓ- வசுமதி அப்பாவியாகிய அம்ஸன் நான்தானென்று ஒருவரையொருவர் பார்த்து கட்டித்தழு

No. ௨.

வசுமதியை கண்டுதுக்கித்தல்.　　　　வாமதேவரை காணுதல்.

வி என்பிராணபதமே உனக்கிப்பேர்ப்பட்ட ஆபத்து வருவதற்குநான் காரணமாகவிருந்தேன் பூர்வம் என்னபாவம் செய்தோமோ தெரியவில்லை இல்லாவிட்டால் நாம் ராச்சியத்தை தோற்று ஒருவரையொருவர் விட்டுப்பிரியவும் நீ ஒண்டியாய் வந்து பிராணனைவிடவும் நேரிட்டதே யென்று விசனப்படுகிற புருஷனைப்பார்த்து புத்திசாலியாகிய வசுமதி தன்நாயகன் சோகத்தைதீர்க்கச்சொல்லுகிறாள். ஓ- என்பிராணதுரையே தாஙகள் விசனப்படுவதில் பயனில்லை ஆகிறகாரியம் ஆகாமற்போகுமா நாம்செய்த தருமத்தின்பலனை நாமேயனுபவிக்கவேணுமேயல்லாமல் தள்ளுகிறதற்கு நம்மாலாகுமா நீர் வேணுமென்று யுத்தம் செய்யப்போனீரா மதனசேனன் எங்கிருந்தவன் இவ்விடம் எப்படி வந்தான் அது உம்மாலேவந்ததோ தெய்வசங்கல்பமிப்படியாச்சுது தலை எழுத்தை எவர்கள் தப்பித்துக்கொண்டார்கள் பூர்வம் தேவேந்திரன் தூருவாசரால் அனேகதுன்பப்பட்டுகடைசியில் இந்திரப்பட்டம்பெற்றான். திருச்சங்கின் மைந்தன் அரிச்சந்திரன் தனதரசை விஸ்வாமித்திர முனிவருக்கு தானமளித்து தன் மனைவியையும் குமாரனையும் அந்தணர்க்கு விற்றுதானும் நீச்சனுக்கு அடிமைபுரிந்து பின்பு ஆதிபாண்டன் அனுக்கிரகத்தால் அரசாங்கத்தைக் கைப்பற்றவில்லையா இவ்வாறே நளன்-புரூருவன்-மனு-மாந்தாதா இவர்களெல்லாம் அவரவர்செய்த பூர்வபுண்ணியபலனைப்போல் இன்பதுன்பமடைந்து அரசுபுரியவில்லையா ஆகையால் நாமும் பகவானைத்தியானம் செய்து நமக்குவந்த ஆபத்தை தீர்த்துக்கொள்ளலாமென்று பலபல நீதிவசனங்களைச்சொல்லி தன்நாயகனை மனம்தேற்றி தானிருந்தகோட்டைக்குள் இருவரும்போய் மந்திரிமுதலானவருடன் அரசன் தான்வந்தவரலாற்றைச் சொல்லி சுகமுற்றிருக்கையில் மதனசேனனால் துரத்திவிட்ட பிரகாரவர்மன் விந்தியமலைச் சாரலுக்குவந்து தன் நேசனாகிய அம்ஸராஜனைக்கண்டு அவரிடம் விடைபெற்று தன்பத்தினி பிரியவதனையையும் பிள்ளைகளையு மழைத்துக் கொண்டு தன் நகரம் போகப் புறப்பட்டான்.

இப்பால் சிலநாள் விந்தியமலைச் சாரலிலுள்ள கோட்டையில் அரசனும் வசுமதியும் மூன்று மந்திரிகளுடன் வாசம்செய்துவருமநாளில் ஒருநாள் அரசன்மந்திரிகளைப்பார்த்து சொல்லு

கிறுன். ஓ மந்திரிகளே நாம் வீண்காலம் போக்குவதில் பயனில்லை இவ்விந்தியமலைக்காட்டில் சென்று தவம்செய்து முன்போல் அரசுபுரியும் மார்க்கம் தேடவேண்டுமென்றுசொல்லிப்புறப்பட்டு அம்மலைச்சாரலில் வாசம்செய்யும் தவமுனிவராகிய வாமதேவர் ஆசிரமம்சென்று அவரைக்கண்டு தீர்க்கதெண்டம் செய்து எதிர் நிற்கையில் முனிவர் கண்விழித்து நீயார் இங்கு வந்த காரணமென்ன வென்றுகேட்க அரசன் சிரமேற் கரங்குவித்து ஓ - சுவாமி கிருபாநிதியே! நாயேன் புஷ்பபுரியை ஆண்டு வந்த அம்ஸன் சிலநாளைக்குமுன் மாளவதேசத்தரசனாகிய மதனசேனன் படையெடுத்துவந்து என் ராஜ்ஜியத்தை கைப்பற்றி என்னையும் என்மனைவியையும் பாதசாரியாய் துரத்திவிட நாங்கள் இச்சாரலில் வந்து வாசஞ்செய்து காலங்கழித்து வருகிறோம் அடியேன் எக்காலம்வரையில் இத்துன்பமடைவது தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று தன்வரலாறு முழுதும்சொல்லி முறையிட்டழுத அரசனை திரிகாலமுணர்ந்த வாமதேவர் நோக்கி அம்ஸராஜனே! இன்னம் இருபதாண்டுசென்றபிறகு நீ முன்போல் அரசுபுரிவாய் அதுவரையில் இங்கு வாசஞ்செய்யவேண்டும் உனக்கு இதுமுதல் நற்காலம் வரப்போகின்றதால் உன்பத்தினியின் கர்ப்பத்தில் உதிக்கும் புதல்வன் அன்பத்தாறுதேசத்தையும் ஓர்குடையில் அரசுபுரிவான் அதுவரையில் உனக்குயாதொரு ஆபத்தும்வராது நீசுகமாய்வாழ்ந்திருப்பாயென்று ஆசீர்வதித்தார். அப்போது ஆகாயத்தில் அசரீரியாய்அம்ஸராஜனே! முனிவர் சொன்ன துண்மை அவ்வாறே நடக்கப்போகின்றது அப்பிள்ளைக்கு அமிர்தவசனனென்று நாமகரணமளிப்பாயென்று சொல்லிமறைந்தனள். இதனைக்கேட்ட அரசன் மனக்களிப்படைந்து வாமதேவரை வணங்கி விடைபெற்று தன்னிருப்பிடம் வந்து மனைவியைநோக்கி தான்போய் முனிவரைக்கண்டதும் அவர் ஆசீர்வதித்ததும் ஆகாயவாணி அசரீரிசொன்னதும் ஆதியோடந்தமாய்ச்சொல்லி சந்தோஷமுற்றிருந்தார்கள்.

இவ்வாறு சிலநாள் சென்றபின் வசுமதிக்கு பத்துமாதம் பூரணமானவுடனே நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தையின் வடிவழகைப் பார்த்தால் பூரணச் சந்திரனைப் பழிக்கப்பட்ட முகமும் சூரியனைப்

போலே காந்தியும் லட்சுமிகடாக்ஷம் பெற்றவனாயு மிருப்பதைக் கண்ட அரசன் பிரம்மானந்தங்கொண்டவனாய் தானிருக்கும் நிலைமையை மறந்து பதினாறுநாள் சென்றபின் தன்னோடுவாசமாயிருக்கும் மறைவல்லோராகிய பிராமணர்களைப்பார்த்து ஓ- சுவாமிகளே! இக்குழந்தைக்கு அசரீரி சொன்னதுபோல் நாமகரணமளித்து ஜனனஜாதகமெழுதும்படி ஆக்கியாபித்தான்.

சுக்கிரன்	சூரியன் புதன் அங்காரகன்	சந்திரன் கேது	
	இராசி சக்கரம்.		லக்கினம் குரு
சனி	ராகு		

அமிர்தவசனன்ஜனனம்.

அவ்வாறு கூறிய வேந்தனை வேதியர்கள் ஆசீர்வதித்து சோதிட ஆராய்ச்சிசெய்து ஓ- அம்ஸராஜனே உமது புண்ணிய வசத்தினாலுதித்த இந்தக்குழந்தைக்கு யாதொரு தோஷமுமில்லை, ஆதலால் இவனுக்கு சுபமுகூர்த்தத்தில் அமிர்தவசனனென்று நாமகரணமிட்டு ஆசீர்வதித்தோம். இதுமுதல் உங்களுக்கு நல்லகாலம் வரப்போகின்றதென்று சொன்னார்கள். அவ்வார்

த்தையைக் கேட்டு அரசன் களிப்புற்றிருக்கையில் தன் முதன் மந்திரியாகிய சுமந்திரனுக்கு புஷ்கரனும், இரண்டாவது மந்திரியாகிய சுமத்திரனுக்கு மித்திர சேகரனும், மூன்றாவது மந்திரியாகிய சுமதிக்கு பிரைமதியுமாகப் பிறந்தனர்கள். இதுகளைப்பார்த்து அரசன் தனதுகுமாரனுக்கும் மந்திரிகள் பிறந்துவிட்டார்களென்கிற சந்தோஷங்கொண்டு அம்மூவரையும் தன் குமாரனோடு சமமாகப்பாதுகாத்து வந்தான்.

இவ்வாறு சிலநாள்சென்றபின்பு ஓர் முனிவர் தண்டுகமண்டலதாரியாய் மிகவும் சவுந்தரியமுள்ள ஒரு குழந்தையைத் தன்கரத்திலேந்தி அரசனெதிர்வந்து ஓ- அம்ஸராஜனே! நீ பூர்வம்செய்த தவத்தாலுதித்த உனதுபுத்திரனுக்கு உதவியாயிருக்க இச்சிசுவைத் தருகிறேன், இவன் உனது குமாரனுக்கு மந்திரியாகி நன்மைபுரிவானென்று அரசன் கையில்கொடுக்க அரசன் வாங்கி முனிவரைவணங்கி ஓ சுவாமி! தங்களுக்கு இக்குழந்தை வந்த வரலாற்றை தெரியப்படுத்தவேண்டுமென்றுகேட்க முனிவர் சொல்லுகிறார். அரசனே யான் தெர்ப்பைகொய்யவனத்திற் சென்று வருகையில் என்னெதிரில் ஒரு ஸ்திரியானவள் வெகு துயரத்துடன் வருவதைக்கண்டு அவளைநோக்கி நீயார் ஒண்டியாய் துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்யும் காட்டிற்குவந்த காரணமென்னவென்றுகேட்டேன் அதற்கவள் சொன்னதாவது நான் மிதுலாநகரத்தரசனாகிய பிரகாரவர்மனுடைய தாதி சிலநாளைக்குமுன் புஷ்பபுரி அரசன் மனைவிக்கு ஸ்ரீமந்தமுகூர்த்தம் செய்வதாய் திருமுகமனுப்ப யானும் என் குமாரத்தியும் அரசனும் அவர்மனைவியும் இரண்டு குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு புஷ்பபுரிக்குச்சென்றோம். அச்சமயத்தில் மாளவதேசத்தரசனாகிய மதனசேனன்படையெடுத்துவர அம்ஸராசனுக்குத் துணையாய் எனதரசரும் எதிர்த்து போர்புரிந்து கடைசியாய் எனதரசனைச்சிறைப்படுத்தி விடுதலைசெய்துவிட அவர்நாங்களிருந்தவிந்தியமலைச்சாரலுக்குவந்து அரசனிடம் உத்திரவுபெற்று எங்களை அழைத்துக்கொண்டு மிதுலாநகரத்திற்குப்போகும் வழியில் சிலதிருடர்கள் வழிமறித்து எனதரசனையும் அரசியையும் அடித்து ஆபரணங்களை கொள்ளையிட, நானும் எனதுகுமாரத்தியும் இரண்டு சிசுக்களை எடுத்துக்கொண்டு வழிதப்பி காட்டி

ற்சென்று அலையும்போது ஒருவேங்கை மகாஉக்கிரத்துடன் பர யந்துவருவதை நாங்கள் கண்டுபயந்து அருகில் செத்துக்கிடந்த மாட்டின்பேரில் சிசுவைநழுகவிட்டு பிரக்ஞைதப்பிக்கிடந்தோம் சற்றுநேரம் சென்றபிறகு யான்விழித்துப்பார்க்க சிசுக்களையும் என்குமாரத்தியும் காணுமல் இறந்துகிடக்கும் பசுமாத்திரம் இ ருக்கக்கண்டு அதுமுதலிதுவரையில் இவ்வனமெல்லாந்தேடி எ ங்குமகப்படாமல் வரும்வழியில் தங்களைக்கண்டேனென்றுசொ ல்லிப்போனுள். நான் உன் சினேகிதன் பிள்ளையென்றறிந்துதே டிவருகையில் சிலவேடுவர் இக்குழந்தையைச்சூழ்ந்துக் கொண் டு வீரமாகாளிக்கு பலியிடுவோமென்றுபேசிக்கொண்டதை நா னறிந்து அவர்களைசபித்துவிட்டு சிசுவை உன்னிடமளித்தேன் நீ இதைகாப்பாற்றிக் கொள்ளென்று ஆசீர்வதித்தேகினுர்.

இவ்வாறு முனிவர் கூறிச்சென்றவுடன் அரசன் மனைவி யையழைத்து பிள்ளையை கையிற்கொடுத்து அதன் வரலாறு முழுதும்சொல்லி சந்தோஷமுற்றிருந்தான். இப்படிக்கிருக்கை யில் ஒருநாள் அச்சாரலுக் கருகாமையிலுள்ள ஓர் தடாகத்தில் அரசன் ஸ்நானஞ்செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டுவரு ம்வழியில் சிலவேடுவர்களும் ஒருவேடுவஸ்திரியும் கையில் மிக வும் அழகுள்ள ஒருசிசுவையெடுத்துக்கொண்டுவர அரசன்கண் டு ஆச்சரியமுற்று இது அரசன் குழந்தையைப்போ லிருக்கிற தென்று சந்தேகப்பட்டு அவர்களை அழைத்து அடா வேடுவர் களேஇது யாருடையகுழந்தை எவ்விதம் உங்களுக்குக்கிடைத் தது இதின் உண்மையை தெரிவிப்பீர்களென்று கேட்க வேடு வர் பயந்து சொல்லுகிறுர் ஓ சுவாமி! இப்பிள்ளை மிதுலாநகரத் தரசன்பிள்ளை என்று ஒரு ஸ்திரிகையிலெடுத்துக்கொண்டு இக் காட்டில் அலைந்துவருகையில் நாங்கள்கண்டு இக்குழந்தையாரு டையது நீ எங்கேபோகின்றுய் சொல்லுமென்றுகேட்க அவள் சொன்னதாவது அப்பா வேடுவர்களே நான் மிதுலாநகரத்திலி ருப்பள் இக்குழந்தையை நீங்கள் வளர்த்துக்கொள்ளுங்களென் று எங்களிடம்கொடுத்துவிட்டு அவ்வூருக்குப்போகும் மார்க்கம் சென்றனள் அதுமுதலிதுவரையில் நாங்கள் காப்பாற்றி இப்பிள் ளைக்கு அஸ்வசேனன் என்றுபேரிட்டுவளர்த்து வருகிறோமென் றுர்கள் அரசன்கேட்டு அடாவேடுவர்களே என்நேசனுடையகு

மூந்தைக்கிவ்வாறு ஆபத்து நேரிட்டதாவென்று துக்கிப்பதை அவ்வேடுவர்பார்த்துமனமிறங்கி ஓசுவாமி தங்கள் நேசனைப்போலவே இப்பிள்ளையைக்காப்பாற்றுமென்று அரசனிடம் கொடுத்துவிடைபெற்று சென்றனர். அரசன் அப்பிள்ளையையெடுத்து தன்னிருப்பிடம்வந்து மனைவியைநோக்கி இப்பிள்ளையின் வரலாற்றைச்சொல்லி அவளிடம்கொடுத்து காப்பாற்றும்படி சொல்ல மனைவி சந்தோஷமுற்று தன் குமாரனைப்போல் பாதுகாத்து வந்தாள்,

இப்பால் சிலநாள் சென்றபின்பு ஒரு முனிவர் ஒரு குழந்தையை எடுத்துவந்து ஓ-அம்ஸராஜனே என்குருவாகிய வாமதேவர் உன்னிடம் கொடுத்து இதனைக்காப்பாற்றிக் கொள்ளுமபடி சொன்னரென்றுசொல்லி அரசனிடம்கொடுக்க அரசன் வணங்கி ஓ சுவாமி! இப்பிள்ளை அவருக்கெவ்விதம் கிடைத்தது இதின்வரலாற்றை தெரிவிப்பீரென்றுகேட்க முனிவர் வேந்தனே நான் தீர்த்தயாத்திரைசெய்து வருகையில் ஓர் கிழவி இந்தச்சிசுவை யெடுத்துக்கொண்டு யென்னெதிர்வருவதைப்பார்த்து அவளைநோக்கி ஓ-அம்மா இக்குழந்தை உனக்கேது எவ்விடம் கொண்டுபோகிறாய் என்று கேட்டேன் அதற்கவள் சொன்னதாவது ஓ சுவாமி நான்காளையவனத்தீவிலிருக்கும் காலகுப்தன் என்னும் ஓர் வர்த்தகன்மகளுடையதாதி அவள்பேர் சவுரியவதி அவளிடம்நான் ஏவல்செய்துவருகையில் ஒருநாள்புஷ்பபுரி அரசன் மந்திரியாகிய பத்மோபவன் குமாரன் இரத்தினேபவனென்னும் ஓர் வர்த்தகன் எங்கள்தேசத்திற்குவந்து என்னெஜமான் மகளாகிய சவுரியவதியை மணம்புரிந்து சிலநாளவ்விடமிருக்கையில் அவள் கர்ப்பவதியானள் அதையறிந்து அவள்கணவன்தன் தேசம்போகப் பிரயாணப்பட்டு மாமனரிடம் விடைபெற்று சவுரியவதியையும் என்னையும் அழைத்துக்கொண்டு கப்பலேறிவருகையில் கடலில் பெருங்காற்றடித்து திசைதெரியாமலோடுகையில் கப்பலுடைந்துபோய்விட்டது அப்போதுநானும் சவுரியவதியும் தெய்வசகாயத்தினல் ஒருபலகைத்துண்டை கைப்பற்றி மகாகஷ்டத்துடன் கரைசேர்ந்தோம். இரத்தினேபவன் என்னமாய்ப்போனுனே தெரியவில்லை நாங்களவ்விடமிருக்கும்போது சவுரியவதி கர்ப்பவேதனைப்பட்டு ஒரு விருட்சத்தின்கீழ் இப்

புதல்வனைப்பெற்று மூர்ச்சித்தனள் நானவளை அவ்விடமிருத்தி அவளுக்கு வேண்டிய ஆகாரவஸ்துதேடவேண்டுமென்று இச்சிசுவையெடுத்துவந்தேனென்று என்னிடம்சொல்லிக்கொண்டிருக்கையில் எங்களெதிரில் ஒருகாட்டானை கர்ச்சித்து எங்களைத் துரத்தி வருவதைக்கண்டு நான் மாத்திரம் ஒரு மரப்பொந்தில் ஒளித்துக்கொண்டேன் அக்கிழவி இக்குழந்தையை எறிந்துவிட்டு தலைவிரிகோலமாய் ஓடிமறைந்து விட்டனள் சற்றுநேரம் சென்று யானைபோய்விடவே நான் பொந்தினின்று வெளிவந்து இக்குழந்தையை யெடுத்துக்கொண்டு அக்கிழவியை அவ்வனந்திரமெல்லாந்தேடி காணாமையால் வாமதேவர் ஆசிரமம்சென்று அவரிடம் தெரிவித்தேன் அவர் இக்குழந்தையை உன்னிடம் கொண்டுபோய்விட்டு இதற்கு இரத்தினவதனென்றுநாமகரணமிடும்படி ஆக்கியாபித்தாரென்று சொல்லிவிடைபெற்று தமதிருப்பிடம் சென்றனர்.

அரசன் தனதுமந்திரியாகிய பத்மோபவனுடையகுமாரன் இரத்தினோபவன்பிள்ளை இவனென்று களிப்புற்று மனைவியையழைத்து அதன்வரலாறு முழுதும்சொல்லி தன் குமாரனைப் போல் பாதுகாத்துவந்தனர். இவ்வாறு சிலநாள்சென்றபின் ஓர் நாள் அரசனும் வசுமதியும் இரவில் சயனித்திருக்கையில் வசுமதியின்கினவில் ஒரு யட்சஸ்திரி ஒருகுழந்தையையெடுத்துவந்து தன்னருகில் வளர்த்தி இராஜபத்தினியே இக்குழந்தை காமபாலன் குமாரன் இவன்பேர் வியர்த்தபாலன் நான் அந்தரமார்க்கமாய் வருகையில் மயானத்தில் இச்சிசு அழுகுரல் கேட்டு எடுத்துவந்தேன் இதனைகாப்பாற்றினல் உன் குமாரனுக்கு உதவியாயிருப்பானென்று சொல்லியதாக கினவுகண்டு விழித்துப் பார்த்து உண்மையாகவே குழந்தையைக்கண்டு தன்நாயகனை எழுப்பிக் காண்பித்து நடந்தவரலாற்றைச் சொல்லவே அரசன் ஆச்சரியமுற்று பக்தவற்சலனுகிய பகவான் அனுக்கிரகித்தாரென்று இருவரும் சந்துஷ்டியடைந்துதன்குமாரனைப்போலவே அக்குழந்தையைபாதுகாத்து வந்தனர். இப்பால் ஒருமாதம் சென்றபின் ஓர் சன்னியாசி ஒரு சிசுவைக்கொண்டுவந்து ஓ- அரசனே நான் யாத்திரைசெய்து வருகையில் எனக்கு தாகவிடாய் மேலிட்டு கோதாவரிநதியை நாடிச்சென்றேன் அன்னதிக்கரையில்

ஒரு ஸ்திரியானவள் இக்குழந்தையை வைத்துக்கொண்டு அழுவதைப்பார்த்து அருகிற்சென்று ஓ அம்மணி! நீயார் ஏன் இங்குவந்து அழுகிறுயென்று கேட்டேன் அதற்கந்த ஸ்திரியானவள் ஐயா நான் அம்ஸராஜன் மந்திரியாகிய சீதவர்மனுடைய குமாரன் சத்தியவர்மன் மனைவியின்தாதி அவர் சன்னியாசியாகி எங்கள் தேசம்வந்து எங்கள் எஜமானரான புரோகிதரிட மூத்த குமாரத்தியாகிய காளியை மணம்புரிந்து அவளுக்கு புத்திர பாக்கிய மில்லாததினுல் அவர் இளைய குமாரத்தியாகிய கௌரியை மணம்புரிந்து வாழ்ந்திருக்கையில் இக்குழந்தையைப் பெற்றனள் அதுமுதல் சத்தியவர்மன் இளைய மனைவியின் பேரிலும் இக்குழந்தையின்பேரிலும் ஆவலாயிருப்பதைமூத்தவளாகியகாளி பொருமையடைந்து என்னையும் இக்குழந்தையையும் வேடிக்கை காண்பிப்பதைப்போ லழைத்துவந்து இந்நதியில்தள்ளிவிட்டாள் நான்விழுந்து இப்பிள்ளையை ஒருகையால் பத்திரமாய் பிடித்து நீந்திவருகையில் ஒரு மரத்தின்வேர் அகப்பட்டு அதைப்பிடித்து கரையேறினவுடன் எனக்கு மூக்கிலும் வாயிலும் உதிரம்வந்து மரணவஸ்தைபடும் சமயத்தில் நீர் வந்தீரென்று என்னிடம் குழந்தையைகொடுத்து பிராணனைவிட்டாள் நானவளை அடக்கம் செய்துவிட்டு பிரயாணப்பட்டு வருகையில் ஒருமடத்தில் தங்கி நித்திரைசெய்கையில் ஒரு பிராமணன் என்சொர்ப்பனத்தில் வந்து அப்பா நீ இப்பிள்ளையை யெடுத்துப்போய் விந்தியமலைச்சாரலில் எட்டு பிள்ளைகளுடன்வாசம்செய்யும் அம்ஸராஜனிடம் கொடுத்து இவனுக்கு ஜெயசிம்மனென்று பேரிட்டு வளர்க்கும்படிசொல்லி நீ என் ஆலயத்திற்கு வரவேண்டியதென்றுசொல்லிப்போனதாய் கினவுகண்டு விழித்துப்பார்த்தேன் பொழுதுவிடிந்தது இப்பிள்ளையை எடுத்துக்கொண்டு சில நாள் நடந்து உன்னிடம் வந்தேனென்று சொல்லிகுழந்தையை விட்டுப் போய்விட்டார்.

அரசன் இதுவும் நமது புண்ணியவசமென்று தன்மனைவியை யழைத்து இப்பிள்ளையின் சவிஸ்தாரத்தைச்சொல்லி நமது குமாரனுக்கு எட்டுதோழன்மார் கிடைத்தார்களென்கிற மனக்களிப்போடு அவ்வொன்பது பிள்ளைகளையும் பாதுகாத்துவந்தனர் இவ்விதமாக சிலநாள்கழிந்தபின் ஐந்தாம்வயதில் வித்தியா

ரம்பஞ்செய்து பதினறுவயதுக்குள் ஒருவருக்கொருவர் தோல்வியடையாமல் நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நான்குகலைக்கியானம் மனுவிக்கியானங்களையுணர்ந்து ஆனை-குதிரை-வில்- அம்பு- முதலிய ஆயுதங்களில் தேர்ச்சியடைந்தவர்களாய் அவ்வொன்பதுபேரு மிணைபிரியாமல் வாழ்ந்துவருநாளில் ஒரு நாள் அச்சாரலில் வாசஞ்செய்யும் வாமதேவமுனிவர் தனது சிஷ்யவர்க்கத்துடன் அம்ஸராஜனிடம்வந்தார் அதுகண்டு அரசன் அவருக்கு தர்ப்பாசனமளித்து வீற்றிருக்கச்செய்து தானும் தன்மனைவியும் ஒன்பதுகுமாரர்களும் வலம்வந்து சிரமேற்கரங்குவித்து ஓ சுவாமி! தேவரீர் நாயேன்பொருட்டு இங்குவந்தகாரணம் யாதோதெரிவிக்க வேண்டுமென்று வணங்கிய அரசனை வாமதேவர்பார்த்து ஓ அம்ஸனே! உன்பிள்ளைகள் யவ்வனதிசையடைந்தார்கள் சிலகாலம் தேசசஞ்சாரம் செய்து வரவேண்டும் ஆதலால் யாத்திரைக்கு நாள்பார்த்துவந்தேன் இவர்களையனுப்பிவிடுமென்று முனிவர்சொல்ல அரசன் துக்கசாகரத்திலழுந்தினவனாய் புத்திரசோகத்தினால்கட்டுண்டு ஓசுவாமிகிருபாநிதியே அடியேன் நெடுநாள் சந்தானமில்லாமல் விரதமனுஷ்டித்து பகவத் சங்கற்பத்தினால் உண்டான இப்பிள்ளையை விட்டுப்பிரியவும் தாங்கள் திருவாய் மலர்ந்தருளியதை தடுத்துச்சொல்லவும் மனமில்லாதவனாய் வருந்துகின்றேனென்றுசொல்ல முனிவர் அரசனே உன்குமாரனுக்கு எட்டுதோழர்களும் மந்திரிபோல் ஒருவரை ஒருவர்பிரியாமல் பூ பிரதட்சணம்செய்து க்ஷேமத்துடன் சக்கிரவர்த்திபட்டம் பெற்றுவருவார்கள் இன்றேநாள் நிச்சயித்திருக்கின்றேன் எனது வாக்கியத்தைத்தள்ளாமல் அனுப்பிவிடுமென்று சிஷ்யவர்க்கத்துடன் தமதிருப்பிடம்சென்றார்.

இதனைக்கேட்ட அரசன் மனக்களிப்படைந்து தன் குமாரனாகிய அமிர்தவசனனையும் அவன் தோழர்களாகிய புஷ்கரன்-மித்திரசேனன்- வியர்த்தபாலன்- இரத்தினவதனன்- பிரைமதி-ஜெயசிம்மன் - அனந்தவர்மன் - அஸ்வசேனன்- ஆகிய ஒன்பது பேரையும் அருகிலழைத்து அவரவர்களுக்குவேண்டிய ஆடையாபரணங்கள் முதலிய யாவும் கொடுத்து அப்பா குமாரர்களே நீங்கள் எட்டுபேரும் அமிர்தவசனனை விட்டுப் பிரியாமல் கண்ணிமை காப்பதுபோல்காத்து தேசசஞ்சாரஞ்செய்து சீக்கிரமா

கவர்ந்து என்சோகத்தை தீர்த்துவிடுவீர்களென்று வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவிடைகொடுக்க அவ்வொன்பதுபேரும் அரசன் உத்திரவுபெற்று தாயிடம் வந்துவணங்க தாயாரெடுத்து உச்சிமுகந்து முத்தமளித்து அப்பா குமாரர்களே இதுகாலபரியந்தம் என்னைவிட்டுப்பிரியாதிருந்த நீங்கள் இப்போதுபிரிந்துபோவதால் உங்களைக்காணமல் என்னுயிர் தரியாது நீங்கள் சிக்கிரமாகவந்து எனக்குயிரளித்து காப்பாற்றுவீரென்று ஆசீர்வதித்தாள். அவர்களும மந்திரிமுதலியயாவரிடத்திலும் விடைபெற்று கோட்டையைவிட்டு வெளியேபுறப்பட்டு அச்சாரலிலுள்ள ஓர் காட்டில்வந்து சேர்ந்து அன்றிரவு அவ்விடமிருந்து சூரியோதயமானவுடன் ஒன்பதுபேரும் பிரயாணப்பட்டு காடு- மலை- வனம்- வனாந்திரம் முதலிய இடங்களெல்லாங்கடந்து ஏழுநாள் பிரயாணம்செய்து எட்டாநாள் மதங்கமுனி ஆசிரம்ம் வந்து அன்றிரவு அவ்விடம்தங்கினார்கள்.

அப்போது மதங்கமுனிவர் சிஷர்களில் ஒருவராகிய தமனரென்பவர் இவ்வொன்பது குமாரர்களைப்பார்த்து அப்பா அரசகுமாரர்களே நீங்கள் யார் எங்கிருந்து வருகின்றவர்களென்று கேட்க அவர்களுள் அமிர்தவசனன் வணங்கி ஓ சுவாமிநாங்கள் விந்தியமலைச்சாரலில் வாசஞ்செய்யும் அம்ஸராஜன் குமாரர்கள் தேசசஞ்சாரம் செய்துவருவதாய் தீர்மானித்து வந்தோமென்று சொன்னன். அதைக்கேட்டு தமனர் இவன்திடதைரியபராக்கிரமத்தைக்கண்டு இவன் சக்கிரவர்த்தி பட்டாபிஷேகம் பெறுவானென்று யோசித்து அமிர்தவசனனை தனியா யழைத்து அரசகுமாரனே நீ மாத்திரம் இன்றிரவு தனித்து என்னுடன் வருவையாகில் உனக்கு ஓர் கணையாழியைத் தருகிறேன் அதை உன்விரலி லணிந்துக்கொண்டால் உனக்குவேண்டிய காரியங்களெல்லாம் சித்தியாகுமென்று சொன்னர் அமிர்தவசனன் தமனர் சொன்னதற்கிசைந்து அன்றிரவில் நடுச்சாமத்தில் தன்தோழர்களுக்குத் தெரியாமல் அவருடன்சென்றான் தமனர் அமிர்தவசனனை யழைத்துக்கொண்டு மூன்றுயோசனைதூரம் சென்று அவ்விடம் ஒருமலையடிவாரத்திலுள்ள சுரங்கத்தைக்கண்டு அரசகுமாரனை வெளியேநிறுத்தி தான் உள்ளேசென்று பொக்கிஷத்திலிருந்த கணையாழியை எடுத்துவந்து அரசகுமாரன் கையிற்

№. 5.

வாமதேவர் அரசகுமாரர்களை அனுப்புதல்.



தமனர் அமிர்தவசகனை அழைத்துபோவது.

கொடுத்து தான்சுரங்கத்தின்வழியேபோய்விட்டார். அரசகுமாரன் தமனர் வருவாரென்று நெடுநேரம் வழிபார்த்திருந்தும், அவர் வராமையால் மனவருத்தமுற்று தன்தோழர்களிடம் போகலாமென்று திரும்பிவருகையில், தான்வந்த வழியைவிட்டுவேறு மார்க்கமாய் அக்காட்டில் வெகுதூரம்போய்விட்டான்.

இங்ஙனம் நித்திரைசெய்திருந்த தோழர்கள் அருணோதயமானவுடனெழுந்து தமதரசனைக்காணாமல், திகிலடைந்து தாயிழந்த கன்றைப்போல் கதறியழுது அவ்வனங்களெல்லாம் சுற்றி அரசனைத்தேடிப்பார்த்து மனம்வருந்தி, எட்டுகுமாரர்களும் காடு-மலை-வனம்-வனாந்திரமெல்லாம் தேடித்திரிந்து கடைசியில் தண்டகாரண்ணியம்வந்துசேர்ந்து, அவ்விடமிருக்கும் முனிவர்கள் ஆசிரமங்களெல்லாம் தேடிவருகையில் கலைக்கோட்டு முனிவரைக்கண்டுநமஸ்கரித்து, ஓ-சுவாமிகுருநாதா! நாங்கள்தேசசஞ்சாரம்செய்யக்கருதி எங்கள் அரசனுடன்புறப்பட்டு வருகையில், வழியில் மதங்கர் ஆசிரமத்தில் தங்கினோம்விடிந்து பார்க்கையில் எங்கள் அரசனைக்காணாமல் மனம்வருந்தி, அதுமுதலிதுவரையில் நாங்கள் ஆகாரம் நித்திரை யின்றி தேடியகப்படாமல் இப்போது தங்கள் சந்நிதானம் வந்துசேர்ந்தோம்; தேவரீர்! கிருபாநோக்கஞ்செய்து அரசன்உயிரோடிருப்பதும், எவ்விடம்போனதும், எக்காலம் எங்களிடம் வருவதும் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வணங்கினார்கள். அதைக்கேட்ட முனிவர் ஞானதிருஷ்டியாலறிந்து அப்பா குமாரர்களே! உங்களரசனுக்கு சனீஸ்வரன் திசைவந்தமையால் அவன் மூன்றாண்டு வரையில் கஷ்டதிசையடைந்து பிறகு ஒரு நகரம்சேர்ந்து அரசன் குமாரத்தியை மணஞ்செய்யப்போகிறான். அக்காலத்தில் உங்களைக் காணுவான், அதுவரையில் எவ்விடம்தேடினாலும் உங்கள் திருஷ்டிக்ககப்படான், ஆதலால் நீங்கள் அலைந்துதிரிவதில்பயனில்லை ஒவ்வொருவரும் நாட்டையடைந்து ஜீவித்திருப்பதுநலமென்றுரைத்தார். இதைக்கேட்டு எட்டுகுமாரர்களும் முனிவரை வணங்கி விடைபெற்று அவ்விடம் விட்டுப்புறப்பட்டு காடு மலை வனம்வனாந்திரமெல்லாம் கடந்து ஓர் தேசத்திற்குச்சமீபமாகவரும்போது, அவ்வெட்டுகுமாரரும்தங்களுக்குள் ஒரு பிரதிக்கினைசெய்துகொண்டார்கள். அதென்னவெனில் ஒருவரை யொருவர் பார்

த்து சகோதரர்களே! நாம் எட்டுபேரும் தனித்தனியேசென்று சஞ்சாரம் செய்து நம்மரசனைக்காணும் வரையில் ஒருவரையொருவர் சந்திக்கக் கூடாதென்று நிச்சயித்துக் கொண்டு, தமக்கிச்சையான வழியைநாடிப்போனார்கள்.

பின்பு காட்டில் வழிதெரியாமல் வெகுதூரம் சென்ற அமிர்தவசனன் ஒன்றுந்தோன்றாமல் சுற்றிச்சுற்றி வேசாரியாய் தாகவிடாய்திகரித்து, அங்குள்ள சோலையை யடைந்து நீரருந்திமரத்தினிழலில் உட்கார்ந்து யோசிக்கத்தொடங்கினன். அதெப்படியெனில், நான் ஒண்டியாய் தோழரைக்காணமல் தமனருடன்வந்துவிட்டேனே என்னைக்காணமல்எவ்விடங்களில்போய் தேடுகின்றார்களோ, அவர்களிருந்தவிடத்திற்குப்போவோமென்றாலிக்காட்டில் வழிதெரியவில்லையே, அல்லது மனிதசஞ்சாரமிருந்தாலும் மதங்கமுனிவர் ஆசிரமம் எவ்விடமிருப்பதென்றுகேட்கலாம், இதுவுமல்லாமல் நாம் எத்தனைநாள் இக்காட்டில் தேடினபோதிலும் பயனில்லை என்றுகருதி தனக்கிச்சையான வழியை நாடிப்போவோமென்றெழுந்துநடந்தான். இப்படியாய் மலைகள் குகைகள் ஆறுகள் முதலிய இடங்களெல்லாம் பகலில் நடக்கிறதும் இரவில் சயனித்திருக்கிறதும், பசிதாகமேலிட்டால் காய் கனிவர்க்கங்களருந்தி இவ்விதமாய் ஒருமாதப் பிரயாணம் நடந்தும் முடிவில் சவுனகமுனி ஆசிரமம் சேர்ந்து, தனக்குள்ள ஆயாசந்தீர்ந்து முனிவரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து ஓ எந்தையே! அடியேன் புஷ்பபுரியையாண்ட அம்ஸன்சுதன், நானும் என்தோழர்களும்யாத்திரைசெய்யக்கருதி மதங்கர் ஆசிரமம்வந்து என்தோழரைப்பிரிந்துவிட்டேன்: அன்றுமுதலிதுவரையிலும் அவர்களைத்தேடி வழிதெரியாமலலைந்து தங்கள் சந்நிதானம் வந்தடைந்தேன், தேவரீர்! கிருபாநோக்கஞ் செய்து அடியேன் அவர்களைக்காண அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றுகேட்ட அமிர்தவசனனை சவுனகர் பார்த்து அரசகுமாரனே! நீ அவர்களைத்தேடுவதில் பயனில்லை அவர்கள்நெடுந்தூரம்போய்விட்டார்கள் இப்போது உனக்கும் சூரியகுமாரன் திசைவந்திருப்பதால் இன்னம் மூன்றாண்டுவரையில் அவர்களைக் காணமாட்டாய், நீ இக்காட்டில் திரிந்துகஷ்டப்படாமல் நீர்வளம் நிலவளமிகுந்து, அமராபதியும் அளகாபுரியும் அதற்குச் சமானமில்

லாமல் சோலைகள் சூழ்ந்து சிந்துமாநதிக் கிருப்பிடமாகிய அவந்தியாபுரியைச்சேர்ந்துகாலங்கழித்திருந்தாயானல், அவ்விடத்தில் உனக்கு சுபம்நடக்கும் அக்காலத்தில் உன்தோழனைக்காணுவாயென்று சவுனகமுனிவர்சொல்ல, அமிர்தவசனன்முனிவரை வணங்கி விடைபெற்று அவந்தியாபுரியை நோக்கிநடந்தான்.

இவ்வாருக அமிர்தவசனன் காடு- மலை- வனம் - வனந்திரமெல்லாம் கடந்து ஓர்பூங்காவனமடைந்து ஆயாசந்தீர்ந்து, அவந்திதேசத்தைச்சேர்ந்து, அத்தேசத்தின் அலங்காரத்தைக்கண்டு முனிவர் சொன்னதுபோல் மகாசிறப்புற்றிருக்கிறதென்று ஆச்சரியமுற்று, அதனுள் பிரவேசித்து மாடமாளிகை முதலிய அரண்மனைகளெல்லாம் பார்த்துவருகையில் அத்தேசத்தில் வாசஞ்செய்யும் தேவசுந்தரனென்பவன் தனக்கெதிர்வர, அமிர்தவசனன் அவனைப்பார்த்து ஐயா! நான்புஷ்பபுரியரசன் குமாரன், என்தோழர்களும் நானும் யாத்திரைசெய்துவருகையில் அவர்களைப்பிரிந்துபோய்விட்டேன். அதுமுதலி துவரையில் அவர்களைத்தேடிக்காணுமல் இந்நகரம்வந்தேன் உனக்கேதாகிலும் அவர்கள் வரலாறுதெரிந்தால் சொல்லவேண்டுமென்று தன் சவிஸ்தார்முழுதும் அவனுடன் சொன்னன். அதைக்கேட்ட தேவசுந்தரன் யோசித்து அரசகுமாரனே! என்னுடன் வருவீராகில் அதற்குவேண்டிய உதவியென்னுல் செய்யக்கூடுமென்று சொல்ல அமிர்தவசனன் அக்கருத்துக்கிசைந்து அவனுடன் சென்றுன். தேவசுந்தரன் தனதிருப்பிடமழைத்துப்போய் போஜனமளித்து வேண்டியதெல்லாங்கொடுத்து அமிர்தவசனனேடு சிலநாள் நேசித்து வருகையில், ஒருநாள் அந்நகரத்தில் கண்ணுதல் மூர்த்தி காமதகனம்செய்த வசந்தகாலத்திருவிழா வந்தது அக்காலத்தில் நகரமுழுதுமலங்காரஞ்செய்து அரசனுடைய பூங்காவனமுழுதும் பிரஜைகள் சூழ்ந்து வேடிக்கை ஆட்டங்களும் விநோத பாட்டுகளும் பாடிக்கொண்டிருக்கையில், அமிர்தவசனனும் நேசனுகிய தேவசுந்தரனும் அவ்வேடிக்கைபார்க்க பூங்காவையடைந்து இருவரும் கண்ணேட்டமிட்டு வருகையில், அங்கங்கே இருக்கிற விநோத விசித்திரங்களை அமிர்தவசனன் பார்த்து ஆச்சரியமுற்று தன்நேசனுடன் சொல்லிக்கொண்டு வருகையில், ஓர் விருட்சத்தின்கீழ் அந்நகர் அரசன் குமாரத்தி

யாகிய அவந்திசுந்தரியும் அவள் தோழியாகிய பாலசந்திரிகை யும் இன்னுமனேக ஸ்திரீகள் அவளைச் சூழ்ந்திருப்பதைக் கண்ட அமிர்தவசனன் நேசனைநோக்கி தேவசுந்தரா! இதோ நம்மெதிரில் அவ்விருட்சத்தின்கீழ் கூட்டமாயிருக்கும் ஸ்திரீ களில் நடுநாயகம்போலிருக்கும் மாதுசிரோன்மணியைப் பார் த்தாயா! அவள் யார்? அவளைச் சூழ்ந்திருக்கும் ஸ்திரீகள் யாவர்? இதை யெனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்க, தேவசுந்தரன் சொல்லுகிறான். அரசகுமாரனே! நீர் கேட்ட ஸ்திரீரத்தினம் இந்நகர் அரசன்குமாரத்தி இவள்தான் அவந்தி சுந்தரி அவளுக் கருகிலிருக்கும் தோழி என்மனைவி பாலசந்தி ரிகை, மற்ற ஸ்திரீகளெல்லாம் அவளுக்கு ஏவல் செய்கிறவர் கள் என்று சொன்னான். இதனைக்கேட்ட அரசகுமாரன் ஆனந் தமுற்று கும்பிடப்போன தெய்வம் எதிர்வந்தாப்போல் அவந் திசுந்தரியை கண்ணிமை கொட்டாமற் பார்த்துக் கொண்டிருக் கையில், அவளும் அரசகுமாரன்பேரில் திருஷ்டியை செலுத்தி விரகமுற்றவளாய் அரசகுமாரனைப்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அமிர்தவசனன் விரகதாபம்.

இவ்வாறாக ஆமைகிணற்றிலும் அணில் கொம்பிலுமிருப்ப தைப்போல் ஒருவரை யொருவர்பார்த்திருக்கையில், அரசகுமா ரன் அனங்கன் வாதைக்குட்பட்டவனாய் தன்னால்சகிக்கக்கூடா மல் நேசனைநோக்கி தேவசுந்தரா! அம்மாதின் வடிவழகைப்பார் த்தாயா? நான் என்னென்று சொல்லப்போகின்றேன் இதுவரை யில் இவ்வழகமைந்த அணங்கைக் கண்டதில்லையே, அல்லது, என்மதியைமயக்க உற்பவித்தாளோ! இப்பூவுலகில் அழகிற்சிறந் தமாது இவள் ஒருத்தியென்றே சொல்லவேண்டும். தேவசுந்த ரா! மாயன் இவ்வழகியைக்கண்டு இச்சிப்பானென் றெண்ணி மலரிற்பிறந்த மாது அவன் மார்பிற் குடிகொண்டனள். வாணி இப்பூவையின் வடிவழகைக்கண்டு நாணி மலரோனுடைய நா வில் குடியிருந்தனள். தத்தைமொழியாள் ஜெனிப்பதையறிந்த ல்லவோ தரைமாது பூமிக்குளொளித்துக்கொண்டனள், யென் று பலவாறுதுதி காமமீறி நஞ்சுண்ட கெண்டைபோல் தியங்கி மூர்ச்சித்து சற்றுதெளிந்து பின்னுஞ் சொல்லுகிறான், தேவ சுந்தரா! இவளழகை நன்றாய் பார்த்தாயா சிவந்த தளிர்போன்ற

அவந்திசுந்தரியை அமிர்தவசீனன் கண்டு மோகித்தல்.

பாதமும், பவழத்தைப்போல் கைவிரல்களும், உடுக்கைபோ லி டையும், இளம்வாழைத்தண்டுபோல் துடையும், எறும்புதாரை போல் ரோமரேகையும், சங்கைப்போல் கழுத்தும், தங்கக்கலச ம்போல் ஸ்தனங்களும், காந்தட்பூவைப்போல் கைகளும், செந் தாமரை இதழ்களைப்போல் கண்களும், சிங்காணி வில்லுபோல் புருவமும், வள்ளைத்தண்டுபோல் காதும், மூன்றாம் பிறைச்சந்தி ரனைப்போல் நெற்றியும், வண்டோடுபோல் தலைமயிரும், குமிழ் போல்நாசியும், கோவைப்பழம்போன்ற அதரமும், நட்சத்திரங் கள்போல் பற்களும், அபரஞ்சிபோன்றமேனியும், அமைந்த இ வள் நடையினால் அன்னக்கூட்டங்களை ஜெயிப்பாள், வார்த்தை களினால் குயில்கூட்டங்களை ஜெயிப்பாள், இனிஎன்னுடன் நேசி த்து மன்மதனை ஜெயிக்கப்போகிறாளென்று பலபல்விதமாய்பே சி மனம்நேசி, தேவசுந்தரா! இவ்வழகியை நான் எவ்விதம் ம ணம்புரிவேன்யென்று மனம்கூசி, அவளையே பார்த்துநின்றான்.

அவந்திசுந்தரி விரகதாபம்.

இவ்வரசகுமாரனையே பார்த்துக்கொண்டிருந்த அவந் திசுந்தரி பஞ்சபாணங்களினால் நொந்து தன்தோழியைநோக்கி பாலசந்திரிகா! இதோ நம்மெதிரில் சித்திரப்பதுமைபோல் நிற் கும் இப்பூவரசன் யாரோ! இவனைவிட்டு அழகுபிரிந்திருக்கும் நகரமெதுவோ! இவனைப்பெற்ற தாய்தந்தையர் எவ்விதமானத வம் செய்தார்களோ! தெரியவில்லையே பாலசந்திரிகா! இவ்வழக னைப்பார்த்தால் மன்மதன்தான் இவ்வடிவாய் வந்தானே! மதனா கில் கையில் செங்கரும்பிருக்கவேண்டுமே? அப்படிக்கில்லை, மா யனோ, மாயனாகில்மேனிபச்சைநிறமா யிருக்கவேண்டுமே? அ ப்படிக்கில்லையே, ஒருவேளை சூரனைவென்ற தீரனோ தீரனாகில், கையில் வேலேத்தாங்கவேண்டுமே? அப்படிக் கல்ல, செந்தாம ரைபோன்ற கண்ணிமை கொட்டுவதால் பூவரசன் புத்திரனாகத் தான் இருக்கலாமென்றுஆயாசமுற்று, சற்றுதெளிந்துபாலசந்தி ரிகா! இவனழகைப்பார்த்தாயா தீர்க்கமனமும், சிறித்தமுகமும், மாவேந்தர் நடுங்க வாளேந்தும் கையழகும், பூவேந்துந்தோளழ கும், பொன்னேந்தும்மார்பழகும், மடல்விரிந்ததாமரைப்புஷ்பம் போல் விழியழகும், விடையேறுபோல் நடையழகும், இவனைப் பார்த்தால் பார்த்திபன் குமாரனைப்போற்காண்கின்றது; பாலசந்

திரிகா! இவன்வசிக்கும் நகரமேதுவோ இவனை எவ்விதம்மணம் புரிவேன் எனக்குத் தெரிவிப்பாயென்று நாணமுற்றிருப்பதைக்கண்ட பாலசந்திரிகை சொல்லுகிறாள். ஓ-அவந்திசுந்தரி! இப்பாலசுந்தரன் புஷ்பபுரியையாண்ட அம்ஸராஜன்சுதன் மகாபராக்கிரமசாலி என்கணவனுக்கு நேசன் உன்னழகைச்சொல்ல கேள்வியுற்று உன்னைப்பார்க்க இங்கேவந்தனர். அவருடன் சற்று பேசினால் உனக்குள்ள விரகவேதனை தீருமென்று சொன்னாள். அதைக்கேட்டு அவந்திசுந்தரி சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் சந்தோஷமடைந்து தாதியைநோக்கி அவ்வரசனையழைத்து உட்காரவைத்து அவருக்கு வேண்டிய உபசரணைசெய்யும்படி சொன்னாள். அத்தாதியர்கள் அமிர்தவசனனையும் தேவசுந்தரனையு மழைத்து உட்காரும்படிசொல்லி சந்தனம் புஷ்பம் தாம்பூலம் கொடுத்து உபசரித்தார்கள்.

அவ்வாறிருக்கையில் அரசகுமாரனும் அவந்திசுந்தரியும் ஒருவரையொருவர் பார்த்து அளவற்ற காதலோடு புன்சிரிப்புடனிருக்கையில், அவ்விடத்தில் மிகவும் அழகுள்ள ஒரு அன்னப்புள் வந்தது அதைக்கண்ட அவந்திசுந்தரி தோழியை நோக்கி பாலசந்திரிகா! இவ்வுன்னத அன்னத்தை பிடித்துக்கட்டி என்னிடம் கொண்டுவா வென்றாள். பாலசந்திரிகை அதைப் பின்தொடர்ந்து சென்றனள். இதுகளைப்பார்த்திருந்த அரசகுமாரன் அவந்திசுந்தரியைநோக்கி ஓ? பெண்கள் நாயகமே! நீ அதைப்பிடிக்கலாகாது, அது மகாதோஷம் பூர்வம் சோமனென்னும் அரசன் கதையாய் முடியும் என்றான். அதுகேட்டு அவந்திசுந்தரி அதன்வரலாறு யெனக்கு தெரியப்படுத்த வேண்டுமென்றாள். அரசகுமாரன் சொல்லத்தொடங்கினான். ஓ? மாரனைவென்ற மாங்குயிலே! ஒரு நாள் சோமனென்னும் அரசன் தன்மனைவியாகிய கஞ்சனியை யழைத்துக்கொண்டு பூங்காவன மடைந்து உல்லாசமாகச் சுற்றிக்கொண்டு வருகையில், ஒரு குளத்தருகில் ஒரு அன்னப்பட்சி அசைவற்று நிற்பதைக்கண்ட கஞ்சனி, அதைப்பிடித்து கால்களைக்கட்டி தன்னிடம் கொடுக்கும்படி தன் காதலனை வேண்டினாள். அப்படியே சோமன் அதைப்பிடித்து அங்கிருந்த தாமரைக்கொடியினால் அதன்கால்களைக்கட்டி கீழே விட்டு, அது குதித்துக்குதித்தோடுவதைக்கண்டு இருவரும் சங்

தோஷமுற்றிருந்தார்கள். அப்போது அன்னமானது அரசனை நோக்கி அடா துஷ்டா! உனக்கென்னதீங்குசெய்தேன் நானொரு ரிஷி, என் தவத்தைக்கெடுத்து என்காலைக்கட்டி துன்பப்படுத்தினதால் உனக்கும் அநேகதுன்பங்கள் நேரிட்டு நீங்களிருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து உன்காலிலும் விலங்குவரக்கடவதென்று சாபங்கொடுத்தார். அதைக்கேட்டு அரசனும் அரசியும் பயந்து அவரைவணங்கி ஓ சுவாமி! நாங்கள் தெரியாது செய்த குற்றத்தை மன்னித்துசாபத்தை நிவர்த்திசெய்யவேண்டுமென்று வணங்கினார்கள். ரிஷியானவர் மனமிறங்கி அரசனே! என்சாபம் வீண்போகாது, ஆதலால் நீங்கள் இருவரும் கொஞ்சகாலம்பிரிந்து பின்பு கூடியிருக்கக்கடவீர்கள், மேலும் என்காலைக்கட்டினதற்கு உன்காலில் ஒருமாதம் விலங்கிருந்து நீங்கிவிடுமென்றுசொல்லிப்போனார். ஆதலால்நீ இதைபிடிக்கலாகாதென்றான். இதைக்கேட்டு அவந்திசுந்தரிதான்நினைத்துக்கொண்டதாவது, முற்காலத்தில் நாமும் இவ்வரசகுமாரனும் அவ்வாறு செய்து சாபத்திற்குட்பட்டிருக்கலாம் இல்லாவிட்டால், இப்படி பிரிந்திருப்போமா வென்றெண்ணி அவ்வரசனைப்பார்த்து புன்னகையோடு பேசிக்கொண்டிருக்கையில், அவந்திசுந்தரியின் தாயானவள் தாதிகள் புடைசூழ்ந்துவர அப்பூங்காவனத்தைச் சுற்றிக்கொண்டு வருவதைக்கண்ட பாலசந்திரிகை, அரசகுமாரனைப்பார்த்து அவ்விடமிருந்து விலகும்படி கண்சைகைசெய்து அம்மா! அவந்திசுந்தரி இதோ உன் தாய் வந்துவிட்டாள் நாம் அரண்மனைக்குப்போவோம் வாருமென்றெழுந்தாள். இதற்குள் அரசகுமாரன் அவ்விடமிருக்கும் புஷ்பச்செடியின்கீழ் மறைந்திருந்தான். உடனே தாயானவள்வந்து பெண்ணைக்கண்டு பேசி இருவரும் போகப்புறப்பட்டார்கள்.

அப்போது அவந்திசுந்தரி அரசகுமாரனை விட்டுப்பிரிய மனமில்லாதவளாய் அன்னத்தைச் சுட்டிக்காட்டிச் சொல்லுகிறாள். ஓ!என தன்புள்ள அன்னமே! நீ எவ்வளவோ பிரியத்துடன் என்னிடம் வந்தாய், நான் என்தாயுடன்போகவேண்டுமாதலால் உன்னைவிட்டுப்பிரியலாயிற்று இல்லாவிடில்நிமைப்போதும்உன்னைப்பிரிந்திருக்கேன், ஆகிலும் நீ சற்றும்மனம் பொருத்திரு உன்னை என்னிடம் அழைத்துக்கொள்ளுகிறேன். என் ஆஞ்சைக்கு

கந்த அன்னமே! அதுவரையில் என்னுயிரையுன்னிடம் விட்டு போகிறேனென்று தன் கண்களுக்கு அரசகுமாரன் மறையுமட்டும் திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டு தாயுடன்சென்றனள்.

அவ்வாறு போனபிறகு அரசகுமாரன் வெளியேவந்து தன்னிடம் பேசிக்கொண்டிருந்து அகஸ்மாத்தாய் தன்னை விட்டு பிரிந்துபோன, அவந்திசுந்தரியை தன்திருஷ்டிக்குப் புலப்படுகிறவரையில்பார்த்து, மனம்நொந்து தன்னைமறந்துபித்தனைப்போல் விகாரமுற்று பார்த்ததையே பார்த்துக்கொண்டு சொன்னதையே சொல்லிக்கொண்டு கலையைப்பிரிந்த மானைப்போல் மிரண்டு, சித்தசன் வலைக்குட்சிக்கி நின்றான். இதைக்கண்டதேவசுந்தரன் அரசகுமாரனைநோக்கி இனிநாம் இவ்விடமிருப்பதிற் பயனில்லை நமதிருப்பிடம் போவோம் வாருமென்று அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். அன்று முதல் அரசகுமாரன் விரகவேதனையில்மூழ்கி ஆகாரம் நித்திரையின்றி ஈனஸ்திதியை யடைந்தான்.

இங்ஙனமிப்படியிருக்க அரசகுமாரனைவிட்டுப் பிரிந்து தாயுடன்சென்ற அவந்திசுந்தரி அரண்மனை போனதுமுதல் ஆகாரம் நித்திரை யின்றி மன்மதவேதனை பொருக்கக்கூடாமற் பேய்பிடித்தவளைப்போல் விகாரமுற்று கோபமாய்பேசுவாள் ஒருத்திபேரைச்சொல்லி மற்றொருத்தியை யழைப்பாள், ஒருவேளை களைத்துவிழுவாள், ஒருவேளை கிளிகளைப்பார்த்து கோபித்துக்கொள்வாள், கூவுகிறகுயிலை விரட்டச்சொல்லுவாள், நிலவைக்கண்டால் காமமீறி மதனைத்தூறுவாள், இவ்விதமான துர்ப்பலத்தை யடைந்திருக்கும் அவந்திசுந்தரியைக்கண்ட தாதிகளெல்லாம் இதென்னவிந்தையா யிருக்கிறதென்றெண்ணி, அவள்தந்தையிடம்போய் நடந்ததைசொன்னார்கள். அரசன் குமாரத்திக்குப் பயித்தியம் துடர்ந்ததென்றெண்ணி அநேகமந்திரவாதிகளால் மணிமந்திர அவுஷதங்கள்கொடுத்துசிகிச்சைசெய்தும், பிரயோசனப்படாமல் மனவருத்தமுற்று அவளுக்கு வேறோர் விடுதியமைத்து, அதிலிருக்கச்செய்து தாதிகளை காவலமைத்துப்பார்த்துக்கொள்ளும்படி திட்டம்செய்தான்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் பாலசந்திரிகை அவந்திசுந்தரியைநோக்கி அம்மா இளவரசியே! நீநாளுக்குநாள் நலிவடைந்து போவதால் உன்கருத்தை எனக்குத்தெரிவித்தால் அதற்கு வேண்டிய முயர்ச்சிதேடி உன்னிஷ்டத்தை நிறைவேற்றுகிறேன், நீ ஒளியாமல் என்னுடன் சொல்லவேண்டுமென்று கேட்க, அவந்திசுந்தரிசொல்லுகின்றாள் என்மனதுக்கிசைந்த பாலசந்திரிகா! நான் என்னென்றுசொல்லுவேன் நாமிருவரும் வசந்தகாலத்திருவிழா பார்க்கும்படி பூங்காவனமடைந்து அவ்விடமிருக்கையில் உன்கணவனுக்குநேசனாகிய அரசகுமாரன் அங்குவந்து என்னோடுபேசி என்னுடல், பொருள், ஆவி, மூன்றையும் கவர்ந்துபோனது உனக்குந் தெரிந்திருக்குமல்லவா? பாலசந்திரிகா! அச்சுந்தரனைக் காணுவிடில் என்னுடலில் உயிர்தரியாது, அவரிருக்குமிடத்திற்கு என்னை யழைத்துப்போய் விடுத்து முகதரிசனஞ் செய்வித்தால் எனக்குற்ற வியாதி இன்றே நீங்கிவிடும், இப்பேருதவிசெய்தால் நான் என்றைக்கும் உன்னை மறப்பதில்லை யென்றுசொன்னாள். இதுகளைக்கேட்ட பாலசந்திரிகை சற்று யோசித்துசொல்லுகிறாள், ஓ-அவந்திசுந்தரி! உன்னிஷ்டப்படியே அவ்வரசகுமாரனைக்காணும்படிசெய்கிறேன் ஆனால் உன் காதலனுக்கு ஓர்கடிதமெழுதி அவன்கருத்தைத்தெரிந்துக்கொண்டு அதற்குவேண்டியமுயர்ச்சிதேடலாமென்றாள். அதுகேட்டு அவந்திசுந்தரி சற்றுமனம் தெளிந்து பின்வருமாறு எழுதி தோழிகையிற் கொடுத்து பாலசந்திரிகா! நீ வருமளவும் என்னுயிர் தரியாது சீக்கிரம் வாருமென்றனுப்பினாள்.

அவ்வாறே பாலசந்திரிகை அக்கடிதத்தை யெடுத்துவந்து தன்கணவனாகிய தேவசுந்தரனிடங்கொடுத்து அவந்திசுந்தரி அரசகுமாரனைப்பார்த்து, அரண்மனைபோனதுமுதல் நடந்ததெல்லாம் தெரிவித்தாள். அதைக்கேட்டு தேவசுந்தரன் தன்மனைவியைநோக்கி பாலசந்திரிகா! அரசகுமாரனிருக்கும் ஸ்திதியைப் பாருமென்று அழைத்துப்போய் காண்பித்து, அரசகுமாரனே! இதோ என்மனைவி பாலசந்திரிகை உன்காதலியிடமிருந்து கடிதம் கொண்டுவந்தாள் பாருமென்றுசொன்னான். அதைக்கேட்டு அரசகுமாரன் சோபந்தெளிந்து தாரித்திரன் தனத்தைக் கண்டதுபோல் சந்தோஷமடைந்து தேவசுந்தரா! அக்கடித மெங்

கே தாவென்றுசொல்லிவாங்கி கண்களிலொத்திக்கொண்டுபிரித்து வாசிக்கத்தொடங்கினன்.

அவந்திசுந்தரி நிரூபம்.

எனது பிராணதுரையே! உன்னைவிட்டுப்பிரிந்தது முதல் என்னுடைய புத்தி சுவாதினத்திலில்லை, என்னல் எழுப்பட்டதைப்பார்க்கிலும் இக்கடிதம் கொண்டுவரும் எனது தோழி பாலசந்திரிகையைக்கேட்டால் தெரியவரும் உன்னை சந்திக்கும்படியான சக்தியில்லாததினல் இக்கடிதமெழுதத் துணிந்தேன். அடா என் கட்டியமுதே! கருணையுள்ளசாமி! உம்மை நேரில் கண்டபோது எவ்வளவு சந்தோஷமடைந்தேனே அவ்வளவுசந்தோஷத்தை இப்போதடைந்தேன். பொருமை என்பது கடலினும் பெரிதென முதியோர் சொல்லியபடி அப்பொருமையே என்மனவியாதியை விர்த்தீகரிக்கச்செய்கின்றது, மேலும் உமது உருவம் என்மனதிற் பதிந்திருந்த போதிலும் இன்னெருதரம் உம்மைக்காண என்கண்கள் தேடிக்கொண்டிருக்கின்றன. என் சாமி! உமக்கும் அப்படிக் கிருக்குமல்லவா? ஆம் அதற்குச் சந்தேகமிராது ஓ-என்மனதுக்கிசைந்த மாரனே! இப்பேர்ப்பட்ட பிரிவினைநமக்கு நேரிடாவிடில் நாம் தன்னியராய் விடுவோமல்லவா? இதுகளுக்கெல்லாம் காரணம் என்னுடைய துரதிஷ்டமே யொழியவேறல்ல, ஆகையால் இன்னெருதரம் உம்மைக் காணவிடில் எனதுபிராணன் நீங்கிவிடும் அல்லாமலும், என்மனதிலிருக்கும் கோரிக்கை எல்லாம் இக்கடிதத்தில் எழுதியிருப்பேனென்று நினைக்கவேண்டாம், முடிவாகச்சொல்லுகின்றேன். நான் உன்மீதிற்கொண்ட காதலைப்போல் நீரும் என்பேரிற்கொள்ளாவிடில் இதுவரையில் நானுயிரோடிருக்கவறியேன், ஆகிலும் வீண்பேச்சு யென்னத்திற்கு என்றைக்கு மென்னைமறப்பதில்லை யென்று சத்தியஞ்செய்து ஓர்கடிதமெழுதுவீராகில் அதை எப்பொழுதும் பார்த்துப்பார்த்து சந்தோஷிப்பதுமன்றிஎன்விரகவேதனையையும் சற்றுநீக்கிக்கொள்ளுவேன், ஆனல்நான்கொண்ட எண்ணத்தைகடவுள் எப்படியாவது முடிப்பாரென்றாம் புகிறேன். எனதுகடிதத்திற்குப்பதில் நீர் அனுப்புகிறவரையில் எதிர்பார்த்திருக்கிறேன். இப்படிக்கு,

அவந்திசுந்தரி.

அக்கடிதமுழுதும்வாசித்தறிந்த அமிர்தவசனன் தேவசுந்தரனையும் பாலசந்திரிகையையும் பலதரம் புகழ்ந்துபேசி ஆனந்தமடைந்து, தேவசுந்தரா! இக்கடிதத்திற்குபதில் எழுதித்தருகிறேன் இதை உன்மனைவிகையில் கொடுத்தனுப்புமென்று தன் கையால் ஓர்கடிதமெழுதிக்கொடுத்தான். அதைபாலசந்திரிகை வாங்கிக்கொண்டுபோய் அரசகுமாரத்தியைநோக்கி அம்மா! அவந்திசுந்தரியே! அரசகுமாரன் உன்னைக் கண்டதுமுதல் நீயடைந்திருக்கும் துர்ப்பலத்தைப்பார்க்கிலும் எட்டுபங்கு அதிகமாய் ஈனதிசையடைந்து உன்மீது காதலாயிருக்கிறானென்றுகடிதத்தைக் கொடுத்தாள். அவந்திசுந்தரி சந்தோஷமடைந்து காதலன் கைபாலெழுதிய கடிதத்தைக்கண்களிலொத்தி முத்தமிட்டு வாசிக்கத்தொடங்கினாள்.

அமிர்தவசனன் நிரூபம்.

எனது இருதயமணியே! உன்கடிதத்தைகண்டபோது நாள்மோகசாகரத்தில் மூழ்கி விரகசன்னதமேறி யிருந்தேன். அந்தவேளையில் அதைப்பார்த்து எனக்குண்டாகிய ஆனந்தத்தை யிவ்வளவென்றெழுதமுடியாது மேலும் என் ஆசைக்குயிலே! நீ என்னைவிட்டுப்பிரிந்தபோது என்கண்ணொளி உன்னோடுகூடவே வந்துவிட்டது. இதுவரையில் கண்ணிழந்தவன்போல் யிருந்தேன் இப்போதுன் னழகியகரத்தா லெழுதியகடிதத்தைப்பார்த்தவுடன் என்கண்கள் அதிகபிரகாசமாய் எதாஸ்தானத்தில் வந்துசேர்ந்தது, இதுவே நான் உன்பேரிற்கொண்ட மோகத்திற்கு நீயும்நானும் அனுபவிக்கும் துன்பம், ஆகிலும் உன்கடிதத்தைப்பார்த்தவுடன் கொஞ்சம் சந்தோஷமடைந்தேன். வீண்பேச்சு பேசுவதேன் உன்னைக்கண்டதுபோல் உன்கடிதத்தைப்பலதரமும் முத்தமிட்டேன், அடிக்கடிவாசித்தேன், ஆனந்தமடைந்தேன், ஆ-என்கருத்துக்கிசைந்த காதலியே! நான் உன்னை எப்போதும் மறப்பதில்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறேன.

இப்படிக்கு,

☞ அமிர்தவசனன்.

இவ்வாறாக வெழுதியகடிதத்தை வாசித்த அவந்திசுந்தரி சந்தோஷசாகரத்தில் மூழ்கினவளாய் பாலசந்திரிகையைநோக்கி

அம்மா, தோழி! உன்கருத்தைப்போல்கடிதமெழுதி பதிலுத்திரம் தருவித்தேன். என்கருத்தைப்போல் அக்காதலனைக்காணச் செய்யவேண்டுமென்றாள். அதைக்கேட்ட பாலசந்திரிகை அம்மா, அவந்திசுந்தரியே! சற்று மனம்பொருத்திரு நீ ஆசைகொண்டமணாளனை உன்னிடமழைத்து வருகிறேனென்றாள்.

இங்ஙனமிப்படியிருக்க அமிர்தவசனன் அவந்திசுந்தரி எழுதிய கடிதம்கண்டதுமுதல கவலையுற்று பயித்தியங் கொண்டவனைப்போல் பிரதிதினமும் தேவசுந்தரனோடு பூங்காவனத்திற்குவந்து அரசகுமாரத்தியைக்காண ஆசைகொண்டு காத்திருந்தும் வராமையால் பொழுதுபோனதும்வீடுசேர்ந்து அவளையே சிந்தித்துக்கொண்டிருந்து விடிந்தெழுந்து வழக்கப்படி பூங்காவைச்சுற்றிவருநாளில் ஒருநாள் ஓர் பிராமணன் அமிர்தவசனனை நோக்கிநீயார்? உன்னைப்பார்த்தால் அரசகுமாரனைப்போல்காண்கின்றது, ஏதோமனம்வாடியிருக்கின்றாய் உன்வரலாறென்னவென்று கேட்க, அமிர்தவசனன் பிராமணனைவணங்கி ஓ-சுவாமி! நான் புஷ்பபுரியரசன் குமாரன், என்தோழர்களோடு யாத்திரை செய்துவருகையில் நான் அவரைப்பிரிந்து இந்நகரம்வந்துசேர்ந்து இதோ என்நேசனுடைய உதவியால் காலங்கழித்துவருகையில் ஒருநாள் நாங்களிருவரும் இப்பூங்காவனத்தைச் சுற்றிப்பார்த்துவருகையில் இந்நகரத்தரசன் குமாரத்தியாகிய அவந்திசுந்தரி யென்பவளைக்கண்டு காதல்கொண்டவனாய் அவளை யெவ்விதம் மணம்புரிவோமென்கிற ஏக்கத்துடன் வருந்தியிருக்கின்றேனென்றான். அதனைக்கேட்ட பிராமணன் புன்சிரிப்புடன் சொல்லுகிறான் ஆ! ஆ! இவ்வளவு பராக்கிரமசாலியாகிய உனக்கு இந்த அற்பகாரியம் நிறைவேறாமற் போய்விட்டதா! ஆனலென்ன நான் இதற்குவேண்டியபிரயத்தினம்செய்து எட்டுநாளையில் அப்பெண்ணை உனக்குமணஞ்செய்கின்றேன் நீ கவலைப்படாமலிருவென்றான். அதைக்கேட்டு அமிர்தவசனன் இப்பிராமணன் முகாரவிந்தத்தைப்பார்த்தால் நமக்குநன்மை செய்வானென்றெண்ணிசொல்லுகிறான். ஓ-சுவாமி வேதகுலத்துங்கரோ! தாங்கள் வசிக்கும் நகரமெது தங்கள் நாமதேயமென்ன அடியேனுக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்க, பிராமணன்சொல்லுகிறான் அரசகுமாரனே! நானிருப்பது உச்சினியோங்காளி நகரம் என்பெ

யர் வித்வசேகரனென்று சொல்லுவார்கள் மந்திரஜாலம் தந்திர ஜாலம் மயேந்திரஜால முதலியயாவும் தேரித்தெளிந்து, இவ்வூர் அரசனிடம் ஜாலவித்தை காண்பிக்கும்பொருட்டு வந்தேனென் றுசொல்லி தானிருக்கும் இடத்தை அவர்களுக்குச் சொல்லிநா ளையத்தினம் தன்னிடம் வரும்படிசொல்லிப்போனான்.

இப்பால் தேவசுந்தரனும் அரசகுமாரனும் வீடுசேர்ந்து மறுநாள் காலையில் வித்வசேகரனிடத்திற்குப்போனார்கள். அவ னிவர்களோடு கலந்துபேசி சொல்லுகிறான். அரசகுமாரனே! நீ கோரியவெண்ணம் திண்ணமாய் முடிப்பேன் ஆனால் ஒருகா ரியமிருக்கின்றது அதென்னவெனில், இங்கர் அரசன்குமாரத் தியின் தாதிகளில் ஒருத்தியை யென்னிடமழைத்துவந்தால் அ வளிடம் சிலரகசியம்சொல்லவேண்டியிருப்பதால்அது உங்களா ல் ஆகவேண்டுமென்றான். அதுகேட்டுதேவசுந்தரன் ஓ-சுவாமி! அடியேன்மனைவி பாலசந்திரிகைதான் அரசன் குமாரத்திக்குத் தோழியாயிருக்கிறாள், அவளை நாளையத்தினம் இவ்விடம் வரவ ழைக்கிறேனென்றான். அதுகேட்டு வித்வசேகரன் சந்தோஷம டைந்து பாலசந்திரிகையை அழைத்துவரும்படி சொன்னான். மறுநாள் தேவசுந்தரன் பாலசந்திரிகையை அழைத்துக்கொண் டுபோய் ஓ-சுவாமி! இதோ என்மனைவியை யழைத்துவந்தேன் தாங்கள் கோரியரகசியம் கேட்கலாமென்றான். அதுகேட்டுவித் வசேகரன் அவளைப்பார்த்து அம்மா பாலசந்திரிகா! உன் அர சன்குமாரத்தியின் எண்ணத்தை நிறைவேற்றுகிறேன் ஆதலா ல் உன்கருத்தென்ன தெரிவிக்கவேண்டுமென்றான். அதுகேட்டு பாலசந்திரிகை சந்தோஷமுற்று ஓ-சுவாமி! தேவரீர் அடியாள் பேரில்கிருபைபுரிந்து அரசன்குமாரத்தியின் கருத்துபோல் நட த்தப் பிரார்த்திக்கின்றே னென்றாள். அதற்கு வித்வசேகரன் அம்மாபாலசந்திரிகா! ஒரு ரகசியம்சொல்லுகிறேன் அதென்ன வெனில், நான் நாளையத்தினம் அரசன்சபைக்குவந்து எனக்குத் தெரிந்திருக்கும் ஜாலவித்தையெல்லாம்செய்து அரசனையும் ச பையோரையும் பிரம்மிக்கும்படிசெய்வதுமன்றி கடைசியில் ஓர் கலியாணச்சடங்கு நடத்துவேன், அப்போது நீ அவந்திசுந்தரி யை மணவாளப்பெண்ணைப்போல் சிங்காரித்துசபைக்கருகாமை யில் ஓர் அறையில் ஒளித்துவைத்திருந்தால்நான் அச்சமயத்தில்

அரசகுமாரனையழைத்து மாப்பிள்ளையாக நியமித்து கலியாண ப்பெண்வேண்டுமே இதோ அழைப்பிக்கிறேன், பாருங்களென் று சபையில் நின்றுகைகொட்டி ஓ-கலியாணப்பெண்ணே! வா-வா-வென்றுகூப்பிடுகிறேன் அப்போது அவந்திசுந்தரி நாணமி ல்லாமல் திடீரென்று அரசகுமாரன் பக்கத்தில் வந்து நிற்கவே ண்டும், நீ அப்படிக்குச்செய்வாயானல் அவர்களிருவரும்கொண் டவெண்ணம் நிறைவேறும் ஆதலால் நீபோய் அவந்திசுந்தரிக் கு இந்தரகசியமெல்லாந் தெரிவித்து இதற்குடன்படுவாளாகில். இன்றையத்தினமேவந்து எனக்குத் தெரிவிக்கவேணு மென்று சொல்லியனுப்பினன். பாலசந்திரிகையு மவ்வாறே அரண்மனை சென்று அவந்திசுந்தரிக்கு இந்தரகசியமெல்லாந்தெரிவித்து அ வளை இணங்கச்செய்து மறுபடியும் வித்வசேகரனிடம் வந்து ஓ-சுவாமி! அரசன்குமாரத்தி தாங்கள் நினைத்தபிரகாரம் நடக் கத்தடையில்லை யென்றுதெரிவித்துவிட்டு அரண்மனைபோய்ச் சேர்ந்துவித்வசேகரன் வரவுக்கெதிர்பார்த்திருந்தனள்.

இப்படிக்கிருக்கமறுநாள்காலையில் வித்வசேகரன்தேவசுந்த ரனையும் அமிர்தவசனனையும் தனக்குச்சீஷர்களாகத்தன்னுடன ழைத்துக்கொண்டு ஜாலக்கருவிகளோடு அரசன் அரண்மனை வ ந்து காவலாளர்களைநோக்கிச்சொல்லுகிறான், நீங்கள் அரசனிட ம்சென்று உச்சினிபுரத்திலிருந்து வித்வசேகரனென்னும் தந்தி ரவாதி வந்திருக்கிறான் சபைக்குவரும்படி உத்திரவுபெற்றுவா ருங்களென்றனுப்பினன். அவர்கள் அரசனெதிர்சென்று தே வா! பராக்கு! யாரோ மூன்றுபேர் தங்களைக்காணவந்திருக்கிறார் கள், சபைக்குவர உத்திரவுகேட்கிறார்களென்றார். அதுகேட்டு அரசன் அவர்களையழைத்துவரும்படியனுப்பினன் காவலர்கள் வித்வசேகரனிடம்சென்று அவர்களை யழைத்துப்போய் அரச னெதிர்விட அரசனவர்களைப்பார்த்து நீங்கள் யார்? என்னகாரி யமாக வந்தீர்களென்றான். வித்வசேகரன்வணங்கி ஓ-சுவாமி! அ டியேனிருப்பது உச்சினியோங்காளி நகரம் என்பேர் வித்வசே கரன் அனேகதேசத் தரசர்களிடஞ்சென்று விநோத ஜாலம் செய்துபரிசுபெற்றுவந்தேன். தேவாள் உத்திரவானல்தங்களிட மனமும் சந்தோஷிக்கச்செய்து போகலாமென்றுகருதி வந்தே னென்றான். அதைக்கேட்டு அரசன் ஆனல் உன்னிஷ்டப்படி

நடத்தலாமென்றான். உடனே வித்வசேகரன் மந்திரி சாமந்தர் முதலிய பதினெண்பாஷைமன்னர் நிறைந்திருக்கும் சபைக்கெதிர் நின்று தன்னிடமிருந்தசோளிப்பையை எடுத்து அதிலுள்ளதாம்பிரவளையத்தை கையிலணிந்து ஓ- சுவாமி ! யான்செய்துவரும்வித்தையை சற்றுகண்ணோட்டமிடவேண்டுமென்று சொல்லி தன்னிருகரங்களைநீட்டி சண்டி-சாமுண்டி-சாமளை-கவுரி-மாலினி-எண்டோளி-வீரி-மாதங்கி-வேதாளி-சூலி-பகவதி- ஆரணி-வல்லணங்கு-ஜயை-முக்கண்ணி- ஆளியுந்தி- மாயை-யோகினி-இடாகினி- வலவை- குறமகள் என்று பலவாறு உச்சரித்து கைகளைத்தட்டி-ஓடிவாவென்றுசொல்லி ஆகாயத்திலிலுள்ள சூரியனைமறைத்து பூரணச்சந்திரனைக் காண்பித்தான், அதுமறைந்ததும் தேவேந்திரன் பூங்காவனத்தைக் காண்பித்து அதிலுள்ள-மல்லிகை- முல்லை- இருவாட்சி-செண்பகம் முதலிய பலவித புஷ்பங்களைப்பறித்து அரசனிடம் கொடுத்து இந்திரன் இந்திராணி இவர்களைக்காண்பித்தான். இதுகளைக்கண்டரசனும்சபையோரும் பிரம்மித்திருக்கையில் மறுபடியும் அரசனைப்போலும் அரசன்பத்தினிபோலும் காண்பித்தான், இப்படியனேகவிதஜாலம்செய்து அரசனைநோக்கி ஓ-சுவாமி! முடிவில் ஓர்கலியாணச்சடங்கு மங்களகரமாக நடத்தப்போகிறேன் அதற்கு தாங்கள் சம்மதித்து யான் பிள்ளைக்குடையவனாகவும் நீர் பெண்ணுக்குடையவராகவும் இருக்கவேண்டுகிறேனென்றான், அரசனும் அதற்குச் சம்மதித்திருந்தார்.

அப்போது வித்வசேகரன் சற்றுநேரம்பொருத்து ஓர்செப்புச்சிமிளிலிருக்கும் தைலத்தில் கொஞ்சமெடுத்து அரசன் கண்களில் தடவி ஓ-மகாராஜா ! இது விநோதமான சுபமுகூர்த்தமாகையால் ஆனந்திக்கவேண்டுமென்று தன்னருகிலிருக்கும் அமிர்தவசனனை மாப்பிள்ளையாக நியமித்து மணவறையில் நிற்கச்செய்து கலியாணத்திற்குவேண்டிய மேள தாளங்களைக் கொட்டச்சொல்லி தானேபிராமணனாகவிருந்து சடங்குகள் நடத்தி மணவறைப்பெண்வேண்டி சபைநடுவில் நின்று கைகளைக்கொட்டி ஓ-கலியாணப்பெண்ணே! வா-வா- வென்றுசொல்லிநின்றான். இதற்குமுன்னமே சித்தமாகவிருக்கும் அவந்திசுந்தரிதிடீரென்று ஓடிவந்துஅமிர்தவசனன்பக்கத்தில் நின்றாள், வித்வசேகரன்

பார்த்து கலியாணத்தை நடத்தினன். அப்போது அந்தச்சபையிலுள்ள யாவரும் இப்பெண்ணைப்பார்த்தால் அரசன் குமாரத்திபோலிருக்கிறதென்று ஆச்சரியமுற்றனர்கள். அதைக்கண்ட அரசன் தன்குமாரத்தியென்று சந்தேகித்தவனுயும் இதுகளுக்கெல்லாம் காரணம் தன்கண்களில் தடவியிருக்கும் தைலத்தின்மகுத்துவமென்று, தீர்மானித்து ஆச்சரியமுற்றிருந்தான். அச்சமயத்தில் அமிர்தவசனன் மாங்கல்யம் சூட்டி மகிழ்ச்சியடைந்தான்; வித்வசேகரன் அரசனைப்பார்த்து ஓ-மகாராஜா! அடியேனுக்கு உத்திரவுகொடுமென்று வணங்கினன். அரசன்கண்டு ஆனந்தமடைந்து அவனுக்குவேண்டிய பரிசுகளைக்கொடுத்தனுப்பமந்திரிகளுக்குத்திரவளித்து சபையைவிட்டெல்லோரும் எழுந்திருக்கும் சமயத்தில அவந்திசுந்தரி அமிர்தவசனனை அழைத்துக்கொண்டு ஜனக்கூட்டத்தில் தன்னை ஒருவரும் காணுமல் முன்தான்வந்தவழியே சென்று அரண்மனைசேர்ந்தாள்.

வித்வசேகரனும் தேவசுந்தரனும் பரிசுபெற்று தங்களிருப்பிடம்போய்ச்சேர்ந்தார்கள். அரசன் அந்தப்புரஞ் சேர்ந்து இவ்விந்தையை மனைவியிடத்தில்சொல்லி சந்தோஷமடைந்தான். இவ்வாறிருக்கையில் அவந்திசுந்தரியும் அமிர்தவசனனும் தனியே ஓர் அறைக்குட்சென்று புஷ்பபஞ்சணையில் சயனித்து உல்லாசமாகபேசிக்கொண்டிருக்கையில், இராக்காலம் சமீபித்ததும் அவந்திசுந்தரி பாலசந்திரிகையை யழைத்து அரசகுமாரனுக்கும்தனக்கும் போஜனம் கொண்டுவரும்படிசொல்லி தாங்களிருவரும் புசித்து பள்ளியறைசேர்ந்து மன்மதன்வாதைபோக்கி மஞ்சத்தில்படுத்து நித்திரைபோகும் சமயத்தில் அன்னமாகிய ரிஷியின்காலைக்கட்டின சாபம் நிறைவேறவேண்டியதால், ரிஷியானவர் தேவஸ்திரியான சுலோசனுவையழைத்து நீபோய் நமதரசனுகிய பிரசண்டவர்மன்மனையில் அவந்திசுந்தரியுடன் சயனித்திருக்கும் அமிர்தவசனன்காலில் ஒருமாதகாலம் விலங்காயிருந்து இருவரையும் பிறித்து பின்பு ஒன்றுசேர்த்துவிட்டு வரக்கடவையென்றனுப்பினர். உடனே சுலோசனு ஆகாயமார்க்கமாய்ப் புறப்பட்டு அரண்மனைசேர்ந்து அமிர்தவசனன்காலில் சொர்னமயமான விலங்காய்சமைந்தனள், அச்சமயத்தில் நித்திரைசெய்யும் அரசகுமாரன் யாரோ தன்னிரண்டு கால்களையும் கட்டிவிட்ட

தந்திரவிவாகம்.



அமிர்தவசனன் காலில் விலங்கு தரித்தல்.

தாக கினவுகண்டு விழித்துப்பார்க்கையில், தன்னிரண்டுகாலிலும் விலங்கிட்டிருப்பதைக்கண்டு பிரம்மித்து எழுந்துட்கார்ந்தான். சயனித்திருந்த அவந்திசுந்தரிதன்நாயகன் அருகிலில்லாதிருப்பதைக்கண்டு எழுந்துபார்க்கையில், அரசகுமாரன்காலில் விலங்கிட்டிருப்பதைப்பார்த்து மெய்மறந்து ஓ! வென்றலறிபெருங்கூச்சலிட்டாள். அச்சத்தங்கேட்ட காவலாளிகளோடிவந்துபார்த்து அவந்திசுந்தரியருகில் ஓர்சுந்தரபுருடன் காலில்விலங்குடனிருப்பதைக்கண்டு இவன்யார்? எப்படிவந்தான் அரசன் குமாரத்தியை களவுசெய்யவந்தவன்போலிருக்கிறதென்றெண்ணி அரசனிடம்போய் தெரிவித்தார்கள்.

அதைக்கேட்டு அரசன் கடுஞ்சினமடைந்து காவலருடன் சென்று மகளைக்கண்டு, அம்மா! நான்பெற்ற பெரும்பாக்கியமே உன்னருகிலிருக்கும் இக்கள்வன்யார்? எவ்விதம் இவ்விடம்வந்தான் இவன்காலில்விலங்கெப்படிவந்தது, அதையெனக்குத்தெரிவிப்பாயென்றுகேட்க, அவந்திசுந்தரி தன் தந்தைவார்த்தைக்கூப்பதிலுத்திரம் சொல்லாமல் மௌனமாக தலைகுனிந்து நிற்பதைக்கண்ட, பிரசண்டவர்மன் கோபங்கொண்டு அடா காவலாளிகளே! இவனைப்பிடித்துக் கொண்டுபோய் கொலைசெய்துவிடவேண்டுமாகையால் அதுவனாயில் இவனைப்பிடித்துகட்டி காவலில்வைத்து பத்திரப்படுத்துங்களென்று ஆக்கியாபித் தரண்மனைபோனான். இப்பால் காவலாளர்கள் அரசன்சொற்படி அமிர்தவசனனைக்கட்டிக் கொண்டுபோகும்போது அவந்திசுந்தரிமனம் சகியாதவளாய் ஆ-என்னுசை துரையே! நான் உன்னைப்பிரிந்து எவ்விதமிருப்பேனென்று விசனமுற்றனள். அதைக் கண்டு அமிர்தவசனன் ஓ-என்னுஞ்சைக்கிளியே! நீ கவலைப்படவேண்டாம் நான் முன்னம் ஓர் அன்னத்தின் கதையைச்சொன்னேனல்லவா! அதுபோல் ஒருமாதகாலம் பொருத்திரு யான்வந்து சேருகிறேனென்றுசொல்லி காவலருடன்சென்றான். அவர்கள் கொண்டுபோய் சிறைச்சாலையில் அடைத்தார்கள்.

இவ்வாறிருக்கையில் பிரசண்டவர்மன் மனைவியைநோக்கி ஓ-மாதே! நேற்றையதினம் உன்குமாரத்தியின் அந்தப்புரத்தில் ஓர் கள்வன் வந்தா னவனைப்பிடித்து காவலாளிவசம் ஒப்பிவித்

தேன், நாளையத்தினம் கொலைசெய்து விடவேண்டுமென்றான். அதைக்கேட்டமனைவி தன்குமாரத்தியின் சவிஸ்தாரமெல்லாம் முன்னமே தெரிந்தவளாதலால் கணவனைநோக்கி, ஓ-நாதா! திருடனைக்கொலைசெய்வது சாஸ்திரவிரோதமாகையால் தாங்கள் மன்னித்து விடுதலைசெய்து விடவேணுமென்றாள். அதைக்கேட்டரசன் அவள் கருத்துக்கிசையாதவனாய் உடனே கொலையாளிகளையழைத்து அடா கிராதர்களே! இவ்வூர்முழுதும் பறைசாற்றி இக்கள்வனைக்கொண்டுபோய் மைதானவெளியில் சிரச்சேதஞ்செய்துவிடுங்களென்று ஆக்கியாபித்தான்.

அவ்வாறேகொலையாளர் பட்டணமுழுதும்தெரிவித்துவிலங்குடனிருக்கும் அமிர்தவசனனை கொண்டுபோய் கொலைகளத்தில் நிறுத்தினார்கள். இவ்விந்தையைப்பார்க்க அந்நகரவாசிகள் யாவரும்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அரசன் மந்திரிமார்களுடன் கொலைக்களம்வந்துசேர கொலையாளிகள் அரசனுத்திரவைபெற்று அமிர்தவசனனை வெட்டத்துணிந்தனர். அச்சமயத்தில் ஆகாயத்தில் ஒரு தேவஸ்திரீயானவள் தோன்றி, ஓ-பிரசண்டவர்மா! அவ்வரசகுமாரனைக்கொலைசெய்யவேண்டாம், இவன்தான் புஷ்பபுரியையாண்ட அம்ஸன்சுதன், மகாபராக்கிரமசாலி உன்குமாரத்திக்குகணவன் இவனுக்கேஉன்ராச்சியத்தைபட்டாபிஷேகம் செய்யவேண்டும், இவனேசக்கிரவர்த்திபட்டத்திற்குடையவனென்றுசொல்லி அமிர்தவசனனைநோக்கி, ஓ-அரசகுமாரனே! நீதபசிபைசெய்தகுற்றம் இன்றோடேவிலகிற்றுமேலும் உன்காலில்விலங்காயிருந்தவள்நான்தான், நீ இவ்வரசன் குமாரத்தியைமணஞ்செய்து பட்டாபிஷேகம்பெற்று வாழ்வாயென்று ஆசீர்வதித்துமறைந்தனள். உடனே சலவருஷம்பொழிந்தது இவ்வதிசயத்தைக்கண்டபிரசண்டவர்மன் பயந்துகொலைசெய்வதை நிறுத்தி, மந்திரிகளைநோக்கி அமிர்தவசனனை அழைத்துக்கொண்டு வாருங்களென்று அரண்மனைசேர்ந்து, மனைவியைப்பார்த்துமாதுசிரோன்மணி! இவ்விந்தையைப்பார்த்தாயா? நாம் கொலைசெய்ய நியமித்த கள்வனுக்கு நமது கன்னிகையை மணஞ்செய்யும்படி ஆகாயவாணி அருளினளென்று நடந்தவரலாற்றைச்சொல்லிசந்தோஷமடைந்து, தனது நகரமுழுதும் அலங்காரஞ்செய்ய ஆக்கியாபித்து புரோகிதரை யழைத்து தன்

குமாரத்தி அவந்திசுந்தரிக்கு மணமுகூர்த்தம் நிச்சயிக்கச்சொல்லி, பந்துக்கள் முதலிய யாவருக்குந்தெரிவித்து தன்னகரத்திலிருக்கும் கைதிகளை சிறைவிடுவித்து, பிராமணர் முதலியயாசகர்களுக்கெல்லாம் முப்பத்திரண்டு தானமளிக்கஉத்திரவுசெய்து, அரண்மனையெல்லாம் வேடிக்கைவிநோதமாகவும் பச்சைப்பந்தல் போடுவித்து, தன்குமாரத்திக்கும் அமிர்தவசனனுக்கும் நலங்குமுதலிய சடங்குநடத்தி காவேரிதீர்த்தத்தால் மங்களஸ்நானஞ்செய்வித்து, நூதனபீதாம்பரம் தரிக்கச்செய்து மணவறையில் நிறுத்திசாந்திமுதலிய சடங்குகள் நடத்தி, பிராமணர்பந்து முதலிய யாவரும் நிறைந்திருக்கும் சபையில் தன்குமாரத்தியை மனப்பூர்வகமாகப் பாணிக்கிரகணம் செய்துக்கொள்ளக்கொடுத்தேனென்று தாரைவார்த்து, அனேக பிராமணர்களுக்கும் தட்சணை தாம்பூலம் கொடுத்தனுப்பி மற்றவர்களுக்கெல்லாம் அறுசுவைபதார்த்தத்தோடு போஜனமளித்து சந்தனம் புஷ்பம் தாம்பூலங்கொடுத்து, வித்வாமிசர்புகழ நாட்டியப்பெண்கள் நடனம்புரிய சகலசம்பிரமத்துடன் அமிர்தவசனனுக்கு விருந்துமுதலியதெல்லாம் நடத்திமகளையும் மருமகனையும் தனது அந்தப்புரத்தில் குடியேற்றினன். அமிர்தவசனனும் அவந்திசுந்தரியும் இரதியும் மதனும்போல் கூடிச்சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

இங்ஙனமிருக்க பிரசண்டவர்மன் நீதிதப்பாமல் சகலராஜர்களும்பகுதிகட்டசெங்கோல்நடத்தி சுகமாய்வாழ்ந்துவருநாளில், சிலநாள் சென்றபிறகு அரசனுகிய பிரசண்டவர்மன் ஒருநாள் ஸ்நானஞ்செய்துக்கொண்டிருக்கும்போது அகஸ்மாத்தாய் அவனுக்கொருவிதமாகிய மயக்கங்கண்டு, மூர்ச்சையடைந்துகொஞ்சந்தெளிந்து அதுவேமூலமாக சிலநாள் நலியாயிருக்கையில், அரசன் தனது மந்திரிகளையழைத்து, ஓ-மந்திரிகளே! எனக்குநாளுக்குநாள் நலியதிகமாய் இருப்பதால் எனக்குப்பின் இராஜ்ஜியமாளசந்ததியில்லாதாலும், நானுயிரோடிருக்கையில் எனதுமருமகனுகிய அமிர்தவசனனுக்கு ஆகாயவாணிசொல்லிய வண்ணம் பட்டாபிஷேகஞ்செய்து பார்க்கவேண்டுமாகையால், அம்பத்தாறுதேசத்து அரசர்களுக்கும் நிருபமனுப்பிநகரமுழுதும் அலங்கரிக்கும்படி உத்திரவளித்தான். அதுகேட்டு மந்திரிகள் அரசனுக்குவந்த ஆபத்தைப்பார்த்து விசனமுற்று அவ்வாறே தேச

த்தரசர்களுக்கெல்லாந்தெரிவித்து, பட்டணமுழுதும் அலங்கரித்து பிராமணர்களையழைத்து பட்டாபிஷேகஞ்செய்ய மூகூர்த்தம் நிச்சயித்து, அதற்குவேண்டிய சாமக்கிரிகைகளை சேகரஞ்செய்து அரசனுக்குத்தெரிவித்து இராஜாக்கள் வருகைக்கெதிர் பார்த்திருந்தார்கள்.

அக்காலத்தில் அங்க-வங்க-கலிங்க-காஸ்மீர-காம்போஜ-மச்ச-மராட முதலிய அன்பத்தாறு தேசத்தரசர்களும் தங்கள்தங்களுடைய சைனியத்துடன் புறப்பட்டு அவந்தி தேசத்தைச் சேர்ந்தார்கள். அதைக்கண்ட மந்திரிபிரதானிகள் அவரவர்களுக்குத்தகுந்த விடுதிகளமைத்து, அரசனுக்குத்தெரிவித்து அவனையும் பல்லக்கிலேற்றி பட்டாபிஷேகமண்டபத்திற்கழைத்துப்போய் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்தவுடன், அரசன் தனது வம்ஸபரம்பரைக்கு குருபீடமாயிருக்கும் சாந்தசீலரை அழைத்து, ஓ-சுவாமிகளே! அம்பத்தாறு தேசத்தரசர்களும் வந்திருக்கிறார்கள் எனதுமருமகனுக்கு மகுடஞ்சூட்ட ஆரம்பிக்கவேண்டுமென, அவரும் பதினெட்டுவகை மேளவாத்தியங்களையும் முழக்கஞ்செய்ய ஆக்கியாபித்து கங்கை-யமுனை முதலிய திவ்விய தீர்த்தங்களினால் அமிர்தவசனனுக்கு திருமஞ்சனம்செய்வித்து சர்வபூஷண அலங்காரத்தோடு பட்டத்து யானையின்பேரிலேற்றி, இராஜகூட்டத்தோடு நகர் வலஞ்செய்து சபாமண்டபத்திற்கழைத்துவந்து சிம்மாசனத்தி லிருக்கச்செய்து, அரசனது சிரோ மகுடத்தையும் செங்கோலையும் அமிர்தவசனனுக்குச் சூட்டி ஜெயசுகிபவாவென்று ஆசிர்வதித்தார். உடனேபிரசண்டவர் மனெழுந்து அம்பத்தாறு தேசத்தரசர்களையும் ஆசிர்வதித்து சொல்லுகிறான். ஓ-அரசர்களே! எனக்குமரணகாலம் சமீபித்ததால் இப்பட்டத்தை புஷ்பபுரியை யாண்ட அம்ஸராஜன்புத்திரனாகிய எனது மருமகனுக்கு சூட்டினேன். எனக்குக்கப்பம்செலுத்தியதுபோல இவரது ஆளுகைக்கு செலுத்துவீர்களென்று பிரார்த்திக்கின்றேனென்றுசொல்ல யாவரும் சரி! சரி! என்று ஒப்புக்கொண்டார்கள். அச்சமயத்தில் அங்குவசித்திருக்கும் இராஜகூட்டங்களில் தாங்களுமொருவராக வந்திருக்கும் அமிர்தவசனன் தோழர்கள் எட்டுபேரும் ஆச்சரியமுற்று இவர்நமது அரசனேயென்று தீர்மானித்து சந்தோஷித்தார்கள். உடனே

No. 7.

அவந்திசுந்தரி கலியாணம்.

முடி சூட்டல்.

மந்திரிகள் அவர்களுக்கெல்லாம் சந்தனம் புஷ்பமுதலிய மரியாதைகள் நடத்திதேவாமிர்தம்போன்ற அறுசுவைபதார்த்தத்தோடு போஜனமளிக்க யாவரும் புசித்து தாம்பூலமருந்தி சபாமண்டபத்தில் உல்லாசமாக வீற்றிருந்தார்கள்.

அப்போது தோழர்கள் எட்டுபேரும்தனித்திருக்கும் அரசனைக்கண்டு, ஆனந்தங்கொண்டு அருகிற்சென்று ஆலிங்கனம் செய்துவணங்கிதங்களைவிட்டுப்பிரிந்து இவ்விடம்வந்த வரலாற்றைச் சொல்லவேண்டுமென்றுகேட்க, அமிர்தவசனன் மதங்கர் ஆசிரமம்வந்ததுமுதல் மகுடாபிஷேகம் வரையில் ஆதியோடந்தமாய் தெரிவித்து, இனி உங்கள் வரலாறுமுழுதும் தெரிந்துக்கொள்ள விருப்பங்கொண்டிருப்பதால் என்னகரத்திற்றனே யிருங்களென்றுசொல்ல அவர்களும் அக்கருத்துக்கிசைந்து அரசனுடேவாசமாயிருந்தார்கள். மறுநாள் பிரசண்டவர்மன் உத்திரவினல் வந்த இராஜகூட்டங்களுக்கெல்லாம் வெகுமதிசெய்தார்கள். பின்பு அமிர்தவசனன் தோழர்கள் தவிரமற்ற அரசர்களெல்லாம் உத்திரவுபெற்று தங்கள்தங்கள் தேசம்போய்ச்சேர்ந்தார்கள். இவ்வாறு அரசர்கள் போனசிலநாளையில் பிரசண்டவர்மனுகிய பெரியவரசன் தேகவியோகமடைந்தார். அமிர்தவசனன் அவருக்குவேண்டிய ஈமவிதிகளெல்லாம் தானேநடத்தி முன்போல் அரசுபுரிந்து வருநாளையில் ஒருநாள் அரசன் தன்தோழர்கள் விருத்தாந்தத்தைக் கேட்க ஆவல்கொண்டு அவர்களைப் பார்த்து சகோதரர்களே ! நீங்கள் என்னைவிட்டுப்பிரிந்ததுமுதல் நடந்தவரலாற்றைச் சொல்லுங்களென்று கேட்க தோழர்கள் சொல்லத்தொடங்கினர்கள்.

பிறைமதி.

தன்வரலாறுகூறுதல்.

ஓ- என்னிறைவனே! நாம் ஒன்றுகூடி மதங்கர் ஆசிரமம் வந்து தாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்துபோகவும் நாங்கள் வருந்தி அவ்வனாந்திரமெல்லாந் தேடியலைந்து அகப்படாமல் முடிவில் ஓர் பிரதிக்கினைசெய்துக்கொண்டோம் அதென்னவெனில், நமது அரசனைக்காணும்வரையில் ஒருவரையொருவர் சந்திக்கக்கூடாதென்று நிச்சயித்து எங்களுக்கிச்சையாகிய வழிசென்றோம். நானாகாடு-மலை-வனாந்திரமெல்லாம் சுற்றிக்கடைசியில்சரஸ்வதிபுரமென்னும் நகரத்தைச்சேர்ந்து அங்கிருக்கும் வனத்தையும் குளத்தையும்கண்டுசந்தோஷித்து அதிலிறங்கி ஸ்நானம்செய்து விருட்சத்தின்கீழ் சயனித்து நித்திரைசெய்யும்போது ஓர் சொர்ப்பனங்கண்டுவிழித்துப்பார்த்தேன். அப்போதுஎனக்குத் தெரிந்ததென்னவென்றால், ஒரு உன்னதமாகிய மாளிகையில் நான்மஞ்சத்தில் உட்கார்ந்திருக்கக்கண்டேன். என்னருகில் ஒரு மஞ்சத்தில் யவ்வனநாயகி பவ்வளித்திருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்று அவளுடைய வாலப்பருவத்தையும் மிதமில்லாதகாந்தியையும்பார்த்து ஆனந்தங்கொண்டு, இவள்யார்? மேனகையோ-அரம்பையோ-ஊர்வசியோ-திலோர்த்தமையோ- அல்லது தேவமாதோ வென்றெண்ணி நிதானித்துப் பார்க்கையில், அவள் முகத்தில் வழியும் வியர்வையினால் வையகத்தரசன் மகளாகுமென்று மதித்து அவள்மீதுகொண்ட காதலை சகியாதவனாய

ஆ-இதென்ன சௌந்தரியம்-இதென்னலாவண்யம்-என்றுரத்து க்கூவி அவளைப்பலதரம்தொட்டு முத்தமிடநினைத்தேன். அப் போது அவள் நித்திரையிலிருந்துவிழித்தெழுந்து என்னைநெறி ப்புடன்நோக்கி குறிப்புடன்பார்த்து, மாரன்வலையிற்சிக்கி, மதிம யங்கிசொக்கி, தத்தளித்து திகைத்து மனதுருகி, உள்ளங்கருகி இன்பம்பெருகி, அடா சாமி! இதென்னவிந்தை எனது தந்தை உம்மைத்தானு என்னை விவாகஞ்செய்துகொள்ளச் சொன்னது ஆ-என் ஜீவநாயகா! ஜீவரட்சகா! சிலைமதனைளிவைசசெலவி டும் வடிவா! எழுந்திரும் என்னிடம் வாரும் புதுபெண்ணுகிய வென்னைக்காரும், என்னருகி லுட்காரும், என்மனம்சோதிப்பத ழகா! என்வடிவிற்கிசைந்தகுழகா! நீமௌனஞ்சாதிப்பதைப்பார் த்தால் நான்கொண்டநாணத்தை நீர்கொண்டிருக்கின்றாப்போல் இருக்கின்றதே இதுவாச்சரியமேயென்று அவள் கையைச்சுழற் றி கன்னத்திலொத்தி-நெட்டையொடித்து பலபலவிதமாய்பேசி மனம்கூசி சற்றுயோசித்து தன்னருகிலிருக்கும் கடுதாசியொன் றையெடுத்து மைக்குச்சியால் என்னைப்பார்த்தவண்ணமாய்என் னமோயெழுதிக்கொண்டிருந்தனள்.

அப்போது நான் அவளைப் பார்த்தவண்ணமாய் இருக்கை யில் எனக்குண்டாகிய காமமயக்கத்தினல் மஞ்சத்தில் சாய்ந்தே ன். பின்பு எழுந்துபார்க்கையில் முன்போல் விருட்சத்தின் கீழ் படுத்திருந்தேன், அப்போதெனக்குண்டாகிய ஆச்சரியத்திற்கு அளவிடக்கூடாமல் நான் கண்டது உண்மையா யிருக்குமாகில் என்னெதிரில் ஒருவஸ்துவுங் காணவில்லையே ஒருவேளை கின வோ அல்லது நினைவோ வென்றுசந்தேகித்து, நான் இதினுண் மையைத்தெரிந்துக்கொள்ளும் வரையில் இவ்விடம் விட்டகலக் கூடாதென்று நிச்சயித்திருந்தேன். அச்சமயத்தில் யாரோ ஒரு ஸ்திரீயானவள் மகாரூபவதியாய் கருத்தஉடையைத்தரித்துசிரி த்தகுறியோடு என்னெதிர்வந்ததைக்கண்டு சாஷ்டாங்கமாக நம ஸ்கரித்தேன், அப்போதவளென்னை வாரியெடுத்து முத்தமிட்டு ஆ-என்னருமைக்கண்மணியே! நான்தான் உன்னை இச்சந்தே கத்திற்குள்ளாக்கினவள், நீகண்டதுகினவல்ல உண்மையே அத ற்கு காரணம்யாதெனில், நீ இராத்திரிகண்ட இராஜஸ்திரீயை மணஞ்செய்து அந்நகரத்துக்கு அரசனுகப்பட்டந்தரித்து உன்

அரசகுமாரனைக்காணுவாயென்றாள். அதைக்கேட்ட நான் அம்மா! நீயார்? எனக்கிந்த நன்மைதேடியகாரணமென்னவென்றேன், அதற்கவள் அடா சுதனே! அம்ஸராஜன் மந்திரியாகிய உன் தந்தை சுமதியென்பவர் ஒருநாள் காட்டின்வழி வரும்போது நானவரைக்கண்டுமோகித்தேன். அதற்கவர்என்மேலகோபித்து இசையவில்லை நானவருடன் வாதிட்டிருக்கையில் என்கணவன் அவ்வழியேவந்து உன்தந்தையையு மென்னையுங்கண்ணுற்று சிந்தைநொந் தென்னைநோக்கி அடிசதிகாரி! நீயட்சஸ்திரியாகவிருந்தும்மானிடன்பேரில் மோகித்து என்னைவஞ்சித்தாயல்லவா! ஆதலால் நீ அவனுக்கடிமையாகுமென்றுசபித்தார். அதைக்கேட்டுநான்பயந்து அவரைவணங்கி ஓ-நாதா! அடியாளைமன்னித்து சாபநிவாரணம் செய்யவேண்டுமென்றேன், அதற்கவர்மனமிரங்கி மூன்றாண்டுசென்றபின் என்னிடம்வருவாயென்றுசென்றனர். அதுமுதலிதுவரையில் உன்தந்தையுடன் விந்தையோடு வாசம் செய்துவந்தேன். இன்று இவ்வழியாய் வருகையில் விருட்சத்தின்கீழ் நீ நித்திரைசெய்வதைப்பார்த்து என்னாசைநேசன்புத்திரனென்றும் உன்னை இந்நகர் அரசன்குமாரத்தியாகிய நவமாலிகா இடத்திற் கொண்டுபோய்விட்டு அவளையும் உன்னையும் பிரமிக்கச்செய்தேன். ஆனதால் நீ அவள் தந்தையை யறியாமல் மணம்புரிந்தால், நிந்தையாகுமென்றெண்ணி உன்னைமறுபடி யிவ்விடத்திற் கொண்டுவந்து விட்டேன், அவள் உன்மீதில் காதல் கொண்டிருப்பதால் நீ சாமபேத தான தண்டத்தால் அவளைமணஞ்செய்யவேண்டும், இன்றோடு என்சாபம் நிவர்த்தியாய்விட்டதென்றுசொல்லிமறைந்தனள்.

ஓ-என்னரசனே! இதுகளைக்கேட்ட யான் ஆனந்தங்கொண்டு எப்படியாகிலும் நவமாலிகாவைக்கண்டு மணஞ்செய்யக்கருதி புறப்பட்டு வரும்வழியில் ஜனங்கள் கூட்டமாயிருப்பதைப் பார்த்து அருகிற்சென்றேன். அவ்விடத்தில் ஒருபிராமணனைபாம்புகடித்து மரணாவஸ்தை படுவதையும் சிலர்வேண்டிய உபசரணை செய்வதையுங்கண்டு நானுடனே அதற்குவேண்டிய மூலிகைதேடிக்கொணர்ந்து அப்பிராமணன் நாவிலும் கடியுண்டவாயிலும்பிழிந்தேன், உடனே அப்பிராமணன்மூர்ச்சைதெளிந்தெழுந்து என்னைவணங்கி ஓ-உயிரளித்த உத்தமனே! வா-வென்று

தன்னுட னழைத்துச் சென்று, எனக்கு வேண்டிய உபசரணை கள் செய்துவந்தான். நானும் அவனிடமே சிலநாளிருந்து ஒரு நாள் உம்மைக்காண முயற்சிதேட நினைத்ததுமன்றி, இந்நகரத்த ரசன்குமாரத்தியாகிய நவமாலிகாவை எவ்விதம்காணப்போகின் றோ மென்னும் யேக்கத்துடன், தூக்கமின்றி அப்பிராமணனை வணங்கி ஓ-சுவாமி! எனக்கோருதவி செய்யவேண்டும், அதென் னவெனில், இந்நகரத்தரசன்குமாரத்தி வாசஞ்செய்யும் அந்தப் புரத்தருகில் என்னையழைத்துப்போக வேண்டுமென்று கேட் டேன், அவனதற்கிசைந்து நவமாலிகா பூங்காவனத்திற் கொண் டுபோய்விட்டு அப்பா! என்னுல் உனக்கு ஆகவேண்டிய உதவி யேதேனுமிருந்தால் எனக்குத் தெரிவியுமென்றுசொல்லிப்போ ய்விட்டான். பின்பு நான் அங்கிருக்கும் விநோதங்களைக்கண்ணு ற்று ஒரு விருட்சத்தினடியி லுட்கார்ந்திருந்தேன். அப்போது ஓர் அழகியநாயகி என்சமீபத்தில் வந்துநின்று தன்கையில் ஒரு உருவப்படத்தையெடுத்து என்னையும் அப்படத்தையும் இடை விடாது பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது நானவளைநோ க்கி நீயார்? இங்குதனித்து வரவேண்டிய காரணமென்னவென் றுகேட்டேன், அதற்கவள் ஐயா! நான் இந்நகர் அரசன் குமாரத் தியின்பாங்கி பூங்காவைச் சுற்றிப்பார்க்கவந்தேனென்றாள். இப் படி நாங்களிருவரும் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் அவ ளென்னைநோக்கி ஐயா! உம்மைப்பார்த்தால் தேசசஞ்சாரியாக வும் இந்நகரத்திற்குப் புதியமனிதனுகவுமிருக்கின்றது, மேலும் தங்களுக்குச் சரியானகாலபோஜனமில்லாமல்தேகம் இளைத்திரு க்கிறது, என்வீட்டுக்கு வந்தால் சுகமாயிருக்கலாமென்றாள். நா னதற்கிசைந்து அவளுடன்சென்றேன் அவளென்னை வீட்டிற் கழைத்துப்போய் போஜனமளித்து உபசரித்தாள்.

அன்று சாயங்காலம் அவளென்னைநோக்கி தாங்கள் அநே க தேசங்களிற் சஞ்சரித்துவந்தீரோ! ஏதாவது அற்புதத்தைக் கண்டால் அதை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றாள். இப் படி நாங்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் என்னெதிரில் சுவரில்கட்டியிருக்கும்படத்தைப்பார்த்தேன், அதில்நான்கண்ட மாளிகையும் என்னைப்போல் உருவமும் இருக்கக்கண்டு ஆச்சரிய முற்று, இவளால் நாம் நாடிவந்தகன்னிகை கிடைப்பாளென்றெ

ண்ணி அவளைநோக்கிஅம்மா! அதோயிருக்கும்படத்தை எனக்குக்காண்பிக்கவேண்டுமென்றுகேட்டேன், அவளதையெடுத்து என்கையிற்கொடுத்தாள். நானதைப்பார்த்து முன்னம் நவமாலிகாவைக் கண்டபோது அவளென்னைப் பார்த்தவண்ணமே ஒரு கடிதமெழுதினளே! அது என்னைப்போன்ற உருவமெழுதினளென்று ஆச்சரியமுற்றுஅவள்சாமர்த்தியத்திற்குமெச்சி, நான் கண்டஸ்திரீயைப்போல் என்னுருவத்தருகில் அவள்படுத்து நித்திரைசெய்யும் பாவனையாகஎழுதி அவள்கையிற்கொடுத்தேன்.

அவளதைப் பார்த்து சந்தோஷத்துடன் என்னைநோக்கி நீர்கண்ட விந்தையை என்னிடஞ் சொல்லுமென்றனள். நானவளுடன்சொன்னதாவது ஓர்காட்டில்நான்படுத்து நித்திரைசெய்யும்போது ஆச்சரியமான கினவுகண்டேன்அதென்னவெனில், இதோ எழுதியிருக்கும் இராஜஸ்திரீயைக்கண்டேன் நான்கண்டதுபோல் உருவப்படம் இருப்பதால் கினவென்பதற்குச்சந்தேகப்படுகிறேன். ஆதலால் இதின்வரலாறு உனக்கேதாகிலும்தெரியுமாவென்று கேட்டேன், அதைக்கேட்டவுடனே அவள்புன்சிரிப்புடன் என்னைநோக்கிச் சொன்னதாவது நீர்கண்டது கினவல்ல அது உண்மைதானென்று நடந்தசவிஸ்தாரங்களெல்லாம் ஆதியோடந்தமாகச்சொல்லி இராஜஸ்திரீயாகிய நவமாலிகா உம்மைக்கண்டுமோகித்துஉமதுஉருவப்படமெழுதிஎன்கையிற்கொடுத்து தேடும்படிசொல்ல தேவானுகூலத்தால் உம்மைக்கண்டு சந்தோஷமுற்றேன். ஓ-அரசகுமாரனே! உம்மைக்கண்ட சங்கதி எனதரசிக்குத்தெரிவித்தால் அவளானந்தமடைவாளென்றுசொல்லி என்னிடம்விடைப்பெற்று அரசியிடம்சென்று என்வரலாறுமுழுதும்தெரிவித்து, அவளும் என்மேல்காதல்கொண்டிருப்பதால் என்னையழைத்துவரும்படி சொல்லினளென்று என்னிடம்வந்துசொல்ல யானவளைநோக்கிச் சொல்லியதென்னவெனில், உனதரசியை சிலநாள் மனம்பொருத்திருக்கச் சொல் நான்வந்துகாணுகிறேனென்று அவளிடம் விடைபெற்று நவமாலிகாவைச் சந்திக்கயோசித்துப்புறப்பட்டு என்னையாதரித்த பிராமணனிடம்போய் அவரைக்கண்டுநமஸ்கரித்தேன். அவர்என்னைநோக்கி அரசகுமாரனே! நீர் என்னைத்தேடிவந்த காரியமென்ன தெரிவித்தால் என்னுல் கூடிய உதவிசெய்கிறேனென்றார்.

அதைக்கேட்டு ஓ-சுவாமி! நானிந்நகரத்தரசனாகிய தருமவர்த்தனனுடையகுமாரத்தி நவமாலிகாவை தந்திரமாக மணஞ்செய்ய வழிதேடிவந்தேனென்றேன். அதுகேட்டு பிராமணன் நீர் என்னவழிதேடிவந்தீர் சொல்லுமென்றுகேட்க, அதற்கு நான்சொன்னதாவது ஓ-சுவாமி! நான் ஸ்திரீவேடந்தரித்துக் கொள்ளுகிறேன், என்னையழைத்துக்கொண்டுதருமவர்த்தனனிடம்போய்ச் சொல்லவேண்டியதென்னவெனில், அரசனே! இவள் என்குமாரத்தி இவளுக்குத்தகுந்தமாப்பிள்ளையைப் பார்த்துவைத்திருக்கிறேன், அவனோ நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைகற்றிருக்கிறான், மகாபராக்கிரமசாலி எல்லாவித்தைகளிலும் தேர்ச்சியுடையவன் உச்சினியோங்காளி நகரத்திலிருக்கிறான். நான்போயவனை யழைத்துவந்து இப்பெண்ணை மணம்புரிவிக்கவேண்டுமாகையால் நான் போய்வருமளவும் தங்கள் குமாரத்தியைப்போல் பாதுகாக்கவேண்டுமென்றுசொல்லி, என்னை அரசனிடம் விட்டுவிட்டால் நான் இராஜஸ்திரீயை வசப்படுத்திக் கொள்ளுகிறேனென்றுசொல்ல, அவரும் அதற்கிசைந்து ஸ்திரீவேடம் தரிக்கச்செய்து அரசனிடம் அழைத்துப்போய் நான் சொல்லியவண்ணம் தெரிவிக்க, தர்மவர்த்தனனும் அதற்கிசைந்து தாதியையழைத்து என்னை நவமாலிகா வாசஞ்செய்யும் அந்தப்புரம் அழைத்துப்போகச்சொல்லி பிராமணனுக்கு விடைகொடுத்தனுப்பினார்.

பின்பு நான் இராஜபுத்திரியாகிய நவமாலிகாவைக் கண்டு வந்தவரலாற்றைத் தெரிவித்து அவளோடு சந்தோஷமாய் சுகித்திருந்தேன். இவ்வாறிருக்கையில் ஒருநாள் அவளை நோக்கி என்கருத்துக்கிசைந்த காதலியே! நாமிப்படிக்கிருப்பதில் பயனில்லை, உன்தந்தையின் அநுமதியின்பேரில் உன்னைமணம்புரியவேண்டுமாகையால் நானொரு ரகசியம் சொல்லுகிறேன் அதென்னவெனில், நீயும் நானும் சிலதாதிகளுமாகப்போய் கங்காநதியில் ஸ்நானஞ்செய்வோம், அச்சமயத்தில் நான் வெள்ளத்திலகப்பட்டவள்போல் கூக்குரலிட்டு ஜலத்தில்முழுகி உங்கள் கண்களுக்குப்புலப்படாமல் போய்விடுகிறேன் அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம், யான்வெகுசீக்கிரத்தில்வந்து உன்னை மணம்புரிகிறேனென்று அவளுக்குத் தெரிவித்து மறுநாள் நாங்களியாவ

ரும் கங்காநதியில்போய் ஸ்நானஞ்செய்துக்கொண்டிருக்கையில நான் நடுஜலத்தில்போய் கூக்குரலிட்டு முழுகியாருக்குந்தெரியாமல் வெகுதூரம்சென்றுகிளம்பி கரையேறி பழையபடிபிராமணன் வீடுவந்துசேர்ந்து நடந்தவரலாற்றைத்தெரிவித்தேன். இங்ஙன மிப்படியிருக்கையில் கங்காநதியில் பிராமணஸ்திரீ இறந்துபோய்விட்டாளென்று யாவரும் அழுதுக்கொண்டுபோய் அரசனிடம்தெரிவிக்க, அரசன்பயந்து வலைஞர்களையனுப்பி தேடிப்பார்த்துங் காணுமல் பிராமணன் வந்துகேட்டால் என்னசமாதானம் சொல்லுவதென்று விசனமுற்றிருந்தான்.

இவ்வாறிருக்கையில் நான் பிராமணனைநோக்கி ஓ-சுவாமி! இராஜகுமாரர்தரிக்கும் உடைகளைத் தரித்துக்கொள்ளுகிறேன், நீரென்னை யழைத்துக்கொண்டு அரசனிடம் சென்று ஆசீர்வதித்து மகாராஜா! இதோ என்மருகனையழைத்துவந்தேன், என் குமாரத்தியை யனுப்புமென்று கேட்பீராகில் அரசன் என்ன சொல்லுகிறுனே பார்ப்போம் என்றேன். அவரும் அதற்கிசைந்து என்னை யழைத்துக்கொண்டு அரசனிடம்போய் நின்றுர். அப்போது பிராமணன் அரசனைநோக்கி மகாராஜா! நான் உச்சினிபுரத்திலிருந்து இன்றுதான் வந்தேன். என்குமாரத்தியை யனுப்பும் முகூர்த்தநாள் நியமித்திருக்கிறேனென்றுன். இதுகளைக்கேட்ட அரசன்பயந்து மௌனமாயிருந்து சற்றுநேரம்யோசித்து சுவாமி! மன்னிக்கவேண்டும் தங்கள் குமாரத்தியும் என்குமாரத்தியும் கங்காஸ்நானஞ்செய்யப்போய் தங்கள் குமாரத்திமரித்தனளென்றுன். அதைக்கேட்ட பிராமணன் மார்பிலடித்துக்கொண்டு திடீரெனவிழுந்து மூர்ச்சையடைந்து சற்றுதெளிந்து சொல்லுகிறுன் ஓ-மகாராஜா! எனக்கு நெடுநாள் சந்தானமில்லாமல் விரதமனுஷ்டித்து தேவானுகூலத்தால் பிறந்தவள் மகாசுகுணவதி, இவளுக்குத்தகுந்தநாயகன் எங்குகிடைப்பானேவென்றெண்ணித் தேடிவருகையில், உச்சினியில் கண்டேன் நானெண்ணிய வெண்ணம் நிறைவேறுமல் இவளிறந்து விட்டதால் தோஷமில்லே, இப்பிராமணசிறுவனைப்பற்றி விசனப்படுகிறேன் அதென்னவெனில், இவனே நான்கு வேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்குகலே கற்றவன் அதுவல்லாமலும் யானையேற்றம் குதிரையேற்றம் ஆயுதப்பயிர்ச்சிமுதலிய எல்லாவித்

தைகளிலும் வல்லபுருடன் பட்டாபிஷேக துறந்தரனுகிய இவ்வுத்தமனுக்கு எனதுபுத்திரியைப் பாணிக்கிரகணஞ்செய்து பார்க்காதபாவி இருந்தென்ன பிரயோசனம், ஓ-மகாராஜா! நீர்செய்த நன்மைக்கு எனது சிரசைவெட்டி உமதுவாசற்படியில் போட்டுவிடுகிறேனென்று வாளையெடுத்து வெட்டிக்கொள்ளப்போகையில் அரசன்கண்டுபயந்து ஓடிவந்து வாளைப்பிடித்துக்கொண்டு ஓசுவாமி! வேதகுலத்துங்கரே! பொரும் பொரும் தங்கள் கருத்துபோல் இப்பிள்ளை இராஜ அம்சைபெற்றவனு யிருப்பதால் எனது குமாரத்தியைப் பாணிக்கிரகணம்செய்து தருகிறேனென்று சமாதானப்படுத்தி, நகரையலங்கரித்து நல்லசுபமுகூர்த்தத்தில் விவாகம் நடத்திபிராமணனுக்கு வேண்டியவெகுமதிசெய்தனுப்பி என்னையவரிடமிருத்தி விருந்துமுதலியமரியாதைசெய்ய, நானும் நவமாலிகாவும் சிலநாள் அவ்விடம் வாசஞ்செய்துவருகையில் மறுமன்னர்படையெடுத்துவர யானும் எனது மாமனும் சென்றுபோர்புரிந்திருக்கையில், எனக்குத் தெரியாமல் என்மாமனைக்கொன்று விட்டனர் யானறிந்து அவர்களுடன் போர்செய்து யாவரையும் தோல்வியடையச் செய்து படைகளைக்கூட்டி நகரம்வந்து பட்டங்கட்டி சுகமுற்றிருக்கையில், தங்கள் பட்டாபிஷேக ரூபம்கண்டுவந்தேனென்றான். இதைக்கேட்ட அமிர்தவசனன் மனக்களிப்படைந்து ஆ-என்னருமை சகோதரா! நீயாதொரு அபாயமின்றி தந்திரமாக அரசாங்கத்தைக் கைக்கொண்டாய் இதுதான் புத்திசாதுரிய மென்று மெச்சினன்.

புஷ்கரன்.

தன்வரலாறுகூறுதல்.

ஓ-என தாருயிர்போன்ற அரசனே! தாங்களெங்களை விட்டுப்பிரிந்துபோகவும் நாங்கள் ஒன்றுகூடி ஒரு பிரதிக்கினைசெய்து தனித்தனிசென்றோம். நானோ ஆகாரம் நித்திரையின்றிவருந்திதேடிவருகையில் தர்மபுரியென்னும் நகரத்தருகில்வந்தேன். அவ்விடத்தில் ஓர் பூங்காவனத்தைக்கண்டு வழிநடந்த ஆயாசந்தீர்த்துக்கொண்டு நகரத்துள் போவோமென்று வருகையில் வழியில் ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடியிருப்பதைப் பார்த்து என்னமோ விசேஷமான தினமென்றெண்ணி அப்பால் சென்றேன். அவ்விடத்தில் ஆலமரத்தின்கிளையில் ஒருவன் உட்கார்ந்துக்கொண்டு புள்ளாங்குழலை வாசித்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவனைநோக்கிஐயா! இந்நகரத்திலென்னவிசேஷம், ஏன் ஜனங்கள் இவ்வளவு விபரீதமாகவருகிறார்கள், நீமாத்திரம் தனியே விருட்சதின்பேரில் உட்கார்ந்திருக்கின்றாய், இதின்வரலாற்றை தயவுசெய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டேன். அதற்கவன் சொன்னதாவது, ஐயா! இந்நகரத்தரசனாகிய துங்கத்துவாஜ வென்பவருக்குநெடுநாள் புத்திரசந்தானமில்லாமல் தானும் தன்மனைவியாகிய நிதம்பாவதியும் விந்தியவாசனி யென்னும் பராசத்தியின் சன்னதிக்குச்சென்றுவணங்கி, பைரவி நீலி மாதங்கி நாராயணி அடியேனுக்கு சந்தானமளிக்கவேண்டுமென்று, பலவாறுதோத்திரம்புரிந்து வருகிறநாளில், விந்தியவாசனி

ஒருநாள் துங்கத்துவானு சொர்ப்பனத்திற் தோன்றி ஓ-அரச னே! உனக்கு ஓர்ஆணும் பெண்ணும் பிறக்கும், அப்பெண்ணை எவன் மணம்புரிகின்றானோ அவனே இந்நகரத்தை அரசாளு வான். அப்பிள்ளை அவனுளுகைக்குட்பட்டிருக்கவேண்டும் ஆ னுல் அப்பெண்ணுக்கு ஏழுவயதுமுதல் மாதமாதம் பௌர்ண மிதிதியில் என் சன்னதியில்வந்து நடனம் செய்யவேண்டியது, அக்காலத்தில் அவளுக்குத்தகுந்த கணவனை அவளே தெரிந்து க்கொள்ளுவாளென்று சொல்லிப்போனுன்.

அவ்வாறே அரசனுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது பிள்ளைக்கு பீமத்துவானு வென்றும், பெண்ணுக்கு கந்துகாவதி யென்றும், நாமகரணமளித்துவளர்த்து ஏழுவயது முதல்பருவ காலமடைந்தும் நடனம்புரிந்து வருகிறாள். இன்றையத்தினம் பௌர்ணமிதிதியாகையால் அப்பெண்வழக்கப்படி நடனம்புரிய சன்னதிக்குப்போகிறாள், ஆனதால் ஜனங்கள் இவ்வளவு விசே ஷமாக வேடிக்கைப்பார்க்க வருகிறார்களென்றான் அதைக்கேட் டு நானவனைநோக்கி உன்பெயரென்ன நீ ஏன் ஒண்டியாய் இக் குழலைவாசிக்கின்றாயென்றேன் அதற்கவன் ஐயா! என்பேர் குச தாசன் நான் கந்துகாவதியின்தோழியாகிய சந்திரசேனு என்ப வளுக்காக இங்கு காத்திருக்கிறேன். அவளோகந்துகாவதியுட ன் வரும்போது இச்சத்தங்கேட்டு இங்குவந்து என்னிடம்பேசி ப்போவாளென்றுசொல்லிக்கொண்டிருக்கையில், காற்சிலம்பின் சத்தங்கேட்டது நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை நிறுத்திவி ட்டோம். அப்போது ஓர் சௌந்தரியவதி குசதாசனிடம் வந்து பேசினுள் குசதாசன் என்னைநோக்கி சினேகிதா! நான்சொன்ன ஸ்திரீயானவளிவள்தானென்றான் அதுகேட்டு நானவளை உட் காரும்படி சொல்லி நாங்கள் மூவருமாகப்பேசிக்கொண்டிருக்கை யில், அவள் குசதாசனைநோக்கிச் சொன்னதாவது ஆ-என்பிரா ணநேசனே! நாம் இவ்விதமாகயிருப்பது அசாத்தியமான காரி யம் நீ உடனே என்னுடன்புறப்பட்டுவந்துவிட்டால் எங்கேயா கிலும் போய்ஜீவித்திருக்கலாமென்றாள். அதற்கு குசதாசன்நாம் இந்நகரைவிட்டுப் போவோமானுல் துங்கத்துவனு கேட்விப்பட் டால் நம்மைப்பிடித்து தெண்டிப்பானே என்செய்வேன் என் ஆசைநாயகி! உன்னைவிட்டு சற்றுநேரம் பிரிந்திருக்க எனக்கு

மனதில்லையே யென்று பலவாறுசிந்தித்திருக்கையில், நாட்டியம் ஆரம்பிக்க மணியடித்த சத்தங்கேட்டது அதைக்கேட்டவள் துரிதமாகப்போய்விட்டாள். நானும் எனதுவரலாற்றை குசதாசனுடன் சொல்லிக்கொண்டு வருகையில், அவனென்னை நோக்கி சினேகிதா! நாமிருவரும் நடனம் புரிவதைபோய்ப்பார்ப்போம், ஒருவேளை தேவானுகூலத்தால் கந்துகாவதி உன்னைப்பார்த்து உன்மீதுகாதலுற்று உம்மைமணம்புரிந்தால் நீர் பட்டத்தரசனாவீர் அப்போது யாவரும் உமது ஆளுகைக்குட்படுவார்கள், நானும் சந்தரசேனாவும் அச்சமற்று இச்சையாய் வாழ்ந்திருப்போம். தெய்வசங்கல்பமெப்படி நடக்குமோ தெரியாது ஆனதால் நீரென்னுடன் வாருமென்றுசொல்ல, நானும் அதற்கிசைந்து அவனுடன்போய் கந்துகாவதி நடிப்பதைப்பார்த்து பிரம்மித்தவனாய், மின்னலொளிபோலும், சூரியப்பிரகாசம்போலும், சொர்னமயமாய் விளங்கும் சூஸ்திரப்பாவைபோலும், அம்புயத்தின் மேலிருக்கும் அன்னப்பறவைபோலும், பச்சைமலர்க்கொடியிலிருக்கும் பஞ்சவர்னக்கிளிபோலும், பிரகாசிக்கும் பாவையைக் கண்டு காமமீறி கலக்கமுற்றவனாய் (பாதைவழி செல்லுகையில் பணப்புதையல்கண்டதுபோல்) அம்மாது நிர்த்தனம் புரிவதை நிமைகொட்டாமற்பார்த்து நின்றேன். அவளும் நானும்குசதாசனும் வந்ததுமுதல் என்னையே பார்த்துக்கொண்டு என்மேல் காதலுற்று ஆட்டம் முடிந்தவுடன் கந்துகாவதி கண்சைகை செய்து, தனது தோழியாகிய சந்தரசேனாவின் தோளின்பேரில் கையை ஊன்றிக்கொண்டு திரும்பித்திரும்பி என்னையே பார்த்துக்கொண்டு அரண்மனை சென்றனள்.

அவ்வாறு சென்றபின்நானும் குசதாசனும்பழையபடி ஆலமரத்தடியில்வந்து சேர்ந்தோம், அரண்மனைக்குப்போன கந்துகாவதி தன்தோழியைநோக்கி சந்தரசேனா! நாம் சந்நிதிக்குச்சென்று நடித்திருக்கையில் ஓர் அழகனைக்கண்டு ஆசைகொண்டேன். அவன்வசிக்குமிடம் உனக்குத்தெரிந்தால்அவனை இங்கழைத்துவா என்கருத்தை முடித்துக்கொள்ளுகிறேனென்றாள். அதைக்கேட்ட சந்தரசேனா முன்னமேகந்துகாவதியின் கருத்தைத்தெரிந்தவளாதலால் அவளைநோக்கி அம்மா இராஜபூஷணமே! நீகோறிய சுந்தரனை நாளையத்தின மழைத்து வருகிறேனென்று

அவளிடம் விடைபெற்று, நாங்களிருக்கும் ஆலமரத் தடியில் வந்து நடந்தசவிஸ்தாரங்களை எங்களோடு தெரிவித்தாள். நான் மனக்களிப்படைந்து அவளைநோக்கி சந்தரசேனு! நீ நாளையத் தினம் பூங்காவனத்தருகில் அவளை யழைத்துவந்தால் நான் வந்து காணுவேனென்றுசொல்ல, அவளும் அதற்கிசைந்து எங்களிடம் விடைபெற்று அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தாள். இராஜஸ்திரீயாகிய கந்துகாவதி தோழியைநோக்கி சந்தரசேனு! நானென்றுசொல்லுவேன், நேற்றையதினம் கண்ணுற்றகாதலன்கிடைப்பானோ வென்கிற சந்தேகங்கொண்டிருக்கிறேன், நீ போய்வந்த சங்கதி யென்னவென்றுவினவினள். அதற்கு சந்தரசேனு அம்மா இராஜரத்தினமே! நீகோரியநாயகனை என்தந்திரத்தால் வசப்படுத்தி இன்றையத்தினம் நம்மிட பூங்காவனத்தருகில் வந்திருக்கும்படி சொல்லிவிட்டுவந்தேன், ஆகையால் நாமிருவரும் அவ்விடம்போனால் காணலாமென்றாள். அவளும் அதற்கிசைந்து மாலையில் நல்லவஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டு அவ்விடம்வந்தாள், நானும் அதற்கு முன்னமே அப்பூங்காவைச்சேர்ந்து அங்குள்ள விநோதங்களைக்கண்ணுற்று சந்தனவிருட்சத்தின் நிழலில் உட்கார்ந்திருந்தேன். அச்சமயத்தில் கந்துகாவதியும் அவள்தோழி சந்தரசேனுவும் பூங்காவைச்சுற்றிப்பார்த்து என்னருகில் வருகையில், நானவளழகைக்கண்டு ஆனந்தங்கொண்டு வேதன்இம்மாதை சூதாகச்சிருஷ்டித்தானென்றெண்ணி அவளருகிற்சென்று ஆ- என தாசைக்கிசைந்த அன்னமே! என்மேல் கருணைகூர்ந்து இவ்விடம் உன்னை வரச்செய்ததற்கு மன்னிக்கவேண்டுமென்றேன். அதற்கவள் புன்சிரிப்புடன் என்னைநோக்கி ஆ-என் கருத்துக்கிசைந்த காதலனே! என்னையாட்கொள்ளுமென்றாள்.

இவ்வாறாக நாங்களிருவரும் சரசவார்த்தை யாடிக்கொண்டிருக்கையில் அவள் சகோதரனான பீமத்துவானு அவ்விடம் வந்து எங்களைப்பார்த்து, மகாகோபத்துடன் என்கையைப் பிடித்துக்கொண்டு அடா துஷ்டப்பயலே! நீ அச்சமின்றி இங்கெப்படிவந்தாய் உன்னையார் இங்கழைத்துவந்தவர் அடாமூர்க்கா! பராசத்தி சொல்லியவண்ணம் என்சகோதரியை மணஞ்செய்து இராகரத்தை பட்டந்தரித்து என்னையும் உனது அடிமையாக்

கிக்கொள்ள எண்ணமுற்றோ நீ அவனுடன் பேசிக்கொண்டிருக்கின்றாய், அடாசவமே! உன்னிஷ்டம் நஷ்டமாகும்படி செய்கிறேன் பாரென்று தன்னுடன்வந்த காவலனைநோக்கி இவன்கைகால்களில் விலங்கிட்டு சமுத்திரத்திற் போட்டுவிடும்படிசொல்லி, அடா திருடா! நீ ஜலத்தைக்கட்டி ஆளென்றுசொல்லிப்போனான். பின்பு காவலாளிகள் என்னைப்பிடித்துக்கட்டி விலங்கிட்டு சமுத்திரத்திற்போட்டு விட்டார்கள். அப்போதெனக்கு தேவானுகூலத்தால் ஒரு மரக்கட்டைகிடைக்க அதைப்பிடித்துநீந்த சகதியில்லாமற் தத்தளித்திருக்கையில், அச்சமயத்தில் ஓர் வியாபாரியின் கப்பல்வருவதைக்கண்டு பெருங்கூச்சலிட்டேன், அதைக்கேட்டு கப்பல்மாலுமி என்னிடம் வந்துபார்த்து என்னையெடுத்து விலங்குடன் தன்கப்பலில் போட்டுபிரயாணப்படுகையில், என்னைக்கட்டிக்கடலில்தள்ளியகாவலர்கண்டுதனது எஜமானாகிய பீமத்துவானனிடமோடி இக்கூடர்ததைதெரிவிக்க, அவனும் சிலபண்டைகளைக்கூட்டி கப்பலேறிவந்து என்னையெடுத்த மாலுமியையெதிர்த்துயுத்தஞ்செய்ய, அவன்பயந்து என்னால் கலகம்நேரிட்டதென்று என்னைப்பழையபடி சமுத்திரத்திற்போட்டினைத்து என்னிடம்வர நானவனைநோக்கி ஐயா! என்கைகால்களில் இருக்கும் விலங்கைத்தறித்துவிடும் ஒரு க்ஷணத்தில் எதிரியைவெல்லுகிறேன் என்சாமர்த்தியத்தைப் பாரென்றுசொல்ல அவனும் அதற்கிசைந்து விலங்கைத்தறித்துவிட நான்வில்லம்பெடுத்து அரசகுமாரனாகிய பீமத்துவானுவின்பேரில் யுத்தஞ்செய்து சேனைகளை முறியவடித்து அவனையும் பிடித்துக்கட்டிசிறைச்செய்து அடா துஷ்டப்பயலே! என்னை ஜலத்தைக்கட்டி ஆளும்படிசொன்னாயல்லவா அப்பட்டம் உனக்கே கட்டிவிட்டேனென்றுசொல்லி மாலுமியைநோக்கி, உன்பிரயாணத்தை நடத்தலாமென்றேன். இதுகளைக் கண்ணுற்றமாலுமி பயந்து எனக்குவேண்டிய உபசரணைசெய்து என்னைத்தனது குருவாகப்பாவித்து கப்பலைநடத்தினான்.

நாங்களும் கொஞ்சதூரம் போகையில் ஓர் தீவைக்கண்டு மாலுமி நங்கூரம்போட்டான். நான் மாத்திரம் அவ்விடத்திலிறங்கி ஆயாசந்தீர்த்துக் கொள்ளச்சென்றேன், அங்கு ஓர் சோலையும் தடாகமுமிருக்கக்கண்டு சந்தோஷித்து அதிலிறங்கி ஸ்நா

T. 18388

னஞ்செய்து வழிபடுகடவுளைத்தொழுதுகரையேறி, அச்சோலையின்வளத்தைக்கண்ணுற்றுவருகையில், இரண்டுவானம்பாடிபறவைகள் சண்டையிட்டுக்கீழேவிழ நான் அதனழகைக்கண்டு பிடிக்கப்போகையில் அதில் ஒன்றுமாத்திரம் அகப்பட்டது மற்றது பறந்துவிட்டது. அதைப்பிடித்து வந்தவழியே திரும்பிவருகையில்பார்க்கவிகாரமாயும், கோரதந்தமும்,செம்பட்டமயிரும்,நீண்டமூக்கும், தொங்குகின்றபுருவமும், பருத்த கைகால்களும், கருத்தமேனியும் அக்கினிபோன்ற கண்களும் காத்திரம்பொருந்திய தேகத்தோடு முப்பதடி உயரமுள்ள ஒரு அரக்கன் எதிர்வர நானவனைக்கண்டு ஒதுங்கி ஒருபக்கமாய்வருகையில்,அவன் என்னைப்பார்த்து பெருங்கூச்சலிட்டு அடாபயலே! இதுவரையில் என்தீவில் மானிடன்வந்ததில்லை நீயார்! அச்சமின்றிஇங்குவந்த காரணமென்ன!உடனேதெரிவியென்றான்? இதைக்கேட்டநான் இவனோடு விரோதிக்கலாகாதென்று வணக்கத்துடன் என்வரலாற்றைச்சொல்லி ஐயா! இங்கு ஸ்நானஞ்செய்யவந்தேன் மன்னித்து விடைகொடுமென்றுகேட்டேன், அதற்கவன் அடா உன்னைச் சும்மாவிடுவேனு நீயோ தைரியசாலியாயும் சாமர்த்தியனுயுமிருப்பதால் உன்னை மூன்றுவினு கேட்கிறேன், அதற்குத் தக்க விடைகொடுத்தால் உன்னைவிடுவேன் இல்லாவிடிற் கொன்று தின்றுவிடுவேன் என்றான். அதைக்கேட்டநான் கடவுள் எத்தனப்படி நடக்குமென்றெண்ணி ஐயா! தாங்கள் கேட்கவேண்டிய கேள்விகளைத் தாராளமாய் கேட்கலாமென்றேன் அதற்கவன் சொன்னதாவது:—

1. வினு, மனிதனுக்கு குரூரமென்பது யாராலுண்டாகின்றது?

   விடை. துஷ்டஸ்திரீகளின் நடத்தையினுல்தான்.

2. வினு, குடும்பத்திற்கு அவசியம் வேண்டுவதென்ன?

   விடை. கற்புடைய மனைவிதான்.

3. வினு, மோகமென்பது என்ன?

   விடை. ஆசைப்படுவதுதான்.

இவ்வாறு மூன்றுவினுவிற்கும் விடைசொன்னதும் அவன் அதிக ஆச்சரியமுற்று, நான் உனது திரேகபலத்தைக் கண்டறியவேணுமென்றாள். அவனைநோக்கி ஐயா இராக்ஷத சிகாமணியே! என்னைப்பரிட்சிக்கவேண்டுமானல் நாமிருவரும் ஆளுக்கொரு கல்லையெடுத்து ஆகாயத்திலெறிவோம் யாருடைய கல் துலைதூரம் செல்லுகின்றதோ அதனல் தெரிந்துக்கொள்ளலாமென்றுசொன்னேன், அவனுமதற்கிசைந்துமுதலில் ஒருகல்லையெடுத்து ஆகாயத்திலெறிந்தான் அது நெடுந்தூரம்சென்று பூமியில் விழுந்தது பின்புநானும் கல்லையெடுப்பதைப்போல் அபிநயித்து, என்கையிலிருந்தவானம்பாடிப் பறவையை ஆகாயத்தில் விட்டெறிந்தேன், அதுபோவதைக்கண்ட அரக்கன் தன்திருஷ்டிக்குத் தெரிந்தவரையிலும் பார்த்து மறைந்து போனதால் ஆச்சரியமுற்று, என்னைநோக்கிமித்திரா! நீபராக்கிரமசாலி உன்னைமெச்சினேன் என்னுலுனக்கு ஆகவேண்டிய வேலைகளிருந்தால் சீக்கிரம் தெரிவியுமென்றான்.

இப்படி நாங்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் எங்களிருவருக்கும் மத்தியில் ஒரு உன்னதமானமுத்துசரம் விழுந்தது, நான் அதையெடுத்து மேலேபார்க்கையில் ஒரு ராட்சதன் ஒருபெண்ணைத்தன்தோளில் தாங்கிப்போவதைக்கண்டு என்னருகிலிருக்கும் அரக்கனைநோக்கி ஐயாஜெயசூரனே! இதோபார்த்தாயா நம்மெதிரில் உன்னைமதிக்காமல் ஒரு காத்திரமனிதன் ஒரு அழகியைத்தோளிலெடுத்துப்போகிறான் அவனை நீர் விட்டுவிடலாகாது என்றேன், அதற்கவன் மித்திரா! இதோ வெகு சீக்கிரத்தில் அவனை இங்கு அழைத்து வருகிறேன் பாரென்று சொல்லி மேலேகிளம்பி, அவனைப் பின்தொடர்ந்து அடா துஷ்டா! நில் நில்லென்று அவனிடஞ்சென்று இருவரும் வாதிட்டு பூமியிலிறங்கி அவன்தோளிலிருந்த அழகியைகீழேவிட்டுஒருவர்க்கொருவர் வீராவேஷங்கொண்டு மல்லுத்தஞ்செய்யத் துணிந்தார்கள். அப்படி சற்றுநேரம் போர்புரிந்து முடிவில் இருவருமிறந்தார்கள், அவ்விந்தையைக்கண்டநான் அவர்களருகிற்செல்ல அஞ்சி சோலையிலிருக்கும் வஞ்சியைக்கண்டு விசாரிப்போமென்றெண்ணி அவளருகிற்போய் பார்த்தேன் அப்போதவள் என்னைக்கண்டதும் பெருங்குரலிட்டழத்தொடங்கினள்.' நான் கண்

ணுற்ற கந்துகாவதியென்றறிந்து என்னாசைக்கிளியே! நீஇராட்ச
தனோடு வந்தகாரணமென்னவென்றேன், அதற்கவள் சொன்ன
தாவது என்னாசைநாயகா! நானுமக்குப் பாரியென நான்முகத்
தோன் எழுதியிருப்பதால் இங்குவந்து உம்மைக்கண்டேன் நா
யகா! நானென்னவென்று சொல்லுவேன் பூங்காவனத்தில் நாமி
ருவரும் பேசியிருக்கையில் சண்டாளதுரோகியான என்சகோத
ரன் உம்மைப்பிடித்துக்கட்டிக்கொண்டுபோனதுமுதல், நான்வி
சனமுற்று உன்பேரில்கொண்ட மோகம் என்னைவிட்டு நீங்காம
ல், ஒருநாள் உப்பரிகையின்மீதிலுட்கார்ந்து எண்ணமுற்றிருக
கையில் இப்பாவியானராட்சதன் அவ்வழியாய்வருகையில் என்
னைக்கண்டு, விரகமுற்று தன்தோளிலெடுத்துவந்து தன்னெண்
ணங் கைகூடாமல் முடவன் கொம்புத்தேனுக் கிச்சித்ததுபோ
ல் இக்கதியடைந்தான். என்னை ஆபத்திலிருந்து ஆதரித்த
ஆசைநாயகா! என்னையழைத்துக்கொண்டு என் தந்தையிடஞ்
சென்று இவ்விந்தையைச்சொல்லி நிந்தையில்லாமல் கந்துகாவ
தியை மணம்புரியவேண்டுமென்று வணங்கினாள். அதுகேட்டு
நான் ஆனந்தமுற்று அவளை யழைத்துக்கொண்டு பழையபடி
கப்பலேறி மாலுமியைநோக்கி வந்தவழியே போகும்படிசொல்
லி, மூன்றுநாள் பிரயாணஞ்செய்து நாலாநாள் தர்மபுரிநகரஞ்சே
ர்ந்து நங்கூரம்போட்டு நானும் கந்துகாவதியும் அவள் சகோத
ரனாகிய பீமத்துவானும், கப்பலைவிட்டிறங்கி அரண்மனைக்குப்
போகையில் இதற்கு முன்னமே துங்கத்துவானென்னும் அ
ரசனும் அரசியும் தாங்கள் தவஞ்செய்துபெற்ற குமாரனும் கு
மாரத்தியும் காணாமற்போய்விட்டதால், துயரமுற்று யாராவது
அவர்களைக்கண்டு அழைத்துவந்தால் அவர்களுக்கு அப்பெண்
ணை மணம்புரிவித்து இந்நகரத்தைப் பட்டாபிஷேகஞ் செய்கி
றேனென்று பறைசாற்றியிருந்தான்.

அச்சமயத்தில் நாங்கள் மூவரும் அரண்மனைசென்று அ
ரசனைக்கண்டு நடந்தசவிஸ்தாரங்களைத்தெரிவித்தேன் அரசன்
ஆனந்தபரவசனாய் மகனையும் மகளையும் தழுவி, எனக்கு தன்கு
மாரத்தியை மணஞ்செய்யக்கருதி நகரத்தை அலங்கிர்தஞ்செய்
து நல்லசுபமுகூர்த்தத்திற் கந்துகாவதியைமணஞ்செய்து என
க்குப் பட்டந்தரித்து, தன்குமாரனாகிய பீமத்துவானை எனக்

குமந்திரியாக நியமித்து அரசாட்சிசெய்யும்படிசொல்ல, நானும் எனது நேசனாகிய குசதாசனை யழைப்பித்து கந்துகாவதியின் தோழியாகிய சந்திரசேனாவை அவனுக்குமணஞ்செய்து முடித்து அவர்களுக்கு வேண்டிய வெகுமதிகொடுத் தனுப்பினேன். இவ்வாறு அரசாண்டிருக்கும் நாளையில் அரசனாகிய துங்கத்துவானா பரகதியடைந்தார். அவருக்குவேண்டிய கருமக்கிரியைகளை குமாரனாகிய பீமத்துவானாவினால் நடத்தி சுகமுற்றிருக்கையில் முனிவர் சொன்ன தவணைப்படி மூன்றுவருடஞ் செல்லவும், பட்டாபிஷேக நிரூபம்வரவும் தங்களைக்கண்டு ஆனந்தமடைந்தேனென்று தன்வரலாறு முழுதும் சொன்னான். இதுகளைக்கேட்ட அமிர்தவசனன் சந்தோஷமடைந்து ஆ! என்சகோதரா! நீ ஆபத்திலிருந்து தப்பித்துவந்தது மகாசாமர்த்தியமென்று மெச்சினான்.

வியர்த்தபாலன்.

தன்வரலாறுகூறுதல்.

ஆ! என்னன்பனாகிய அரசனே! தாங்கள் எங்களை விட்டுப்பிரிந்துபோகவே நாங்கள் பிரதிக்கினைசெய்து தனித் தனியே போய்விட்டோம். நானே உம்மைக்காண அநேகதேசங்களைச்சுற்றி அகப்படாமல் முடிவில் வாரணாசியைச்சேர்ந்து, கங்காநதியைக்கண்டு அதில் ஸ்நானஞ்செய்து விஸ்வநாதனைத்தெரிசித்து வரும்வழியில், ஒருமனிதன் ஒரு இரும்புத்தடியும் வாளுங்கைக்கொண்டு கோபத்தோடு என்னெதிர்வருவதைக்கண்டு சந்தேகங்கொண்டு, இவன் யாரையோ கொலைசெய்யப்போகிறானென்று கருதி அவனைநோக்கி ஐயா! இவ்வளவு அவசரத்துடன் என்ன வேலையாகப்போகின்றாயென்றேன். அதற்கவன் எனக்கதிகமனவருத்த மிருக்கின்றது அதை உன்னிடம் சொல்வதில் ஒரு பிரயோசனமுமில்லை ஆகிலும் சொல்லுகிறேன் கேளென்று என்னை ஒரு மரத்துநீழலில் உட்காரவைத்து தனதுவரலாற்றைச் சொல்லத்தொடங்கினான்.

ஐயா! என்பெயர் பூரணபத்திரன் என் தாய் தந்தைகளுக்கு நான்யேகபுத்திரன், அவர்கள் எனக்கு இளமையில் வித்தைகற்பிக்கப் பிரயத்தினம் செய்தும் பயனில்லாமல் துன்மார்க்கருடன்கூடி தந்தையின் திரவியமெல்லாமழித்தேன். பின்பு பணமகப்படாமல் களவுசெய்து காலங்கழித்துவருகையில் ஒருநாள் கன்னமிடும்போது என்னையடித்து விலங்கிட்டு நியாயஸ்த

லங்கொண்டுபோக நியாயாதிகாரி விசாரித்து அந்நகரத்துவழக்கப்படி யானைக்காலில் மிதித்துக் கொல்லும்படி உத்திரவுசெய்தான். அப்படியே என்னை யந்நகரத்து மைதானவெளியில்கொண்டுவந்து புதைத்துயானையைவிட்டுக்கொல்லும்படிசெய்ய, அப்போது நான் பிராணதிகிலடைந்து சிறுவயதில் எனக்கு ஒரு பெரியவர் போதித்திருந்த நரசிம்மஸ்தோத்திரத்தை உச்சரித்து, இரண்டுகைகளை சிரசின்மேல் தூக்கினேன் அப்போது யானை பிரகலாதாழ்வானைக்கண்டு திரும்பியதுபோல் என்னைக்கண்டுபயந்துபோய்விட்டது, யானைப்பாகன் எவ்வளவுபிரயத்தினம் செய்தும் பயனில்லாமற்போயிற்று இதுகளையெல்லாம் பார்த்திருந்த அந்நகரத்தரசன்மந்திரியாகியகாமபாலனென்பவர் என்னைத்தன்னிடமழைத்துவரும்படி காவலாளிகளுக்குஉத்திரவளிக்க அவர்கள் என்னையழைத்துப்போய் மந்திரியினிடம்விட்டார்கள் அவர் என்னைநோக்கி அடா பூரணபத்திரா! நீ எப்படியோ தேவானுகூலத்தால் தப்பிவிட்டாய் இனியாகிலும் யோக்கியனுகவிருப்பாயாபழயபடி கன்னமிடுவையாசொல்லென்றுகேட்க, நான் பயந்து ஐயா! இனி கன்னங்களவுசெய்யமாட்டேன் என்பொல்லாவினைவசத்தால் இத்தொழில்செய்தேன் இனிசெய்யேனென்று உறுதியாகச்சொல்ல, அவர் என்னை மன்னித்துத் தன்னிடம் வேலைக்கு வைத்துக்கொண்டார் இப்படிசிலநாள் என் நடவடிக்கைகளைப்பார்த்து சந்தோஷித்து தனது சினேகனுகப்பாவித்து இராஜரகசியங்களை எனக்குச்சொல்லுவார், இவ்வாறுநான் காலங்கழித்து வருகையில் ஒருநாள் என்னைத்தனியேயழைத்து தன்பூர்வோத்திரங்களை சொல்லத்தொடங்கினர்.

அதென்னவெனில், சிலநாளைக்குமுன் புஷ்பபுரியையாண்டுவந்த அம்ஸராஜனுக்கு தருமபாலன்- பத்மோர்பவன்- சீதவர்மன்யென்று மூன்றுமந்திரிகளுண்டு, அவர்களில் தருமபாலனென்பவர் மாத்திரம் ஞானமார்க்கமடைந்தவர் அவருக்கிரண்டு புத்திரர்களுண்டு அவர்களில் மூத்தகுமாரன் தந்தை குணத்தையொத்தவன், இளையவனுகிய நானே எனது தந்தை தமயனுக்கு நேர் விரோதமாக யிருந்தேன். அப்போது என்தொழிலென்னவென்றால் திருடர்களுடனும் சூதாடிகளுடனும் கூடிக்காலங்கழித்துவந்தேன், இதைப்பற்றி என் தாய்தந்தை தமயன் முத

ஸியவர்களும் எனக்குவேண்டிய புத்திகளைப் போதித்தும், கேளாமல் முடிவில் தேசாந்திரியாகப்புறப்பட்டு வருகையில், இக்காசிதேசத்தைச்சேர்ந்து நகரத்துவெளியிலிருக்கும்பூங்காவையடைந்து ஆயாசந்தீர்ந்து விருட்சத்தின்நிழலி லுட்கார்ந்தேன். அச்சமயத்தில் நமதரசனுகிய சாந்தசிம்மன் குமாரத்தியான காந்திமதி அப்பூங்காவில் தனதுதோழிகளுடன் உலாவிவருவதைக்கண்டு அவள்மேல் காதலுற்றேன், அவளும் என்னைக் கண்டு மோகித்து அவ்விடம்விட்டுப் போகாமலிருந்தாள். இப்படிநாங்களிருவரும் விரகமுற்றிருக்கையில் காந்திமதி ஒருதந்திரம் செய்தாள் அதென்னவெனில், தனக்கு நம்பிக்கையுள்ள ஒருதோழியினிடத்தில் ஸ்திரீகள் தரித்துக்கொள்ளும் ஆடையாபரணங்களைக்கொடுத்து என்னிடமனுப்பி தரித்துக்கொள்ளச்செய்து தன்னோடு அழைத்துவரும்படி யனுப்பினுள். அவளு மதற்கிசைந்து என்னிடம்வந்து ஸ்திரீவேடந்தரிக்கச்செய்து தன்னோடுஅழைத்துச்சென்றனள். நானும் அவர்களிலொருத்தியாகச் சென்று காந்திமதியோடுபேசி அரண்மனைக்குப்போய் அவளைக்கூடிக்கலந்து சுகித்திருக்கையில் காந்திமதிகற்பவதியாய் ஓர் புத்திரனைப்பெற்று யாருக்குந் தெரியாமல் இரகசியமாய் அச்சிசுவை தாதியின்கையிற்கொடுத்து இதைக்கொண்டுபோய் நகரத்துவெளியில் யாருக்காவது வழிப்போக்கர்களுக்கு கொடுத்துவிட்டுவரும்படியனுப்பினுள். தாதி அவ்வாறே அன்றிரவில் எடுத்துப்போய் நகர்வெளியில்பார்க்க ஒருவருமகப்படாமையால் அருகிலிருக்கும் மயானத்தில் ஒரு செடியின்கீழ்வைத்துவிட்டுத் திரும்பிவருகையில் நகர்காவலர் கண்டு, அவளை நோக்கி நீ நடுச்சாமத்தில் வரவேண்டிய காரணமென்ன வென்று பயமுறுத்திக்கேட்க, தாதி உண்மையைத் தெரிவிக்க காவலாளிகள் அவளை யழைத்துப்போய் அரசனிடம் விட்டு நடந்ததைச் சொன்னுர்கள். அரசன் தாதியை விசாரிக்க ஆதியோடந்தமாய் தெரிவித்தாள்.

அதைக்கேட்ட அரசன் கடுஞ்சினமடைந்து காவலாளையழைத்து காந்திமதியின் அந்தப்புறத்திலிருந்த யென்னைப் பிடித்துவந்து தாதியோடு சிறைப்படுத்தி, அச்சிசுவை தேடிப்பார்த்து கொண்டுவரும்படி உத்திரவளித்தான். அவ்வாறேகாவலர்

தேடிக்காணமல் அரசனிடம்வந்து சிசுவகப்படவில்லையென்று சொல்ல, அரசன் கோபித்து அடாகாவலாளிகளே! சிறைப்படுத்திய அவ்விருவரையும் நாளையத்தினம்கொலையாளிகள்வசம் ஒப்பிவித்துசிறைச்சேதம் செய்யும்படி உத்திரவளித்தனுப்பினன். காவலாளிகள் என்னிடம்வந்து மரணநிச்சயம் தெரிவித்து தம திருப்பிடஞ்சென்றனர். அப்போது நான் பொழுது விடிந்தால் இவ்விடமிருக்கலாகாதென்று காவலாளிகளுக்குத் தெரியாமல் மதிலேறிக்குதித்து, மனம்போனவழியேசென்று காட்டில் நுழைந்து காய்கனிதின்று காலங்கழித்திருக்கையில், ஒருநாள் யாரோ ஒரு ஸ்திரீயானவள் மகாரூபவதியாய் தன்னேடு சிலஸ்திரீகள் சூழ நானிருந்த காட்டுவழிவருதைக்கண்டு பார்த்திருக்கையில் அவளருகில்வந்து காமபாலா! யென்று கூப்பிட்டாள். நான் ஆச்சரியமுற்று அவளைநோக்கி என்பெயர் உனக்கெப்படிதெரியுமென்றேன், அதற்கவள் என்னையழைத்து ஒரு மரத்துநிழலில் உட்காரவைத்து சொல்லத்தொடங்கினள்.

ஐயா! நான் யக்ஷகுடும்பத்திற்கதிபதியாகியமணிபத்திரன் குமாரத்தி என்பெயர் தாராவளி, நான் ஒருநாள்மாளையவனத்திலிருந்து ககனமார்க்கமாய்ப் புறப்பட்டு காசிதேசத்தின் மயானவழியாய்வருகையில் ஒருசிசுவின் அழுகுரல்கேட்டுஅதை எடுத்துக்கொண்டுபோய் என்தந்தைக்குக்காண்பித்தேன். அவர்தனது குருவாகிய சுக்கிரனைவரவழைத்துக்காண்பித்தார், அவர் என்னைநோக்கி அம்மா! உனக்கு யார் இச்சிசுவைக்கொண்டுவரச் சொன்னுரென்றார். நான் சுவாமி! இச்சிசு அழுகுரலைக் கேட்டு மனதிரங்கி எடுத்துவந்தேனென அதற்கவர் அம்மா இக்குழந்தையை நாம் காப்பாற்றலாகாது ஏனெனில், யட்சர்கள் பூலோகத்துமானிடனை வைத்திருக்கலாகாது, இது காமபாலன் குழந்தையாதலால் நீ இதைக்கொண்டுபோய் விந்தியமலைச்சாரலில் வாசஞ்செய்யும் வசுமதியிடம் விட்டுவிடும்படி சொன்னர், நான் அவ்வாறேசெய்து காமபாலனென்ற பேரைக் கேட்டது முதல் உன்மேல் காதல்கொண்டு தேடித்திரிந்தேன் என்னதிஷ்டவசத்தால் இங்குன்னைக்கண்டேன், என்னவலைத்தீர்க்கவேண்டும் ஆசைநாயகாவென்றாள். நானும் அவள் கருத்துக்கிசைந்தேன் அப்போதவள் அவ்விடத்தில் ஒரு மாளிகையுண்டாக்கி அதி

லழைத்துப்போய் எனக்குவேண்டிய உபசரணைசெய்ய நான் கஷ்டதிசையைமறந்து காமவின்பத்திற்சிக்கி, இருவரும்கனாகாணமற்சொக்கி, காலங்கழித்து வருகையில் ஒருநாள் நானவளை நோக்கி என்பிராணதாரமாகிய தாராவளி! நீ எனக்கோருதவி செய்யவேண்டும். அதென்னவெனில், என்னைக் கொலைசெய்ய எத்தனித்த அரசனைக் கொலைசெய்யவேண்டும் ஆதலால் என்னை அவ்விடத்திற்கொண்டுபோக வேண்டுமென்றேன். அதற்கவள் புன்சிரிப்புடன் என்னைநோக்கி நீ உனது மனைவியாகிய காந்திமதியைக்காண யோசித்திருக்கிறாய், தடையில்லாமல்கொண்டுபோகிறேனென்றுசொல்லி என்னைத்தூக்கிக் ககனமார்க்கமாய் பறந்து, அரசனுடைய அந்தப்புரத்தில் காவலாளிகளுக்குத்தெரியாமல் உள்ளேபிரவேசித்து சாந்தசிம்மன் படுத்திருக்கும்மஞ்சத்தருகில் விட்டு, என்னை மறந்துவிடவேண்டாமென்று சொல்லிப்போனாள்.

உடனேநான் எனதுஉடைவாளைகையிற்பிடித்து அரசனை எழுப்பி ஓ-மகாராஜா! நான்தான்உனதுமருமகன், உன்னனுமதியில்லாமல் உன்குமாரத்திகாந்திமதியை புணர்ந்தேன், என்குற்றத்தைமன்னித்து உன்குமாரத்தியை மணஞ்செய்விக்கின்றாயா இல்லையா, இரண்டிலொன்றைசீக்கிரம்தெரிவியுமென்றேன். அப்போதரசன் நான்கைப்பற்றிய வாளைப்பார்த்து பயந்து அப்பா உன்னையறியாமல் தண்டித்துவிடச் சொன்னேன், உன்னிஷ்டப்படி என்குமாரத்தியை மணஞ்செய்விக்கிறேனென்று உறுதி வார்த்தைசொல்லி மறுதினம் விவாகம் நடத்தினார். நானும் அரசனிடமே மந்திரித்தொழிலையடைந்து காந்திமதியோடு வாசஞ்செய்து வந்தேன் தாராவளியும் என்னிடம் அடிக்கடி வந்து பேசிப்போகிறாளென்று தன்வரலாறுமுழுதும்சொல்லநான் மனக்களிப்படைந்து அவரிடம் ஏவல்புரிந்துவருகையில் சிலநாள் சென்றுசாந்தசிம்மன் மூத்தகுமாரன்வியாதியாலிறந்தான், பின்பு அரசனும் மாண்டான், அப்போது எனது எஜமானனகாமபாலனென்னும் மந்திரியும்மற்றமந்திரிகளுஞ்சேர்ந்து அரசனுடைய இளையகுமாரனாகிய ஐந்துவயதுள்ளசிம்மகோஷனுக்கு இளவரசுபட்டங்கட்டி இராஜகாரியங்களைப் பார்த்து வருகையில், அரசன்குமாரன் வயதடைந்து துர்மார்க்கரோடுநேசித்து வருகை

யில், அவர்கள் சொல்லியதென்னவென்றால், ஐயா! இளவரசனே, மந்திரியாகிய காமபாலனை எவ்விதத்திலாவதுகொன்றுவிடவேண்டும். ஏனெனில், காமபாலன்மகாதுஷ்டன் சண்டாளன் முதலில் காந்திமதியை அரசன் உத்திரவில்லாமல் கைப்பற்றினன், இரண்டாவது அந்தக்குற்றத்திற்கு அவனைதெண்டிக்கும்போது தப்பித்துவோடிப்போனன், மூன்றாவது அரசனை கொல்லுவதாக பயமுறுத்தி மறுபடியும் காந்திமதியை மணஞ்செய்துக்கொண்டான், நான்காவது உன்னுடையதமையனையும் விஷமிட்டுகொன்றான், ஐந்தாவது அரசனையும்கொன்றுபோட்டான். சிறுபிள்ளையான உனக்குப் பட்டத்தைக்கட்டி தானே ஆளவேண்டுமென்கிற எண்ணங்கொண் டிருக்கிறானென்று துற்போதனைசெய்ய, அரசனாகிய சிம்மகோஷனும் அதற்கிசைந்து காமபாலனைகொலைசெய்யத்தீர்மானித்தான். ஆனால் யட்சஸ்திரீயாகிய தாராவளி அவனுக்கு மனைவியாயிருப்பதைப்பற்றிபயந்து சமையம் பார்த்திருக்கையில், சிலநாள் கழித்தபின் தாராவளி தன்னிருப்பிடம்போய்சேர்ந்தாள். இதைக்கேட்ட சிம்மகோஷன் சந்தோஷமடைந்து தன்நேசரையும் மந்திரிகளையும் நோக்கி நாளையத்தினம் காமபாலனைசிறைச்செய்துவிடுங்களென, அவர்களும் மறுநாள் காமபாலன் இராஜசபைக்கு வரவும் அவனைப்பிடித்து விலங்கிட்டு அரசனுக்குத்தெரிவிக்க, அரசன் அவனை விலங்குடனே நகரைவலம்வரச்செய்து அவனிரண்டு கண்களையும் பிடுங்கி விடும்படி கொலையாளிகளுக்கு உத்திரவளிக்க, என்னெஜமானனுக்குவந்த ஆபத்தை பார்க்கசகியாதவனாய்ப்பிராணனைவிட தீர்மானித்துவந்தேனென்றுசொன்னான்.

ஓ-என்னரசனே! இவ்வரலாற்றை பூரணபத்திரன் சொல்லவும் நானவனைநோக்கி அப்பா பூரணபத்திரா! நான்தான் காந்திமதியின் புத்திரன் என்னைத்தான் சுடுகாட்டில் போட்டுவிட்டது, அப்போது தாராவளியானயட்சஸ்திரீ என்னையெடுத்துப்போய் அம்ஸராஜன் மனைவியாகிய வசுமதியினிடம் கொண்டுபோய்சேர்த்தாள். என் தாய்தந்தையர்கள் செய்த புண்ணியவசத்தால் உன்னைக்கண்டேன். ஆனதால் இப்போது எனக்கோருதவிசெய்யவேண்டும், எப்படியாவது தந்திரத்தால் என்தாய் தந்தையர்களை மீட்டுக் கொள்ளுகிறேனென்றேன், அதற்கவன்

ஐயா! என்னாற்கூடிய உதவிசெய்வேன் ஆனால் நீபடைத்துணையில்லாமல் எவ்விதம்போய் மீட்பீரென்று சொல்ல, பூரணபத்திரா! என்னையொருவரும் எதிர்க்காமல் மீட்டுவிடுகிறேன் பாருமென்று பேசிக்கொண்டிருக்கையில், ஓர் பாம்பானது அருகிலிருந்த புற்றிலிருந்து தலையை நீட்டிற்று அதைக் கண்ட நான் மந்திரஜெபம்செய்யவெளிவந்தது அதைப்பிடித்து பத்திரப்படுத்திக்கொண்டு, அவனைநோக்கிபூரணபத்திரா! இதைக்கொண்டு என் தந்தையை காப்பாற்றுகிறேன் எப்படியெனில், அவனைக் கொலையாளர் கொண்டுவரும்போது ஜனக்கூட்டத்தில் இப்பாம்பை அவர்பேரில்விட்டு கொன்றுவிடுகிறேன். பின்பு அவருக்கு உயிருண்டாக்க எனக்குத் தெரியுமாதலால், நீ உடனே என்தாயாகிய காந்திமதியிடஞ்சென்று தாராவளியால் காப்பற்றப்பட்ட உன்குமாரனிவ்விடம் வந்திருக்கிறான், உன்கணவனிறந்து விட்டால் உன்சகோதரனாகிய சிம்மகோஷனிடஞ்சென்று அப்பிணத்தை வீட்டிக்கெடுத்துப்போக உத்திரவுபெற்று அதை யெடுத்துவந்தால் உன்புத்திரன்வந்து உன்கணவனை உயிருண்டாக்குவானென்று என்தாயிடம் தெரிவியுமென்று சொல்லியனுப்பிவிட்டு, நான்புறப்பட்டு நகரத்துட் பிரவேசித்தேன். அப்போது கொலையாளர் காமபாலனை அழைத்துவருவதைக்கண்டு அச்சனக்கூட்டங்களில் கலந்து அவர்களை நோக்கி இதென்ன வரலாறென்றுகேட்க, அவர்கள் ஐயா! இன்றுமந்திரியாகியகாமபாலனைதெண்டிக்கப்போகிறார்களென்றுசொல்ல, நானும் அவர்களுடன் சென்றேன். அப்போது கொலையாளிகள் என் தந்தையை கொலைபீடத்தின்மீது நிறுத்தி அவருடைய துஷ்டகிர்த்தியங்களாகிய குற்றப்பத்திரிகையை வாசிக்கத்தொடங்கினார்கள்.

1. காந்திமதியை அரசனுத்திரவின்றி கைப்பற்றினான்.
2. அரசனுடைய தண்டனையிலிருந்து தப்பித்தோடினான்.
3. அரசனைபயமுறுத்தி காந்திமதியைமணந்தான்.
4. அரசன் மூத்தகுமாரனுக்கு விஷமிட்டுக்கொன்றான்.
5. அரசனையும் கொன்றான்.

ஆகையால் இவன் துற்செய்கைக்குத் தக்கதண்டனை சிரச்சேதஞ் செய்துவிடவேண்டியது, இவன் க்ஷத்திரியனாக விருப்

பதால் இவனிரண்டு கண்களையும் பிடிங்கிப்போடும்படி மகாராஜா உத்திரவென்றுவாசித்தார்கள். இதுகளைக்கேட்ட அங்குவந்தஜனங்கள் கைகொட்டினூர்கள் அச்சந்தடியில் என்கையிலிருந்தபாம்பை என்தந்தையின்பேரில்போட, அதுஅவனைக்கடித்து கீழேவிழுந்தது இதைக்கண்ட ஜனங்கள் பயந்து நாலுபக்கத்திலும் ஓடினூர்கள். நான்மாத்திரமவ்விடத்தில் நின்றுபார்த்திருக்கையில் என்தந்தை மரணமடைந்தார் இவ்விந்தையை கொலையாளர்கண்டு அரசனுக்குத் தெரிவிக்க, சிம்மகோஷன் ஆச்சரியமுற்று இவன் துன்மார்க்கத்திற்குத் தக்க தண்டனை கடவுள் செய்தாரென்று சொல்லிக்கொண்டான். அச்சமயத்தில் நான் இனிநடக்கவேண்டிய வேலைகளுக்காக என்தாயிடம் போகலாமென்று நகரத்துட்சென்றேன், இதற்குமுன்னமே பூரணபத்திரன் என்வரலாறுமுழுதும் தெரிவித்திருந்தமையால் என்தந்தை மரணத்தையறிந்த என்தாய் பூரணபத்திரன் சொல்லிய வண்ணம் அரசனுகிய சிம்மகோஷனிடஞ்சென்று சகோதரா! நானென்செய்வேன் முதியோர் வாக்கியப்படி (தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்) என்கிறபடியே என்கணவன் துஷ்டாடத்னித யறிந்து கடவுள் இக்கதிநடத்தி விட்டார். அதைப்பற்றி சிந்திப்பதில் பயனில்லை கணவனிறந்த கைம்பெண் பூவுலகிலிருப்பது தகுதியல்ல, ஆதலால் நமதுதேசத்தின் வழக்கப்படி கணவனுடன் அக்கினிப்பிரவேசஞ்செய்ய அநுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று வேண்டினுள்.

இதைக்கேட்ட சிம்மகோஷன் தமக்கையின் வேண்டுகோளின்படி இறந்துபோன அவள் கணவனை வீட்டிற்கெடுத்துப் போக உத்திரவளித்தான் அவ்வாறே காவலர் அப்பிரேதத்தையெடுத்துப்போய் வீடுசேர்த்தார்கள். அப்போது நான் அங்குசென்று அவ்விடம்வந்த ஜனங்களெல்லாம் போனபின்பு அப்பிரேதத்தை ஓர்அறையில்தனியேவைத்துஜெபம்செய்தேன் அப்போதவர் விஷம்நீங்கி உயிர்த்தெழுந்தார் இதைக்கண்ட என் தாயாகிய காந்திமதி அடங்காமகிழ்ச்சியடைந்து அவனைக்கட்டி ஆலிங்கனம்செய்து என்னைத்தழுவி உச்சிமுகந்துகண்ணீர்சொரிய அடா என்னருமைக்கண்மணியே! உன்னாலல்லவோ நாங்களிருவரும் இன்றுபிழைத்தோம், சண்டாளியான நான் மனந்து

ணிந்து உன்னை மயானத்திற் கொண்டுபோய்விடும்படி சொன்னேன் ஏனெனில், அப்போதிருந்த நிலைமைக்குப் பயந்தேனே யொழியவேறில்லை, மேலும் உனக்கு இதுவரையில் உன்தந்தையால் யாதொருதீங்கும் நேர்ந்ததில்லை அவர் பெற்றகடனுக்கு நீ அவருக்கு உயிர்கொடுத்து காப்பாற்றினய், உன்னைப்போன்ற சற்புத்திரனை எங்கள் ஊழ்வினைவசத்தால் பிரியலானேமென்று விசனமுற்றார்கள். அப்போது நானவர்களுக்கு மனத்தேறுதல் செய்து நடந்தவரலாற்றை எல்லாம்தெரிவித்து என்தந்தையை நோக்கி ஐயா! இனிநாம் வீண்காலம் போக்குவதில் பிரயோசனமில்லை ஏனெனில், அரசன் உம்மைப்பற்றி விசாரிப்பானுகில் மறுபடியும் கொலைசெய்வானுதலால் நாம் தப்பித்துக்கொள்ளவேண்டிய முயற்சிதேடுவதுமன்றி உம்மைக்கொல்ல தீர்மானித்த அப்பாவியை முன்னங்கொன்றுபோடவேண்டு மென்றேன் அதற்கு என்தந்தை ஆ- என்னருமைக் கண்மணியே நானென்று சொல்லுகிறேன் அதென்னவெனில், நாமிருக்குமிடம் விசாலமாயும் பெரியகட்டடமாயும் அநேகமான ஆயுதங்களு முண்டு அதுவுமன்றி இந்நகரத்திலுள்ள கனதனவான்களும் என்பேரில் நல்லஅபிப்பிராயமுள்ளவர்களாதலால், நாம் அரசன்பேரில் யுத்தத்திற்குப் புறப்பட்டால் யாவரும் நம்முடன்சேர்ந்து அரசனை முறியவடிப்பார்கள் நீ படைத்துணையைப்பற்றி யோசிக்கவேண்டாமென்று சொன்னர்.

அதைக்கேட்டு நான் ஐயா! நாமிருக்கு மிடத்திற்கும் அரசனந்தப்புரத்திற்கும் எவ்வளவு தூரமிருக்குமென்றேன், அதற்கவர் ஒருமைமையில்விஸ்தாரமிருக்கலாமென்றார் அப்போது நான் அவருக்குச் சொன்னதாவது நாமிருக்குமிடத்திற்கும் அரசன் படுக்கையறைக்கும் ஓர் சுரங்கம்செய்து அதன்வழியேசென்று, அவனை கைப்பிடியாகப்பிடித்துவந்து சிறைப்படுத்த வேணுமென்றேன், அவரும் என்கருத்துக்கிசைய சில ஏவலாளரையழைத்து சுரங்கத்தைவெட்டி வழிசெய்துக்கொண்டு சிலதூரம்போகையில் நான் அவ்விடத்தில் ஓர் உன்னத மேடையைக் கண்டு அதினுள் பிரவேசித்துப் பார்த்துக்கொண்டு வருகையில், அவ்விடத்தில் அநேகஸ்திரீகளுள் நடுநாயகம்போன்ற வாலப்பருவமுள்ள ஓர் வஞ்சியைக்கண்டு அளவற்ற ஆச்சரியமடைந்து சந்

தேகித்தவனுய் இப்பெண்ணசுர யார் ? பூந்திருவோ ! அல்லது, மாமலரோன் நாவில் வசிக்கும் கலைமாதோ ! அல்லது, நாகரா ஜன் கன்னிகையோ ! பூலோகந்தன்னில் புகழ்படைத்த பெண் ணணங்கோ ! இவளை யார் இக்கீழ் பூமிக்குள் அழைத்து வந்த வர், இம்மாது இங்குவசிப்பதற்குக் காரணமென்னவென்றுபல விதமாயெண்ணி அவளருகிற்சென்றேன். அப்போது என்னைக் கண்டு அந்த ஸ்திரீகளெல்லாம்பயந்து ஓடியொளித்துக்கொண் டார்கள், அப்பால் சற்றுநேரம்பொருத்து ஓர்கிழவி என்னிடம் வந்து வணங்கி ஓ-நாதா! இப்பாதாள சுரங்கத்தில் இதுவரையில் யாரும் வந்ததுமில்லை, நாங்களிவ்விடமிருப்பதும் ஒருவருக்கும் தெரியாது ஆனதால் நீரெப்படிவந்தீர், இங்குவந்தகாரணமென் ன தெரிவிக்கவேண்டுமென்று வணங்கினுள். நானவளை நோக்கி அம்மா! நீ சந்தேகப்படவேண்டாம் நான் இந்நகரத்தரசன்மந்தி ரியாகிய காமபாலன்குமாரனுன வியர்த்தபாலன் என்தாய் காந் திமதி நானரசனுடைய அந்தப்புரத்திற்குசுரங்கம்செய்துக்கொ ண்டு வரும்வழியில் உங்களைக்கண்டேன், நீங்கள் எப்படி இந்த சுரங்கத்தில் உயிரோடு வாசஞ்செய்கிறீர்கள் அதைச் சொல்ல வேண்டுமென்றேன். அதற்கவள் என்னை நோக்கி ஓ-இளவரச னே ! எனக்கு உனது விருத்தாந்தத்தைப்பற்றி முன்னமே தெ ரியும் ஆனல் நீ இத்தனைகாலம் எவ்விடமிருந்தாயென்று மாத்தி ரம் தெரியாது, இப்போதுன்னைக் கண்டதே எனக்கு மகாசந் தோஷ முண்டாயிற்று. இங்கு நீர் ஓர்பெண்ணைப்பார்த்திருக்க லாம் அப்பெண்தான் உன்தாயைப்பெற்ற தந்தையாகிய சாந்த சிம்மனுடையபௌத்திரி, அவள்பெயர் வாரணவதன இவள்தா யுந்தகப்பனும் இறந்துபோனுர்கள். சாந்தசிம்மன் இப்பெண்ணை என்னிடம்கொடுத்து காப்பாற்றச்சொல்லினர். இவ்வாறிருக்கை யில் ஒருநாள் அரசன் என்னையழைத்து இப்பெண்புஷ்பவதியா னதும் மராடதேசத்தரசனுன மானபூஷணனுக்கு மணஞ்சூட் டவேணுமென்று சொன்னுர்.

இதைக்கேட்டு நான் அவ்வரசனுக்குக் கொடுக்க மனமில் லாததினல் பூமிக்குள் கட்டடங்கட்டி அதில் 100 - வருடத்தி ற்கு வேண்டிய சாமக்கிரிகைகளை சேகரித்துக்கொண்டு நாங்கள் இதனுள் வாசஞ்செய்கிறேம். இங்குவந்து 10 - வருடமாகிறது

இதுவல்லாமலும் இப்பெண்தாயும் உனதுதாயும் ஆதியில் ஒரு வர்க்கொருவர் சம்பந்தஞ்செய்துக் கொள்ளலாமென்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் சொல்லியபடியே கடவுள் உன்னைக் கொண்டுவந்து எங்கள் முன்விட்டது நீர் இப்பெண்ணை மணஞ் செய்துக்கொண்டு எங்களை ஆதரித்து வெளியே கொண்டுபோக வேண்டுமென்றாள். நான் அக்கிழவி சொன்னதைக்கேட்டு அம்மா! இச்சிறுமியை கொஞ்சநாள் இவ்விடத்தில்தானே வைத்துக்கொண்டிருந்தால், இந்நகரத்தரசனாகிய சிம்மகோஷனைசிறைப்படுத்திக்கொண்டுவருகிறேன், அதன்பின் நீ சொல்லியபடியே இப்பெண்ணை விவாகஞ்செய்துக்கொள்ளுகிறேனென்று சொல்ல, அவளுமதற்கிசைந்து அரசன் அந்தப்புறத்திற்குப் போகும் வழியைக்காண்பித்து, எரிவத்திகொளுத்தி என்கையிற்கொடுத்தாள். நானதை வாங்கிக்கொண்டு அவ்வெளிச்சத்தினால் மனக்களிப்படைந்து நெடுந்தூரம்சென்றுமுடிவில் ஓர் கதவைக்கண்டு அதைத்திறந்துபார்க்கையில், அவ்விடத்தில்சப்ரமஞ்சக்கட்டிலின்பேரில் அரசன் சயனத்திருப்பதைக்கண்டு கோபமீறி அவனைப்பிடித்துமடல்விரியக்கட்டி, தலைமயிரைப்பிடித் திழுத்துக்கொண்டு முன்வந்தவழியேசென்று அக்கிழவிக்குக்காண்பித்து, இவனைக்கொண்டுபோய் என்தாய் தந்தையினிடத்தில் ஒப்பிவித்து உங்களைவந்தழைத்துக் கொண்டு போகிறேனென்று கிழவியின் விடைபெற்று, பழையபடி என்தந்தை இருக்குமந்தப்புரஞ்சேர்ந்து அவர் முன்விட்டேன். அப்போதரசனாகிய சிம்மகோஷன் வெட்கி தலைகுனிந்துநின்றான். அவனைக்கண்ட என்தந்தை கோபமீறி பலவாறுதூறி அடா! நன்றிகுன்றிய நாசகாலனே! உன்தந்தை இறந்ததுமுதல் உன்னை சீர்திருத்தி இளவரசுபட்டங் கட்டிவைத்த என்னை, துர்மார்க்கருடைய போதனையைக் கேட்டு என்னிரண்டு கண்களையும் பிடுங்கிவிடச் சொன்னாயல்லவா, அடா நிற்பாக்கியனே! நீசெய்த துன்மார்க்கத்திற்குப்பதில் நாளையத்தினம் உன்னை இந்நகரவாசிகள் முன்னேகொலைபுரிந்து விடுவதே தருமமென்று தூஷித்து சிறையிலடைத்தார்.

மறுநாள் அரசனைப்பிடித்து சிறையிலடைத்த சவிஸ்தாரமெல்லாம் மந்திரி பிரதானிகள் தெரிந்துபடையெடுத்து எங்கள் பேரில் வரவும், அப்போது நாங்களும் எங்களைச்சார்ந்த நகரவா

சிகளும் அவர்களையெதிர்த்து துரத்தியடித்து ஜெயங்கொண்டோம். பின்பு அந்நகரத்திற்குத் தகுந்த அரசனில்லாமையால் சில கனதனவான்களும், என்தந்தையும் யோசித்து நான் சிம்மகோஷனை வெற்றிகொண்டதைப்பற்றியும், மேற்படி சாந்த சிம்மனுக்குப் பௌத்திரனென்னும் இரண்டு விதமான யாத்தியதைப்பற்றியும், அக்காசிநகரத்தை எனக்கு நல்லசுபமுகூர்த்தத்தில் மகுடாபிஷேகம் செய்துவைத்தார்கள். பிறகு நானும் சுரங்கத்துக்குள் சென்று கிழவியையும் வாரணவதனுவையும் அழைத்து வந்து இவ்விந்தையெல்லாம் என்தந்தையிடம் சொல்லி, வாரணவதனுவைமணஞ்செய்து சிறையிலடைத்தசிம்மகோஷனை தெண்டிக்காமல் பிரதானிகளிலொருவனாகநியமித்து, என் தாய்தந்தைகளோடு அந்நகரத்தை யாண்டுவருகையில், என்னிறைவனே! தாங்களனுப்பிய பட்டாபிஷேக நிரூபத்தைக் கண்டு இவ்விடம் வந்தேனென்று தன் வரலாறுமுழுதும் தெரிவிக்க, இதைக்கேட்ட அமிர்தவசனன் ஆ-என்னருமை சகோதரா! நீ மகாசாமர்த்திய வந்தனென்று மெச்சினன்.

அஸ்வசேனன்.

தன்வரலாறுகூறுதல்.

ஆ-எனதன்பிற்குரிய அரசனே! நானுன்னைத் தேடும்படி மற்ற சகோதரர்களைப்போல் பற்பல தேசங்களைச்சுற்றி வருந்தியகப்படாமல், கடைசியில்விதர்ப்பதேசத்துவழியாய்வருகையில் ஓர்சிரிய ஆலயமிருப்பதைக்கண்டு அதனருகிற் சென்று இளைப்பாருவோமென்று அவ்விடத்திற் சென்றேன். அப்போது அங்கே ஒருகிழவியிருப்பதைப்பார்த்து அம்மா! எனக்கு அருந்தஜலந்தாருமென்று கேட்டேன். அக்கிழவி ஜலத்தைக் கொண்டுவந்துகொடுக்க நானதையருந்தி அவ்விடத்திலுட்கார்ந்தேன். அப்போது அம்முதியவள் என்முன்னின்று விசனமுற்றுகண்ணீர் சொரிந்தாள். நானவளைநோக்கி அம்மா! நீஅழவேண்டியகாரணமென்ன யாரால் உனக்குக்கெடுதிநேரிட்டதுதெரிவித்தால் என்னாற்கூடிய உதவிசெய்வேனென்று சொன்னேன். அதற்கு அம்முதியவள் அப்பா! என்னிடம் ஓர் குழந்தையிருந்தது அதையான்வளர்த்துவந்தேன், சிலநாளைக்குமுன் நானே ஆபத்தினால் போக்கடித்து விட்டேன், அவனிருந்தால் இப்போது உன்வயதடைந்திருப்பான், ஆதலால் உன்னைப்பார்க்கவே அவன்மேல் நினைவுண்டாய் துக்கித்தேனென்று சொன்னாள். அதற்கு நான் அம்மா! அக்குழந்தையை எப்படிபோக்கடித்தாயென்று கேட்டேன் அதற்குக்கிழவி அதன்வரலாறுசொல்லத்தொடங்கினாள்.

அடா குழந்தாய்! சிலநாளைக்குமுன் மிதுலாநகரத்தை பிரகாரவர்மன் ஆண்டுவந்தான். அப்போது புஷ்பபுரியை யாண்டு

வந்த அம்ஸராஜன் தன்மனைவிக்கு சீமந்தமுகூர்த்தமென்று நிரூபமனுப்பவும், அதையறிந்து பிரகாரவர்மனும் அவர்மனைவி பிரியவதனுவும் தன்னிரண்டு குழந்தைகளோடு புஷ்பபுரிபட்டணம் போய்ச்சேர்ந்தார்கள். அச்சமயத்தில் மாளவதேசத் தரசனுகிய மதனசேனன் புஷ்பபுரிமேற் படையெடுத்து வரவும், அதைக் கண்ட அம்ஸராஜன் பிரகாரவர்மனைத் துணைப்பற்றிப்போய் மதனசேனனையெதிர்த்து தான் தோல்வியடைந்துபோகவும், பிரகாரவர்மனை மதனசேனன்சிறைசெய்துவிட பின்பு அவர் தப்பித்துக்கொண்டு தன்மனைவிபிள்ளைகளுடன் அவருடையநகரத்திற்குப்போகும்வழியில் சில காட்டுஜனங்கள் அவரையடித்து கொள்ளையிட, அப்போது நான் அவர் குழந்தைகளில் ஒன்றைகையில் வைத்திருந்தமையால் காட்டுமனிதர்களைக்கண்டு பயந்து, அவர்களைப்பிறிந்து தப்பித்துக்கொண்டு காட்டில் நுழைந்து போகையில் ஒருபுலியைக்கண்டு பயந்துகுழந்தையை கீழேவிட்டு மூர்ச்சையடைந்து விட்டேன்.

பின்பு சற்றுநேரம் சென்று எழுந்து பார்க்கையில் அந்த குழந்தையைக் காணோம், புலியை யாரோ கொன்று போட்டார்கள். நான் அவ்வனமெல்லாந் தேடிப்பார்த்தும் அப்பிள்ளை யகப்படாமல் வருந்தி மிதுலாநகரமடைந்து அரசனுக்குத் தெரிவித்து விட்டு அங்குவசிக்க மனமில்லாமல், இவ்விடம்வந்து தனித்து காலங்கழித்திருக்கையில் ஒருநாள் அகஸ்மாத்தாய் என்னைத்தேடி என்குமாரத்திவரவும், நானவளைப்பார்த்து சந்தோஷித்துகட்டித்தழுவி என்னைவிட்டுப் பிரிந்தபின் என்னவிதமாய் ஜீவித்திருந்தாய் அதைச்சொல்லென்று கேட்டேன் அப்போதவள் அம்மா! காட்டு ஜனங்கள் நம்மையும் அரசனையும் மறித்து கொள்ளையடித்தபோது என்னையும் அடித்து காயப்படுத்தினுர்கள், அப்போது நான் கையிலிருந்த குழந்தையை போக்கடித்துவிட்டேன், பின்புகாட்டில்வழிதெரியாமல் வருகையில், ஒரு வேடுவன் என்னைமறித்து அவனுக்கு மனைவியாயிருக்கும்படிப யமுறுத்திச்சொல்ல, அப்போது நான் அவன் கருத்திற்கிசையாமல் ஐயா! எனக்கொருவிரதமுண்டு, அதுநாற்பதுநாள்செல்லும் முடிந்தபின் உனக்கு மனைவியாவேனென்றுசொல்லி நாளைக்கழித்துவருகையில் ஒருநாள் அவ்வழியாய் ஒருபுருடன் வருவதைய

றிந்து, இச்சண்டாளனிடமிருந்து தப்பித்துக்கொள்வோமென்று எண்ணி, அவரருகில்வந்ததும் ஐயா! நீர்யார்? எவ்விடம்போகிறீர்கள் என்றுகேட்டேன், அதற்கவர் நான் மிதுலாநகரத் தரசன் படைவீரன் இப்போதவரிடம் போகிறேனென்றான். அதைக் கேட்டு நானும் அவருடனேசென்று அரசனையும் அரசியையும் கண்டு, குழந்தையைப்போக்கடித்துவிட்ட சங்கதிதெரிவித்து என்குமாரத்தி அவ்விடமிருக்கையில், அரசனுடைய சகோதரியின் புத்திரனாகிய விகடவர்மன் படையெடுத்துவந்து, அரசனையும் அரசியையும் சிறைசெய்து அவன் கோட்டைக்குக்கொண்டுபோய் காவலில்வைத்து, தன்னை அவன்மனைவியாகிய கல்பசுந்தரிக்குத் தாதியாயிருக்கச் செய்தானென்று என் குமாரத்தி முன்னமே யெனக்குச்சொல்லி யிருப்பதால், அன்று காணமல் போன இரண்டு குழந்தைகளும் இப்போதிருந்தால் உன்வயதடைந்திருப்பார்களே, அரசனையும் அரசிசையும் மீட்டுவருவாரோ யென்று துக்கித்தேனேயொழிய வேறொன்று மில்லையென்று சொன்னாள்.

இதுகளையெல்லாங்கேட்ட நான் அம்மணி! நீபயப்படாதே காட்டில் குழந்தையை யிழந்து வரும்போது ஒரு முனிவரிடம் அச்சேதியைத்தெரிவித்த துண்டா என்றேன். அதற்கு அம்முதியவள் ஆமென்றாள். பின்பு நான்தான் அக்குழந்தை உனக்கு ஞாபகமிருக்கிறதா வென்றுசொல்லி என்வரலாற்றைத் தெரிவித்து அம்மா! இந்நகரத்தில் என்னை இன்னானென்று எவருக்குந் தெரியாது, என்தாய்தந்தைகளு மென்னைத்தெரிந்துக் கொள்ள மாட்டார்கள். ஆதலால் அவர்களைமீட்டு அப்பாவியாகிய விகடவர்மனை கொலைசெய்ய வழிதேடலாமென்றுசொல்ல, அக்கிழவி என்னைக்கட்டித்தழுவி முத்தமிட்டு அடா என்கண்மணியே! நீ சொல்லிய வார்த்தைகளை உன்தந்தையாகிய பிரகாரவர்மனும் பிரியவதனவும் கேட்டால், எவ்வளவு சந்தோஷிப்பார்களோ அவ்வளவு சந்தோஷமடைந்தேன். உனக்குமங்களகரமுண்டாகக் கடவதென்றுவாழ்த்தி தன்னிடமிருந்த ஆகாரத்தை எனக்குக் கொடுத்து சாப்பிடச்செய்து, அன்றிரவுஆலயத்தில்தானேதன்னோடு இருக்கும்படிசொல்ல நானும் அவ்விடமிருந்து மறுநாள் காலையிலெழுந்து கடவுளைத்தொழுது அம்முதியவளை நோக்கி,

அம்மா! உனக்கு விகடவர்மனுடைய கோட்டையிருக்கும் இடமும் அதற்குப்போகும்மார்க்கமும் தெரியுமாவென்றுகேட்டேன்? அதற்குக்கிழவி தெரியாதென்றாள். இப்படி நாங்கள்பேசிக்கொண்டிருக்கையில் ஒருஸ்திரீ எங்கள் முன்வருவதைக் கிழவி பார்த்து, அதோவருகிறாளென்குமாரத்தியென்றுசொல்லி, அருகில்வந்தவுடனே ஆவலோடு அவளைப்பார்த்து அம்மா! புஷ்கரீகா! இதோ உன்னரசன் குமாரன், இவனைத்தான் நான் காட்டில் போக்கடித்தது, இவ்வளவுகாலஞ்சென்று நம்மையும் தாய் தந்தையையும் மீட்கும்பொருட்டு இவ்விடம் வந்தாரென்றாள், அதைக்கேட்ட புஷ்கரீகா என்வரலாறுதெரிந்து சந்தோஷமுற்றனள். கிழவி தன்மகளைநோக்கி அம்மா! நீ விகடவர்மனுடைய கோட்டையில் வாசஞ்செய்வதால் உன்சகோதரனுக்கு அதன் வரலாறுதெரிவித்து அவர் செய்யும்முயற்சிக்கு வேண்டிய உதவிசெய்யவேண்டுமென்றாள்.

அதைக்கேட்ட புஷ்கரீகா என்னைநோக்கிச் சொல்லிய தென்னவெனில், என்னருமை சகோதரா! அப்பாவியாகிய விகடவர்மன் செய்தமோசம் என்னவென்று சொல்லுவேன். மிதுலா நகரத்தைத் தன்வசப்படுத்தி அரசனையும் அரசியையும் சிறையிலிட்டு அரசாண்டுவருகிறான். இதுவல்லாமல் பிங்களதேசத்தரசன் மகளாகிய கல்பசுந்தரியை மணஞ்செய்து, அவள் மீதுபிரியமில்லாமல் வெறுப்புற்று அன்னியஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனாகயிருக்கிறான். இதுவன்றி, அவன் கல்பசுந்தரியின் வடிவழகுக்குத்தகுந்த புருடனல்ல, அவனைப்பார்த்தால் விகாரமாய் நீண்டமுகம் வளைந்தமுதுகு பார்க்கச்சகியாதவனாயிருக்கிறான் ஆதலால், அவளுன்னழகைக் கண்டால் உடனே மோகிப்பாளென்றுசொல்லவே, நானதைக்கேட்டு சகோதரியே! எனக்கொருதவி செய்யவேண்டும் அதென்னவெனில், நீ கல்பசுந்தரியின் தாதியாயிருப்பதால் உன்னால் அளவற்றகாரியங்கள் செய்யமுடியும். ஆனதால் நீ கல்பசுந்தரியிடம் சென்று இராஜரத்தினமே! உலகத்தில் (கைநிறைந்த பொன்னைப்பார்கிலும் கண்ணிறைந்த கணவனைத்தேடுவார்கள்) அப்படிக்கிருக்க, உன்னை மணஞ்செய்த புருடன் உன்வடிவழகுக் கேற்றவனல்லவென்று பலவிதமாய்சொல்லி, அவள்மனதைக்கரைத்து வேறுபுருடர்மேல் விருப்பங்கொ

ள்ளச்செய்தால் விகடவர்மனைவெகுஇலேசில் முடித்துவிடலாம் நீ எனக்காக இவ்வளவுபிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றுசொல்ல, புஷ்கரீகா சம்மதித்து சகோதரா! நானந்தப்புரம் போகிறேன் கல்பசுந்தரியின் கருத்தைத்தெரிந்து, மூன்றாம்நாள் வருகிறேன் நீ இவ்விடத்தில்தானே என்தாயோடுவாசஞ்செய்திருமென்று சொல்லிப்போனாள். பின்பு நானும்கிழவியும் அவ்வாலயத்திலிருக்கையில் மூன்றாம்நாள் கல்பசுந்தரியிடம் போயிருந்த புஷ்கரீகா என்னிடம்வந்து சகோதரா! நீ எண்ணியபடியே திண்ணமாய்முடியும், அதெப்படியென்றால் நான் கல்பசுந்தரியிடஞ்சென்று அவள் மனதைபேதிக்கச்செய்து விகடவர்மன்பேரில் வெறுப்புண்டாக்கி, வேறுநாயகர்மேல் விருப்பமுண்டாக்கி வந்தேன், இனி என்னால் நடக்கவேண்டியவேலையென்ன சொல்லுமென்றுகேட்டாள்.

அப்போது நான்சகோதரியே! என்னைப்போல் உருவப்படமொன்று எழுதி உன்கையிற் கொடுக்கிறேன், நீ அதை யெடுத்துப்போய் கல்பசுந்தரிக்குக் காண்பித்து அவள் என்னசொல்லுகிறாளோ அதைத் தெரிந்துக்கொண்டு என்னிடம் வந்தால், பின்பு நடத்த வேண்டியவேலையை தெரிவிக்கிறேனென்றுசொல்லி என்னைப்போன்ற உருவப்படமெழுதி அவள் கையிற்கொடுத்தேன். புஷ்கரீகா என்னிடம் விடைபெற்று அந்தப்புரஞ்சென்று கல்பசுந்தரிக்குக் காண்பித்தாள், அப்படத்தைக்கண்ட கல்பசுந்தரி! விரகவேதனை மீறினவளாய் தன்னால் சகிக்க முடியாமல் தாதியைநோக்கி அம்மா புஷ்கரீகா! இதேது, உனக்கெப்படி கிடைத்தது, உருவப்படமா, அல்லது உண்மையாய் இப்பேரழகமைந்த புருடன் இந்நகரத்தில் வசிக்கின்றானா? அப்படிக்கிருப்பானாகில் தடையின்றி, என்னுடல், பொருள், ஆவி, மூன்றையும் அவனுக்கே தத்தம்செய்துவிடுவேன், என்றுபடத்தை முத்தமிட்டு கண்ணிமை கொட்டாமல் பார்த்து காமமீறினவளாய் புஷ்கரீகா! இவ்வுருவப்படத்தைக்காட்டி என்னைமோசம் செய்யவந்தாயா, பூர்வம் நரேந்திரன் படத்தைக்காண்பித்து சித்திராங்கியை மோசஞ்செய்தானே, அதுபோலிருக்கின்றதே! இவனோ காமனைப்போ லிருக்கின்றானே இவனை யென்கண்ணிற் காட்டுவாயோவென்றாள்? அப்போது புஷ்கரீகா அம்மாகல்பசுந்

தரி! நான் உன்னை ஏமாற்றும்பொருட்டுகோண்பித்தவளல்ல, இப்படத்தைப்போன்ற புருடன் நம்முடையபூங்காவனத்தருகிலிருக்கிறான் உனக்கு அவர்மீது எண்ணமிருந்தால் அவனை யெவ்விதத்திலாவது அழைத்து வருகிறேனென்றாள். அதைக்கேட்ட கல்பசுந்தரி அம்மா புஷ்கரீகா! உலகத்தில் ஸ்திரீகளுக்கு புருஷ பாக்கியந்தான் அளவற்ற சம்பத்து அப்படியிருக்க, நான் காதலனை யிழந்திருப்பதால் இவ்வுத்தமனை நாளையத்தினம் எனக்குக் காண்பியுமென்றாள். அதைக்கேட்ட புஷ்கரீகா அப்படியேநல்லதென்று என்னிடம்வந்து அங்குநடந்தவரலாறு முழுதும் தெரிவித்து, என்னையழைத்துக்கொண்டு மாதேவி என்கிற பூங்காவனத்துக்குட்சென்று அவ்விடமிருக்கும் ஒரு உன்னதமானமேடையருகில் புஷ்பச் செடியின்கீழ் இருக்கச்செய்து சகோதரா! இதுமகாரகசியமானயிடம் நீ ஜாக்கிரதையாய் இவ்விடத்தில்தானேயிரும் நானந்தப்புரஞ்சென்று கல்பசுந்தரியோடுகலந்து இருவருமாய் இன்றுமாலையில் இங்கு வருகிறோமென்று சொல்லிப் போனாள்.

பின்பு நானவ்விடத்தில்தானே யிருந்து மாலைப்பொழுதை எதிர்பார்த்திருந்தேன். அப்போது புஷ்கரீகா கல்பசுந்தரியை யழைத்துக்கொண்டு புஷ்பஜாதிகளை காண்பித்து வருவதைக்கண்டு, செடிமறைவில் நின்று அவளழகைப்பார்த்து பிரம்மித்தவனாய், விரகமுற்று எனக்குள் நினைத்த தென்னவெனில், இவள் யார்? நீருறைமகளோ, நிலத்துறைபவளோ, மாமலை மானோ, மாதுரியத்தேனோ, மாசற்றமணியோ, கோதற்றகனியோ, இந்திரபுரியோ, சந்திரகிரியோ, சோலைசேர்மயிலோ, சுந்தரக்குயிலோவென்று நினைத்து, புஷ்கரீகா நம்மிடம் கல்பசுந்தரியின் அழகில் ஒருபங்குதான் தெரிவித்திருக்கிறாள் மற்றதொண்ணூற்றென்பது பங்கைதெரிவிக்காமல் போனாள், அது அவள்மீது பெருங் குற்றமென்று நினைத்து அவளையேபார்த்து நின்றேன். அப்போது புஷ்கரீகா அவ்விடத்திலேயே நின்றாள். கல்பசுந்தரியோவெனில், அன்னத்தைப்போல் நடந்து உன்னதமேடையண்டை வந்து சுற்றிச் சுற்றிப் பார்த்து என்னைக்காணமல் துக்கித்து சொல்லுகிறாள். புஷ்கரீகா என்னை ஏமாற்றிவிட்டாளே! எனதன்பன் இங்குயிருக்கிறான் போவென்றாளே! அப்படியிருந்

தால், என்கண்ணிற்கு புலப்படவில்லையே, ஒருவேளை மறைந்து என்னை சோதிக்கின்றாரோ, தெரியவில்லையே, எனக்கோ விரக தாபம்சகிக்க முடியவில்லையே, ஓ காமதேவா! நான் என்னகுற றஞ்செய்தேன் ஏன் என்னை இவ்வாறு துன்பப்படுத்துகிறாய், எ ன்றுபித்தம் பிடித்தவள்போல் பேசிநிற்கும் பேதையைக்கண்டு, மனந்தாளாமல் அவளெதிரில் வந்து ஆ-என்னுசைக்கிளியே! நீ காமதேவனுக்கு என்ன குற்றம் செய்தேனென்று சொல்லிக் கொண்டாயே அது உனக்குத்தெரியவில்லையா, நீ ஒரு குற்றம் செய்திருக்கிறாய் அதென்னவெனில், காமதேவன் மனைவியைப் பார்க்கிலும் நீமிகுந்தசௌந்தரியவதியாய் இருப்பதினால் காமன் அவளைப்பார்க்க வெட்கமடைந்து, உன்னை வதைக்கின்றான் அ வனை தூஷிப்பது தருமமல்ல வென்று சொல்லவே, என்னைக் கண்டு தலைகுனிந்தனள். அப்போது நான் அவள் கையைப்பற் றி என்னாலுனக்கு ஒரு தீங்கும்நேர்ந்ததில்லை யாதலால் என்னு வலைத்தணிக்க அருள்செய்யும் அமிர்தரஞ்சிதமே யென்று சமா தானம்செய்யவும், அவளென்னை யாலிங்கனம்செய்து அருகிலிரு ந்த மேடையண்டையழைத்துச்செல்ல நாங்களிருவரும் அதன் மீது உட்கார்ந்து, நெடுநாளாய்பழகினவர்போல் அநேகமானமர் மங்களை பேசிக்கொண்டிருக்கையில், அவளென்னை நோக்கி நா யகா! எழுந்திரும் நாமரண்மனைக்குப் போவோமென்று சொல் லவும் கிஞ்சிற்று சந்தேகமுற்றிருந்தேன்.

அப்போது புஷ்கரீகா நாங்களிருக்கும் உன்னதமேடையி னிடம் வந்து, அம்மா கல்பசுந்தரி! இராக்காலமானதால் நாம் அரண்மனைக்குப்போவோமென்று சொல்லவே நாங்கள் மூவரு மாய் அப்பூங்காவனத்திலிருக்கும் அரண்மனைக்குட்சென்றோம். அப்போது அவ்விடத்தில் தரையெல்லாம் மகமல்பட்டு பரப்பி மகா உன்னதமானவேலைகள் செய்திருந்தது, அதில் ஒரு அறை யில் அழகிய கட்டிலும் பத்துநாற்காலிகளும் சொர்னஜாடியில் ஜலமும் தந்தப்பிடிபோட்ட மயில்விசிரிகளும், உன்னதமான தட் டில் புஷ்பச்செண்டுகளும் இன்னுமனேகவித சாமான்களுமிருந் தது, இதுகளைக்கண்ட நான் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொ ண்டிருக்கையில், கல்பசுந்தரி என்னையழைத்து மஞ்சத்திலுட் காரச்செய்து வேண்டிய உபசரணைசெய்யவும் நாங்களிருவரும்

எங்களுடைய விரகதாபத்தைத்தீர்த்துக்கொண்டுஒருவரையொருவர் பிரியமனமில்லாமல் அன்றிரவு நித்திரைசெய்து, விடிந்த பின்னெழுந்து அவளை நோக்கி கல்பசுந்தரி உன்னைவிட்டுப்பிரிய எனக்கு விடைகொடுமென்றுகேட்டேன், அதையவள் கேட்டு மதிமயங்கி நாயகா! என்னைவிட்டு நீர் பிரிந்துபோனால் என்னுயிர் நீங்கும் அதினாலுமக்கு ஸ்திரீஹத்தி யணுகுமாதலால் யென்னையும் உம்முடனழைத்துப் போகவேணுமென்றாள்.

அதைக்கேட்டு நான் அவளைநோக்கி என்பிரியநாயகி உனக்கு என்பேரில் உண்மையாகவே பிரியமிருந்தால் நான் சொன்னபடி நடக்கவேண்டுமென்றேன், அதற்கவள் சம்மதித்தாள். அப்போது நான்சொல்லியதென்னவெனில், என்காதலியே! ஒரு ரகசியமான விஷயம் உனக்குத் தெரிவிக்கின்றேன் நீ அதைப் போல் நடத்தினால் உன்னைவிட்டு எப்போதும் பிரியேன், இதுவே சத்தியமானவார்த்தையென்றுசொன்னேன். இதனைக்கேட்ட கல்பசுந்தரி என்னைக்கட்டி ஆலிங்கனம்செய்து சுவாமி! நான் தங்களுக்கு சுவாதீனமாய்விட்டேன் இனி என்னால் ஆகவேண்டியவேலையைத்தெரிவித்தால் தடையில்லாமல் செய்கிறேனென்றாள். அதைக்கேட்டு நான் என் ஆசைநாயகி நீ எனக்குச் செய்யவேண்டிய வேலையென்னவென்றால், உன்கணவனாகிய விகடவர்மன் இவ்விடம் வந்தால் அவனிடம்லலிதமாய்ப்பேசி என்னுருவப்படைத்தை அவனுக்குக்காண்பித்தால், அதைக்கண்டுஉனக்கு இந்தப்படம் எப்படி கிடைத்ததென்று கேட்பான். அதற்கு நீ என்னரசே! என்னிடம் மாந்திரீகத்திற் சாமர்த்தியமுள்ள ஓர் கிழவிவருவதுண்டு அவள் இரவில் நடுச்சாமத்தில் அக்கினி வளர்த்தி ஏதோ ஒருவிதமான மந்திரம்சொல்லிதான் இப்பேர்க்கொற்ற உருவத்தையடைகிறாள். இதுவுமன்றி யார் யாருக்கென்னென்ன வேண்டுமோ அதுகளைசெய்கிறாள். இப்படி யெல்லாம் செய்தபின் அவள் மாறு ரூபமடைந்த உருவப்படத்தை எனக்குத்தந்தாள் அப்போது நானவளைநோக்கி, அம்மணி! தாங்கள் இப்படத்தைக்கொடுப்பதில்பயனில்லை இதெனக்குவேண்டாம். அப்படி உனக்கு யென்மீது பிரியமிருந்தால் அவ்வுருவமடைவதற்குண்டாகிய மூலமந்திரங்களை யெனக்குக் கற்பித்தருளுந்தாயே என்று வணங்கினேன், அப்போதவள் என்மீது பிரியமுள்

ளவளாய் அம்மந்திரங்களை எனக்குப் போதித்திருக்கிறாள். நானும் அவ்விதமாய்தீவளர்த்தி மந்திரம்செய்ய இப்போதிருக்கும் ரூபமாறி இப்படத்தைப்போல் ஆண்ரூபமடைவேன், ஆனதால் நானும்மை இவ்வுருவமாக்கி பழமையாகிய என்பெண்ணுருவை யடைவேன், அதைப்பற்றியே உமக்குக்காண்பிக்கவந்தேன் ஆகையால் தங்களுடைய எண்ணம் எப்படியோ யென்றுகேட்பா யானல் அதற்கவன் யென்ன சொல்லுகிறனே அதைத் தெரிந்து என்னிடம்சொல்லவேண்டுமென்றேன், அவளும் அதற்குச் சம்மதித்து அப்படியேசெய்கிறேனென்றாள்.

அப்போது நானும் கல்பசுந்தரியும் சந்தோஷமாய் அன்றிரவைக்கழித்தோம். மறுநாள்காலையிலெழுந்து எனக்குவேண்டிய உபசாரம்செய்து என்னையோர் ரகசியமான இடத்தில் இருக்கச்செய்து விகடவர்மன் வரவுக்கெதிர்பார்த்திருந்தாள். அப்போது அரசனுகியவிகடவர்மன் அந்தப்புரம் வரவும் அவனைக் கண்டு சந்தோஷவார்த்தையாடி அப்படத்தைக் காண்பித்தாள். அவனும் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இதேது இப்படம் உனக்கெப்படி கிடைத்ததென்று கேட்டான். அதற்கவள் நான் சொல்லியவண்ணம் அவனுக்குத் தெரிவிக்கவும் அவன் மிகுந்த ஆவலோடு மனைவியைப்பார்த்து கல்பசுந்தரி! நீ இவ்வளவுசாமர்த்தியவதியென்று நான் இதுவரையில் தெரியாமலே யிருந்துவிட்டேன். அது என்னுடைய தப்பிதமாகையால் இப்போது இப்படத்தைப்போல் என்னுருவத்தை மாற்றிவிடுமென்றான். அதற்கவள் அரசே! தாங்கள் இவ்வளவு அவரசப்படக்கூடாது ஏனெனில், தாங்களும் இப்படத்தை மந்திரி பிரதானி களுக்குக் காண்பித்து யோசனைசெய்து தெரிவித்தால் நானும் அதற்கு வேண்டிய முயற்சிகளெல்லாம் சித்தப்படுத்தி வைக்கிறேனென்றாள். இதனைக்கேட்ட விகடவர்மன் அவசரத்துடனேபடத்தை யெடுத்து இராஜசபைக்குப் போய்விட்டான். பின்பு கல்பசுந்தரி என்னிடம்வந்து அங்கு நடந்தவரலாறு முழுதும்சொல்லி என் நாயகா இனி நடத்தவேண்டிய வேலையை தெரிவியுமென்றாள். அப்போது நான் என்னைசைக்கிளியே இனிசெய்யவேண்டியதென்னவெனில், நாளையத்தினம் விகடவர்மன் இவ்விடம்வந்து நீ கோரியபடி என்னுருவத்தை மாற்றிவிடுமென்று சொல்லுவானு

கில் நீ அப்போது அரசே! நமது பூங்காவில் ஒரு பெரியபள்ளம் வெட்டி அதில் ஓமசாந்திக்கு வேண்டிய அகில்- சந்தனம்- தேவதாரி முதலிய வாசனைக் கட்டைகளை நிறைத்து வைக்கும்படி திட்டம்செய்து, மந்திரி பிரதானி நகரவாசிகள் யாவருக்கும் தெரிவித்து பௌர்ணமிதிதியில் நடுச்சாமத்தில் நாமிருவரும் அங்குசென்றபின் நீ தனித்து ஓரிடமிருந்தால், நான்செய்யவேண்டிய வேலைகளெல்லாம்செய்துமுடிந்ததும் அப்போது பூசைமணி சத்தங்கேட்கும் அச்சமயத்தில் நீ என்னிடம்வந்தால், நீ கோரியபடி சித்தியாகும் ஆனல் பூங்காவனத்துள் நம்மிருவரைவிட யாரும் வரலாகாது மற்றவர்களெல்லாம் வெளியே நிற்கவேண்டும், மேலும் நீ நன்றிகெட்டவன் இவ்வுருமாறினல் முன்போல் பரஸ்திரீகளிடம் போகிறதில்லை யென்று வாக்குதத்தம் செய்வீராகில் உமது உருவத்தைமாற்றலாமென்று நீ-சொன்னல், அவனும் இராஜபத்தினியாகிய நீ செய்யும் விஷயத்தில் நம்பிக்கைப்படுவான், பின்பு நடக்கவேண்டிய காரியங்களைத்தெரிவிக்கிறேனென்றேன் அதற்கவளும் சம்மதித்துப்போயினள்.

இவ்வாறிருக்கையில் மறுநாள் விகடவர்மன் அப்படத்தையெடுத்துக்கொண்டு கல்பசுந்தரியிடம்வந்துநாயகி! நீ சொல்லிய வண்ணம் எனதுமந்திரிபிரதானி முதலிய யாவருக்குந்தெரிவித்தேன் அவர்களும் சம்மதித்தார்கள். இப்போது இப்படத்தைப்போலவே என்னுருவத்தைமாற்றிச் சிறப்பிக்கவேணுமென்ருன். அதைக்கேட்ட கல்பசுந்தரி நாயகா! தாங்கள் சொல்லியபடியேமுடிக்க யாதொரு தடையுமில்லை ஆகிலும் இன்றைய மூன்ரும்நாள் பௌர்ணமிதிதி வருகிறபடியால் இதற்குள் அதற்கு வேண்டிய சாமக்கிரிகைகளை சேகரிப்பதோடு நான் சொல்லுவதென்னவெனில், நமதுபூங்காவனத்தில் விசாலமாகபெரியகுழி வெட்டி அதில் சந்தனம் தேவதாரி முதலியவாசனைக் கட்டைகளை நிறைப்பிவைக்கச்சொல்லி, அன்றுநடுச்சாமத்தில் நாமிருவருமே தனியே அவ்விடம்சென்று நடத்தவேண்டியவேலைகளெல்லாம்முடித்து யாதொரு தடையில்லாமல் தங்கள் உருவைமாற்றிவிடுகிறேன். ஆனல்நாமிருவரைவிட இதராள் உள்ளேபிரவேசிக்கலாகாது நம்மிடவேலை முடிந்தபின்பு வரலாம், இதுவுமன்றி நான்தங்களை எனது வடிவிற்கிசைந்த நாயகனுகச் செய்தால்

ஒருவேளை முன்போல் என்னைவிரும்பாமல் பரஸ்திரீகளிடம்போ வீரொன்று நினைக்கிறேனென்றாள். அதைக்கேட்ட விகடவர்மன் கல்பசுந்தரியைநோக்கி நாயகி! நான் செய்துவந்த தப்பிதங்களை யெல்லாம் மன்னித்துவிடு, இனி சொர்ப்பனத்திலும் ஒருஸ்திரீ முகம் பார்க்கமாட்டேனென்றுசொன்னான். அதையவள் கேட் டுமனத்திருப்தியடைந்தவள்போல் அபிநயித்து நாயகா! ஆனால் அதற்குவேண்டிய வேலைகளெல்லாம் சித்தஞ்செய்துவாருமென் றுசொல்லியனுப்பினாள்.

இவ்வாறு சொல்லிய பின்பு கல்பசுந்தரி என்னிடம்வந்து அங்கு நடந்த வரலாற்றையென்னிடம் தெரிவித்து இனிநடத்த வேண்டியவேலையை தெரிவியுமென்றாள். அப்போதுநான் அவ ளைநோக்கி சொல்லியதென்னவெனில், என்பிராணதாரமே! நீ செய்தபேருதவியை ஒருக்காலும் மறந்துவிடேன், ஆகிலும் நா ன் சொல்லுவதை கருத்திலிருத்தவேண்டும் எப்படியென்றால், நமது பூங்காவனத்தில் உன்னதமேடையருகில் என்னைக் கண்டு காதலுற்றாயே, அவ்விடத்தில் ஓர் அடர்ந்தபுஷ்பச்செடியிருக்கி ன்றது அங்குநான் முன்னுதாய்சென்று விகடவர்மனுக்குத்தெரி யாமல் மறைந்திருக்கிறேன் அப்போது நீ விகடவர்மனையழைத் துக்கொண்டு நாம் நியமித்திருந்த பள்ளத்தருகில்வந்து அதைக் கொளுத்தி நெருப்புண்டாக்கி, அதுநன்றாய்ப்பற்றி யெறியுஞ்சம யத்தில் நான் கொடுக்கும் ஒருவிதபஸ்பத்தை நெருப்பில் போடு வையாகில் உடனே புகையுண்டாகும். அப்போதுநீ விகடவர்ம னைநோக்கி நாயகா! நான் உனக்குக்காண்பித்த படத்தைப்போல் ரூபம்மாறிவிடுகிறேன் பின்பு இந்தரூபத்தை உனக்களித்து பழ யபடியே நான் பெண்ரூபமாகி விடுகிறேன். அப்பால் நீயும் நா னும் அரண்மனைபோய்சேரலாம் நீர் அதுவரையில் வெளியே சென்று ஒரு செடிமறைவில் மறைந்திருமென்று அவனுக்குத் திட்டஞ்செய் தனுப்பிவிட்டு நானிருக்கும் மேடையண்டைவந் தால், அதன்பின்பு நடத்தவேண்டிய வேலையெல்லாம் நானேமு டித்துவிடுகிறே னென்றேன். அவளுமதற்கிசைந்து என்காதல னே! உன்கருத்தைப்போல் நடத்துகிறேனென்று என்னிடம்வி டைப்பெற்றுப் போனாள். அப்பால் விகடவர்மன் கல்பசுந்தரி சொல்லியவண்ணம் பூங்காவனத்தில் குழியைவெட்டி எல்லாஞ்

சித்தம் செய்து பௌர்ணமிதினம் கல்பசுந்தரியிடம் வந்து நாயகி! இன்று நாம் பூங்காவனத்திற்குப் போவோம் வாருமென்று சொல்ல அவளுமதற்குச் சம்மதித்துப் பிரயாணமானள். இச்சங்கதி மந்திரி பிரதானி அந்நகரவாசிகள் முதலியயாவருங்கேட்டு ஆச்சரியமுற்று இவ்விந்தையைக் காணும்படி சந்தைபோல் கூடிவெளியிலிருந்தார்கள்.

அப்போது நான்சூரியன் அஸ்தமித்ததும் அரசனைப்போல் ஆடையாபரணந்தரித்து இடுப்பில் கத்திகட்டி ஒருவர் கண்ணிலும் புலப்படாமல் முன்சொல்லியவண்ணம் மேடையருகில் சென்று பதுங்கியிருந்தேன். இவ்வாறிருக்கையில் நடுச்சாமத்தில் விகடவர்மனும் கல்பசுந்தரியும் படைவீரர்களோடு புறப்பட்டு பூங்காவைச்சேர்ந்து யாவரையும் வெளியே நிறுத்திவிட்டு அவ்விருவர்களும் நான் நியமித்திருந்தயிடத்திற்குவந்ததும் கல்பசுந்தரி அக்குழியில் அக்கினியைமூட்டி அதுநன்றாய் பிரகாசித்து எறியும்போது அவனைநோக்கி நாயகா! இதோ நான்சொல்லிய வண்ணஞ்செய்கிறேன் எப்படியெனில், முன்னே நீர்கண்ட ஊருவப்படம்போல் ஆண்ரூபமாகிவிடுகிறேன், அவ்வுருவத்தை உமக்களித்து பழயபடியே நான் பெண்ணுருவமடைந்து விடுகிறேன் பாருமென்று தன்கையிலிருந்தபஸ்பத்தை அக்கினியில் போடவே, அவ்வனமெல்லாம் புகைசூழ்ந்துக்கொண்டது இதைக்கண்டவிகடவர்மன் ஆச்சரியமுற்றிருக்கையில், கல்பசுந்தரி நாயகா! இனிநீர் வெளியேபோய்விடும் நான் பூசைசெய்து முடிந்ததும் சற்று நேரஞ்சென்று மணியோசைகேட்கும், அப்போது நீர் இவ்விடம்வந்தால் காணலாமென்றாள். அதைக்கேட்ட விகடவர்மன் வெளியேசென்று மணியோசைக் கெதிர்பார்த்திருந்தான். அச்சமயத்தில் கல்பசுந்தரி மெதுவாய் நடந்து நானிருக்கும் மேடையருகில்வரவும், அப்போது நான் அவளைப்பார்த்து மனக்களிப்படைந்து என் ஜீவரத்தினமே! நீ சற்றுநேரம் இவ்விடமிருந்தால் நானங்கு சென்று நடத்தவேண்டிய வேலையை முடித்து உன்னைவந்தழைத்துப் போகிறேனென்று சொல்லிவிட்டு அக்கினிக்குழியண்டைவந்து பூசைமணி யடித்தேன். அச்சத்தங்கேட்ட விகடவர்மன் ஆவலோடு ஓடிவந்து என்னைக்கண்டு ஆச்சரியப்பட்டு என்னருகில் வந்துநின்று கல்பசுந்தரி நான்

உன் விஷயத்தில் செய்தகுற்றத்தைப்பொறுத்து ஆட்கொள்ளு மென்றுவணங்கினன். அப்போது நான் பூசைமுடித்தவன்போ லபிநயித்து அவனைநோக்கி நாயகா! நீ சொல்லியதெல்லாம் உன் மனதில் எப்போதும் நீங்காதிருக்குமாவென்றேன். அதற்கவன் இந்த அக்கினிசாட்சியாய் இனிமேல் வேறுஸ்திரீகளைப்பார்ப்ப தில்லை உன்பேச்சுக்கு மறுமொழியும் சொல்லேனென்ருன். அ ப்போது நான் நாயகா! அப்படி நீ நடப்பது உண்மையாயிருக்கு மாகில் எனக்கு இராஜரகசியத்தின் உண்மையைத் தெரிக்கவே ண்டுமென்றேன் அதற்கவன் சொல்லுகிருன்.

ஓ- கல்பசுந்தரி! எனதெண்ண மென்னவென்றல், எனது மாமனுகிய மிதுலாநகரத்தரசனையும் அவன்மனைவியையும் என் மந்திரிகள் சொல்லியவண்ணம் விஷமிட்டுக்கொன்று சர்வாதிகா ரமும்பெற நினைத்திருக்கின்றேன். இரண்டாவது பண்டரிபுறத் தின்பேரில் படையெடுத்து அதைப்பிடித்தாள நினைத்திருக்கின் றேன்; மூன்ருவது நம்முடையநகரத்தில் ஒருவியாபாரியினிடம் விலையுயர்ந்த ஒரு வயிரக்கல் இருக்கிறது அதனை விலைக்குக்கே ட்டால் கொடுப்பதில்லையென்ருன் அதையவனிடமிருந் தபகரி க்க நினைத்திருக்கிறேனென்ருன். இவைகளையெல்லாங் கேட்ட நான் என்னரசனே! இப்பாதகன் சதாதுஷ்கிர்த்தியங்களைப் பிர ஜைகளுக்குப் புரிந்துவரும் இத்துன்மார்க்கனுக்கு கடவுளால் யேற்படுத்திய தெண்டனை இதுதானென்று என்னறையிலிருந் த கத்தியால் அவன் சிரசைவெட்டி, அப்பிரேதத்தை யெடுத் து அக்கினிக்குழியில் எறிந்துவிட்டு என்வருகைக் கெதிர்பார்த் திருக்கும் கல்பசுந்தரியிடம் சென்று என்னுசைநாயகி! உன்கண வனுகிய சண்டாளனை அதஞ்செய்துவந்தேன் இனி உன்னிஷ்ட ப்படி நாம்போகவேண்டிய விடத்துக்குப் போவோம் வாருமெ ன்றுசொல்ல, அவளு மதன்வரலாறு தெரிந்து சந்தோஷத்தை யடைந்து நாங்களிருவரும் வேடிக்கைபாக வெளியேபுறப்பட்டு வருகையில் அவ்விடம் வந்திருந்த மந்திரி பிரதானிமுதலிய பிர ஜைகள் யாவரும் என்தேகம் மாறுபட்டிருப்பதைக்கண்டு ஆச்ச ரியமுற்றவர்களாய் பேசிக்கொண்டதென்னவெனில், நம்முடை யவரசன் கூடுவிட்டு கூடுபாய்வதுபோல் சித்துபுருடராய் இரு க்கிருனென்று பேசிக்கொண்டார்கள். அச்சமயத்தில் நானும்

கல்பந்தரியோடு கம்பீரமாக நடந்து அரண்மனைபோய்ச் சேர்ந்து, அன்றிரவுமுழுதும் இராஜாங்கவிஷயங்களுக்கு வேண்டியதெல்லாம்கேட்டுத் தெரிந்துக்கொண்டேன்.

பின்பு நான் மறுநாள் காலையில் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து வழிபடுகடவுளைத்தொழுது ஆடையாபரணந்தரித்து இராஜசபைக்குச் சென்றேன், அப்போதவ்விடமிருந்த மந்திரிபிரதானிமுதலிய யாவரும் என்னைக்கண்டு சந்தோஷித்து நான்தான் தங்களுடைய பழயவரசனென்று சந்தேகமில்லாமல் எனக்கு வேண்டியமரியாதை நடத்தினார்கள். அச்சமயத்தில் நான் ஆசனத்தில் வீற்றிருந்து சற்றுநேரம் பொறுத்து நிதானித்து மந்திரிபிரதானிகளை அருகிலழைத்து, அவர்களுக்குத் தெரிவித்ததென்னவென்றால், அப்பா மந்திரிகளே இப்போதெனக்குரூபம் மாறுபட்டிருப்பதால் எனக்கு எதைப்பார்த்தாலும் புதிதாக வேதோற்றுகிறபடியால் நான் நடத்தவேண்டிய காரியங்களெல்லாம் ஒன்றுந்தெரியவில்லை, யாதலால் நீங்களனைவரும் சேர்ந்து நான் நடத்தும் அதிகாரவிஷயங்களைத் தெரிக்கவேண்டும் இதுவல்லாமலும் நான் விகாரரூபத்தோடிருக்கையில் அனேக துர்யோசனை யெண்ணியிருந்தேனல்லவா? இப்போது நல்ல ரூபமாறினதால் எனக்கு நல்லயோசனை உண்டாகிறது அதெப்படியென்றால், என துமாமனாகிய பிரகாரவர்மனை விஷமிட்டுக் கொல்ல உத்தேசித்திருந்தோமே, அதைநடத்த இப்போதெனக்குச் சம்மதியில்லை ஆனதால் அவர்களைச் சிறையினின்று விடுதலை செய்து அவர்களுக்குவேண்டி உபசரணைசெய்யவேண்டும். இரண்டாவது பண்டரிபுரத்தின்மேல் அனியாயமாய் படையெடுக்கவேண்டியதில்லை, மூன்றாவது நம்துநகரவாசியான வியாபாரியிடமிருக்கும் வயிரக்கல் நமக்குவேண்டியதில்லை, இப்போ நான் சொல்லிய மூன்றுவிஷயங்களையும் நிவர்த்திசெய்துவிட யோசித்துச் சொல்லுங்களென்று உத்திரவளித்தேன். இச்சங்கதிகளெல்லாம் அவர்கள் கேட்டு எனக்கு நல்லயெண்ணமுண்டானதைப்பற்றி சந்தோஷமடைந்து ஓ-மகாராஜா! தங்கள் எண்ணப்படியே மேற்சொல்லிய விஷயங்களை நிவர்த்திசெய்துவிடுகிறோமென்று அரசாங்கத்துக்கு வேண்டிய விஷயங்களை யெல்லாம் யெனக்குத்தெரித்து, என் தாய் தந்தையர்களாகிய பிரகாரவர்ம

னையும் பிரியவதனுவையும் சிறைநீக்கி அவர்களுக்கு வேண்டிய உபசரணைசெய்து என்னிடம் வந்து தெரிவித்தார்கள். அதைக் கேட்டு நான் மனக்களிப்படைந்து, அவரவர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு அரண்மனைக்குச்சென்று, என்னிஷ்டநாயகியாகிய கல்பசுந்தரியை நோக்கி இராஜசபையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்து என் கருத்துக்கிசைந்த காதலியே! உன்னுதவியால் இவ்வகையான பெருமை யடைந்தேன். இதுவல்லாமல் மந்திரி பிரதானி முதலிய யாவரும் என்பேரில் கிஞ்சிற்றேனும் சந்தேகப்படாமல், தங்கள் பழயவரசனென்றே தீர்மானித் திருக்கிறார்களென்றேன். அதைக்கேட்டு கல்பசுந்தரி மனவுல்லாசத்தோடு யாதொரு விகற்பமில்லாமல் என்னோடுவாசஞ்செய்திருந்தாள்.

மறுநாள் நான் தாதியாகிய புஷ்கரீகாவை யழைத்து அம்மா சகோதரியே! உன் தந்திரத்தால் எனது தாய் தந்தைகளின் சிறையை நீக்கிவிட்டேன். அவர்களையழைத்துவந்து நமதந்தப்புரத்திற்குச் சமீபத்திலிருக்கும் உப்பரிகையில் குடியேற்றி உன்னன்னையை யழைத்து வந்து அவர்களுக்குத்துணையா யிருக்கச்செய்து நீபாதுகாத்துவந்தால், சிலநாள்சென்றபின்பு அவர்களை முன்போல் அரசாளச் செய்வோம், என்வரலாறு முழுதும் அவர்களுக்குத் தெரிவித்து வாருமென்று சொல்லியனுப்பினேன். அவ்வாறே புஷ்கரீகா நான் சொல்லியவண்ணமே முடித்து மறுநாள் என்னிடம் வந்து தெரிவித்தாள். பின்பு ஒரு நாளிரவில் நானும் கல்பசுந்தரியும் புஷ்கரீகாவை அழைத்துக் கொண்டு என்தாய் தந்தையிருக்குமரண்மனை சென்று அவர்களைக் கண்டு வணங்கி, நீங்கள் செய்த புண்ணியவசத்தினுல் நானிதுவரையில் உயிரோடிருந்து உங்களை சிறை நீக்கினேனென்று சொல்லவும், அவர்கள் என்னைக்கட்டித்தழுவி அடா குழந்தாய்! உன்னைக்காட்டில் யிழந்துவிட்டு இதுவரையில் பற்பலதுன்பமடைந்து இப்போதுன்னுல் நன்மை யடைந்தோம். இனி எங்கள் கண்களிக்க இம்மிதுலாநகரத்தை நீ பட்டாபிஷேகம்செய்துக்கொண்டு எங்களை ஆதரிக்கவேண்டும் அப்பனே! யென்று சொல்லவும், நான் அம்மா என்சகோதரன் என்னைவிட்டுப் பிரிந்துபோனமையால் நானவனைக் காணும் வரையில் ஒரு சுபகிர்த்தியங்களையும் செய்

துக்கொள்ள மாட்டேனென்று அவர்களுக்கு சமாதானம்சொல்லிவிடைபெற்றுக்கொண்டு அரசுசெய்துவரும் நாளில், என்னரசனே! தங்கள் மகுடாபிஷேக நிரூபம் வரவும் அதைக் கண்டு இவ்விடம்வந்து தங்களைக்கண்டேனென்று அஸ்வசேனன் தன் வரலாறு முழுதுங் தெரிவித்தான்.

இதனைக் கேட்ட அமிர்தவசனன் ஆனந்த மடைந்து ஆ-என்சகோதரா! நீ அசாத்தியமான செய்கையை நடத்தி தப்பித்து வந்தாயென்று மெச்சி சந்தோஷமடைந்தான்.

ஜெயசிம்மன்.

தன்வரலாறுகூறுதல்.

ஓ- என்னரசனே! நாங்களெல்லாம் அன்றிரவில் நித்திரை செய்து அருணோதயத்தி லெழுந்து பார்க்கையில் தங்களைக் காணாமல், அவ்வனாந்திர மெல்லாந்தேடி வருந்தி கண்ணிழந்தவர்களாய்த் தனித்தனியே சென்றோம். நானோ எனக்கிச்சையான வழியைநாடி பற்பல தேசங்களைச் சுற்றிப் பார்த்து வருகையில், ஒரு நாள் சூரியன் வெப்பத்தால் விடாய்ப்பட்டு அருந்த ஜலமகப்படாமல் தேடிவருகையில், சோமபுரியென்னும் நகரத்தருகிலிருக்கும் சோலையைக்கண்டு அங்கு சென்று விருட்சத்தினிழலில் உட்கார்ந்து சற்று ஆயாசந்தீர்ந்து அச்சோலையின் வினோதங்களைக் கண்ணுற்று, வருகையில் அவ்விடத்தில் ஒரு நீரோடை போவதைக்கண்டு மனக்களிப்புடன் ஜலமருந்த அதிலிறங்கினேன். அங்கு ஜலத்திற்குள் சூரியன் பிரகாசிப்பதுபோல் எனக்குத் தோற்ற முண்டானது அதை நிதானித்துப் பார்த்து நான் நினைத்த தென்னவெனில், இப்போது பகற்காலமானதால் சூரியனுடைய பிரகாசம் ஜலத்தில் தோற்றுகிறதென் றெண்ணி இரண்டு கையினாலும் ஜலமருந்தி விடாய்தீர்ந்து பார்க்கையில், அதினுள் ஒருமாணிக்கக்கல் லிருக்கக்கண்டு அதை எடுத்துவெளியே வந்து இந்தக்கல்லின் பிரகாசந்தான் நமக்குஜலத்தில் தெரிந்ததென்றெண்ணி அச்சோலையைவிட்டுப்புறப்பட்டுப்போகையில், ஒரு பிராமணன் விருட்சத்தினடியில் நாலு சிறுகுழந்தைகளை வைத்துக்கொண்டு துக்கித்துக்கொண்டிருந்தான். அவனை

ப்பார்த்து ஐயா! நீர் யார் எனிந்தக்குழந்தைகளைப்பார்த்து விசனப்படுகிறீர் என்று கேட்டேன். அதற்கவன் ஐயா பாலியனே! நானிருப்பது அனந்தபுரம் என்பேர் துங்கபத்திரன் பிறவிச்செல்வத்துடன் வாழ்ந்திருந்தவன், எனக்குவறுமைமேலிடவும் என் மனைவி காலகதியாய் இக்குழந்தைகளை விட்டுபரகதிசேர்ந்தாள் இனி எப்படி தாயற்றபிள்ளைகளைக்காப்பாற்றுவதென்றுவருந்துகிறேனென்றான், அதைக்கேட்டுநான்பரிதாபப்பட்டு எனக்ககப்பட்ட மாணிக்கத்தை அவனுக்குக் கொடுத்து ஓ-ஐயரே! இதனை இந்நகரத்தில் விற்பனைசெய்து இக்குழந்தைகளைக் காப்பாற்றுமென்று அவனிடம் விடைபெற்று சோமபுரிக்குள் சென்று அந்நகரத்தின் அலங்காரங்களைக் கண்ணுற்று வருகையில், அந்நகரத்தரசன் காவலாளிகள் இப்பிராமணனை மடல்விரியக்கட்டிக்கொண்டு வருவதைப்பார்த்து நின்றேன். அப்போதவர்கள் அருகில்வந்தவுடன் கட்டுண்டபிராமணன் என்னைப்பார்த்து அடா பாவி! வருத்தமுற்றிருந்த என்முன்வந்து இக்கல்லைத்தந்து மோசஞ்செய்தாயே யென்று சொன்னான். அதனைக்கேட்ட காவலாளிகள் என்னைப் பிடித்துக்கட்டி பிராமணனோடு தமதரசனாகிய சோமதத்தனிடங் கொண்டுபோய் விட்டார்கள். அவர் இதினுண்மைவிசாரித்து பிராமணனை விடுதலைசெய்து என்னைநோக்கி இந்தமாணிக்கம் உனக்கெப்படி கிடைத்ததென்று கேட்க, நான் நடந்தவரலாறுதெரிவிக்க அதை செவிகொடுத்துக்கேளாமல்காவலாளிகளை நோக்கி இவனைக் கொண்டுபோய் சிறைச்சாலையிலடையுங்களென உத்திரவளித்தான்.

பின்பு காவலாளிகள் என்னைச் சிறைச்சாலைக் கழைத்துப்போய், அங்கு காலில் விலங்குடனிருக்கும் சிலரை எனக்குக் காண்பித்து இதோ உன்தோழர்களென்று என்காலிலும் விலங்கிட்டுப்போனார்கள். அப்போது நான் எனக்கு நேரிட்ட துற்பாக்கியத்தை நினைத்துமனவருத்தமுற்றவனாய் இதின் விபரத்தை தெரிந்துக்கொள்ள யோசித்து என்னுடனிருப்பவர்களைப்பார்த்து ஐயா! என்தோழர்களென்று காவலாளிகள் சொல்லிவிட்டுப் போனார்களே நீங்களென்னகுற்றஞ்செய்தீர்கள். இத்தெண்டனை எப்படிகிடைத்ததென்று கேட்டேன். அதற்கவர்கள் சொன்னதாவது; அப்பா நாங்களெல்லாரும் ஒருநாள் இந்நகரத் தரசனை

கிய சோமதத்தன் அரண்மனையிலும் மந்திரியாகிய மணபாலன் அரண்மனையிலும் சுரங்கஞ்செய்து, அங்குள்ள பொருள்களையெல்லாம் கொள்ளையிட்டு காட்டிற்கோடினேம். மறுநாள்காலையில் சோமதத்தன் தன் காவலாளிகளைவிட்டு எங்களைத்தேடிப்பிடித்துவரும்படி ஆக்கியாபித்தான். அவர்களும் பலயிடங்களில் தேடி வேசாரியாய் முடிவில் நாங்களிருந்த ஆரண்ணியத்திற் புகுந்து எங்களனைவரையும்பிடித்து, நாங்கள் களவுசெய்த பொருள்களோடு அரசன்முன் கொண்டுபோய் விட்டு சொத்துகளைப் பரிசோதித்துப்பார்க்கையில் அதில் சிறந்த மாணிக்கம் ஒன்று காணவில்லை அது யெங்கேயென்று எங்களைக் கேட்க, நாங்கள் அதைப்பார்க்கவில்லை யென்று சொல்லவும் சோமதத்தன் கோபக்குறியோடு எங்களைநோக்கி அதைக் கொடாவிடிற் உங்களனைவரையும் சிறச்சேதம் செய்துவிடுவே னென்றுசொல்லி காவலில் வைத்தானென்றுசொன்னார்கள். அதைக்கேட்டு நான் எனக்குக் கிடைத்தது அந்தமாணிக்கந்தான் அதைபிராமணனுக்குக்கொடுத்ததினுல் இந்த தெண்டனை நேரிட்டதென்று என் வரலாறு முழுதும் அவர்களோடுதெரிவித்து நேசித்திருந்தேன்.

இவ்வாறு காவலிலகப்பட்டு காலங்கழித்திருக்கையில், ஒருநாள் இரவில் எனது நேசரைநோக்கி சகோதரர்களே! நாம் எத்தனைகாலம் சிறையிலிருந்தாலும் நம்மை விடமாட்டார்க ளாகையால் நாம் தப்பித்துக்கொண்டு வெளியே போய்விடுவோம் உங்கள் கருத்தென்னவென்று கேட்க, அவர்களும்சம்மதித்து என்னேடு பிரயாணப்படயோசித்திருக்கையில், ஒருநாள் நாங்கள்நடுச்சாமத்தில் எங்களுக்குத் தரித்திருந்த விலங்குகளை யொடித்தெறிந்துவிட்டு வெளியேவந்து பார்க்கையில் காவலாளிகள் நித்திரைசெய்வதறிந்து அவர்களிடமிருந்த ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு வருகையில், நகரசோதகர்கள் யெங்களைக்கண்டு பிடித்து காவல்படுத்த நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவர்களை துரத்தியடித்து சோமபுரியை விட்டுவெகுதூரம் சென்றபின்பு, நானவர்களை விட்டுப்பிரிந்து காவியுடுத்தி சங்கமவேடந்தரித்து எனக்கிச்சையானபடியேநடந்து அங்காங்கு யாசகஞ்செய்துஜீவித்து திவ்யஸ்தலங்களைக்கண்டுதெரிசித்து புண்ணியதீர்த்தங்களாகிய கங்கை- யமுனை-சரஸ்வதி- நர்மதை-சிந்து-காவேரி-

கோதாவரி முதலிய திவ்யநதிகளில் ஸ்நானஞ்செய்து மூவாசையொழித்த முத்தர்களைப் பணிந்து அவர்களுக்குத் தொண்டுபுரிந்து காலங்கழித்துவரும் நாளில், ஒருநாள் மகாதவசிரேஷ்டரான பஞ்சமகோசரைக்கண்டு தரிசித்து ஓ-சுவாமிகளே நான் என்சகோதரனைப்பிரிந்து நெடுநாளாய் பற்பலவிடங்களிலும் தேடி யகப்படாமல் தங்கள் சன்னதியடைந்தேன். தேவரீர் கிருபை புரிந்து அவரிருக்குமிடந் தெரிவிக்க வேண்டுமென்று வணங்கினேன். அவர் என்னைநோக்கி அரசகுமாரனே !உன்சகோதரனைக்காண மூன்றாண்டு செல்லும் அதுவரையிலும் உன்கண்ணில் அகப்படமாட்டான், நீயவனைத்தேடுவதில்பிரயோசனமில்லை ஆனதால் சோமபுரியென்னும் பட்டணஞ்சேர்ந்து சுகமாயிருந்தால் அங்கரத்தரசனாகிய சோமதத்தன் தன்மகளான வாமலோசனாவை உனக்கு மணஞ்செய்யப்போகிறான். நீ அவ்விடமிருக்கும் நாளையில் உன்னரசனைக் காணுவாயென்று சொல்லி அஷ்டசித்திகளி லொன்றையெனக்குபதேசித்துப்போவென்று ஆசீர்வதித்தார். நானுமவரைவணங்கி விடைபெற்றுக்கொண்டு பற்பலதேசங்களைச்சுற்றிமுடிவில் சோமபுரிக்கருகில் வரும்போது யோசித்ததென்னவெனில், இவ்வரசன்நம்மைச் சிறைச்செய்திருந்தவனாச்சுதே ஒருவேளை நம்மைக்கண்டுபிடித்து தெண்டிப்பானோவென்கிற அச்சமில்லாமல் முனிவர் கூறியவுறுதியை நினைத்துசங்கமவேடத்துடன் நகரத்துட்பிரவேசித்து ஒரு சத்திரத்திற்றங்கி வாசஞ்செய்திருந்தேன்.

இவ்வாறிருக்கையில் அங்கரத்தரசனாகிய சோமதத்தன் மகளான வாமலோசனாவை மணம்புரியவேண்டுமென்றுபற்பல தேசத்தரசர்களும் வந்துகேட்க, சோமதத்தன் சம்மதிக்காமல் தடுத்துக்கொண்டே வந்தான். இவ்வதிசயத்தை பற்பலமன்னருங்கேட்டு பகைமேலிட்டு சமயம் பார்த்திருந்தார்கள். அப்படியிருக்கும் நாளில் நானும் அப்பெண்ணின் வடிவைக் காண ஆவல்கொண்டு கார்த்திருக்கும்போது, வாமலோசனா ஜெனித்த நாள் வரவும் அன்றையத்தினம் புத்திரோச்சவம் கொண்டாடும் படியாக நகரமெங்கும் அலங்காரஞ் செய்து ஆலயங்களுக்குப் பூசை முதலிய திருவிழாக்களும் நடத்தி அனேக தானங்களை ஏழை பரதேசிகளுக்குத் தன்கையால் கொடுக்கும்படி பூங்காவ

னத்திற்கு வந்தாள். அச்சமயத்தில் நானும் பரதேசிகளோடு சென்று பார்த்திருந்தேன். அப்போது வாமலோசனவும் அவளைச்சூழ்ந்து அனேகந்தாதிகளும் வருவதைப்பார்த்து அவளழகைக்கண்டு மோகமீறி பிரம்மித்து, நானெண்ணிய தென்னவெனில், இவ்வளவு பேரழகமைந்த பொற்கொடியானதால் பற்பல மன்னரும் வந்து இப்பாவையை விரும்பினர்கள். அந்தோ! பூவுலகப்பெண்கள் இப் பூவையினழகைப் பார்த்தால், இனிமேல் ஆண்வடிவைப்பார்த்து ஆசைப்படார்களே! என்று ஆச்சரியமுற்று நமதிச்சையைப்போல் இப்பச்சைக்கிளி கிடைக்குமோவென்றேங்கி காமவேதையால் கலக்கமுற்றவளையே பார்த்திருந்தேன். அப்போதவர்களருகில்வந்து ஒவ்வொருவருக்கும் ஒரு பொன்னுணயம் கொடுத்துவிட்டுப்போனர்கள்.

பின்பு நானுமதைவாங்கிக்கொண்டு பழயபடியே சத்திரஞ்சேர்ந்து அவள் மேல்கொண்ட மோகத்தால் அங்குவாசஞ்செய்து வருகையில், ஒருநாள் லாடதேசத் தரசனுகிய வீரகேசரியென்பவன் வாமலோசனவின் வடிவழகைக் கேள்விப்பட்டு தனது மந்திரிகளை விட்டு மணஞ்செய்யக் கேட்க, சோமதத்தன் முன்போல் தடுத்துவிட, அதைக்கேட்ட வீரகேசரி தனது நால்வகைசையின்பங்களுடன்படையெடுத்து சோமபுரிக்கருகில் வந்திறங்கி, தூதனையனுப்பித் தெரிவிக்கவும் சோமதத்தன் தன் பரிவாரங்களை சித்தஞ்செய்து மந்திரி பிரதானிகளோடு யுத்தத்திற்குச்சென்று இருபடைகளும் போர்புரிந்தார்கள். அச்சமயத்தில் நானும் அவ்விடஞ்சென்று பார்த்திருக்கையில், வீரகேசரி யுத்தஞ்செய்து சோமதத்தன் படைகளையடித்துத் துரத்தி அரசனையும் சிறைச் செய்துவிடவே, மந்திரியாகிய மணபாலனும் சிலபடைகளும் ஓடிவருவதைக்கண்டு அவர்களை மறித்து மந்திரியைநோக்கி ஐயா மணபாலனே! அரசனை பகைவர்கையில் ஒப்பிவித்து உன்னுயிரைக்காப்பாற்றி வந்துவிட்டாயே இதுதருமமாயிருக்கின்றதா? அரசனுக்கு ஆபத்துநேரிடுங் காலத்தில் மந்திரியானவன் தன்பிராணனை அவனுக்குத் தத்தம் செய்யும்படி மனுதர்ம சாஸ்திரம் சொல்லியிருப்பதால், இப்போது நீ ஓடிப்போகிற படைகளைக்கூட்டி எனக்குதவிசெய்தால் பகைவரைவாட்டி உன்னரசனைமீட்டி வருகிறேனென்றேன். அவனுஞ் சம்ம

த்து என்னேடு துணைவரவும் நான் சென்று வீரகேசரியை யெதிர்த்து போர்புரிந்து, முனிவருபதேசத்தால் முடியரசனை வெட்டிப் படியிலெறிந்து சோமதத்தனை மீட்கவும் மந்திரியாகிய மணபாலன் பேரானந்தமுற்று எனக்குத் தகுந்த மரியாதை செய்து தன்னேடு அரண்மனைக்கழைத்துச்செல்லவும், என்விருத்தாந்த மெல்லாம் சோமதத்தன் கேட்டு, சந்தோஷமடைந்து தன் குமாரத்தியான வாமலோசனவை யெனக்கு மணஞ்செய்ய யோசித்து நகரையலஞ்காரஞ் செய்து மகா வைபவத்துடனே நல்லசுபமுகூர்த்தத்தில் அக்கன்னிகையை எனக்குப் பாணிக்கிரகணஞ்செய்வித்தான். பின்பு நானும் அரசன் கோறியபடியே இளவரசுப்பட்டங் கட்டிக்கொண்டு சகலராஜகாரியங்களையும் நானே பார்த்துவந்தேன். என்னரசனே! அவ்வளவுசவுக்கியத்துடனிருந்தும் உன்னைப்பிரிந்த துயரம் என்மனதைவிட்டு நீங்காதிருந்ததால் முனிவர்சொல்லியபடிமூன்ருண்டுசெல்லவும், தங்கள் மகுடாபிஷேக நிருபத்தைக்கண்டு இவ்விடம் வந்து தங்களைக் கண்டேனென்று ஜெபசிம்மன் தன் வரலாறு முழுதும் தெரிவித்தான்.

இதனைக்கேட்ட அமிர்தவசனன் சந்தோஷமடைந்து ஆ-என்னருமை சகோதரா! நீ மகாபிரயாசையடைந்து பகைவரை வென்று பட்டத்தைக் கைக்கொண்டாயென்று மெச்சினன்.

இரத்தினவதனன்.

தன்வரலாறுகூறுதல்.

ஆ-என்னருமை சகோதரா! நீர் எங்களை விட்டுப் பிரிந்து போனதும் நான் தங்களைத்தேட யோசித்து பற்பல யிடங்களிலும் தேடியகப்படாமல் வருந்தினவனாய், முடிவில் விஜயபுரியென்னும் நகரத்தை நோக்கிவருகையில் அவ்விடத்தில் ஒரு சோலையிருக்கக்கண்டு அதனருகிற் சென்று பார்த்தேன். அங்கு சாமுண்டீஸ்வரி சந்நதியும் தடாகமுமிருந்தது, அப்போது சூரியனஸ்தமித்ததால் நாமிவ்விடம்தங்கி இரவைக்கழித்து விடிந்தபின் செல்வோமென்றுகருதி சந்நதியிலுட்கார்ந்தேன். அச்சமயத்தில் யாரோ சில மனிதர்கள் மூட்டைகளை யெடுத்துக்கொண்டு நானிருந்த இடத்திற்குவந்து அவ்விடத்தில் மூட்டைகளை வைத்து அதைபாகித்துக்கொள்ள பேசிக்கொண் டிருக்கையில், அந்நகரத்தரசன் காவலாளிகள் இவர்களைத்தொடர்ந்து வருவதையறிந்து மூட்டைகளை அவ்விடத்தில் வைத்துவிட்டு ஓட்டமெடுத்தார்கள். காவலாளிகள் அவ்விடம்வந்து பார்த்து மூட்டைகளை யெடுத்துக்கொண்டு நானிருந்த விடம்வந்து யென்னை நோக்கி நீயார்? இந்த மூட்டைகளை யெங்கிருந்து கொண்டுவந்தாயென்று கேட்க, நானதன் வரலாறு ஒன்றும் எனக்குத்தெரியாதென்று சொன்னேன். காவலாளிகள் என்னைப்பிடித்துக்கட்டி மூட்டையுடன் தமதரசனாகிய விஜயதரனிடங் கொண்டு

போய்விட்டு நடந்தவரலாற்றைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட வேந்தன் என்னைப்பார்த்து இந்தமூட்டைகளை எவ்விடத்திலிருந்து களவுசெய்தா யென்று கேட்க, நானவனைவணங்கி மகாராஜா! நான் வழிப்போக்கன் சந்நதியில் படுத்து விடிந்தபின் செல்வோமென்று அங்கிருக்கையில் காவலாளிகள் என்னைப்பிடித்துக்கட்டி இவ்விடம் கொண்டுவந்தார்கள். நான் களவுசெய்தவனல்லவென்றுசொல்லவும் வேந்தன் யோசித்து என்னை அந்நகரத்திற் கப்புறப்படுத்தும்படி காவலாளிகளுக்குத்திரவு செய்தான். காவலாளிகளும் என்னை யழைத்துவந்து அவ்வாறேவிட்டுப்போனார்கள். அப்போது நான் எனக்குவந்த அபகீர்த்தியை நினைத்து மனந்தளர்ந்தவனாய் இனிகாட்டில் சென்று காலங்கழிப்பதே நலமென்று புறப்பட்டு தவசிகள் வாசஞ்செய்யும் இடங்களெல்லாம் சுற்றிப்பார்த்துக்கொண்டு கந்தமூலங்களருந்தி காலங்கழித்துவரும்நாளில், ஒரு நாள் அத்தனைப்பணியுமருந் தவமுனிவராகிய கமலநாதனைக்கண்டுவணங்கி எந்தையே! என் மனக்கவலையைமாற்றி யருள்செய்ய வேண்டுமென்று என்வரலாறு முழுதுந் தெரிவித்து, அவரிடமிருந்து ஏவல் புரிந்துவரும் நாளில், முனிவர் என்பேரில் கருணை கூர்ந்து ஒருநாள் குளிகைக் கல்லொன்றை யெடுத்து என்னிடங்கொடுத்து அப்பா! இதன்மகத்துவமென்னவெனில், இக்கல்லை கண்களிலொத்தினால் பூமியிலுள்ள பொருள்கள் உன்திருஷ்டிக்குத்தெரியும் இதனால் பகைவனைவெல்லும் சித்தியுமுண்டாகுமாதலால், நீ இதையெடுத்து ஒரு பட்டணஞ்சேர்ந்து வாசஞ்செய்திருந்தால் உன்னரசனைக்காணுவாயென்று ஆசீர்வதித்தார்.

பின்பு நானுமதைப் பெற்றுக்கொண்டு முனிவரைப்பணிந்து விடைபெற்று அவ்விடமிருக்கும் மலைகள் குகைகள் முதலிய பற்பலவிடங்களைச் சுற்றி வரும்வழியில், ஒரு யவ்வனபுருஷன் பர்வதத்தின்மேலிருந்து உருண்டுக்கொண்டேவந்து பூமியில் விழுந்தான். அதைக்கண்டு நானவனருகிற்சென்று பார்க்கையில், தேவானுகூலத்தால் உயிரோடிருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்று அவனுக்குவேண்டிய உபசாரம்செய்து தேகத்திலுள்ள காயங்களை சுத்தப்படுத்தி நிதானிக்கச்செய்து அவனைப்பார்த்து ஐயா! நீர்யார்? எவ்விடமிருப்பவர் இம்மலைமீதிலேன்வந்தாய் எப்

படி தவறிவிழுந்துவிட்டாயென்றுகேட்டேன். அதற்கவன் தாழ்ந்த தொனியுடன் இருகண்களிலும் ஜலம்பெருக சொன்னதாவது ஐயா! புஷ்பபுரியைப்பரிபாலித்துவந்த அம்ஸராஜன் மந்திரியாகிய பத்மோபவன் குமாரன் என்பெயர் இரத்தினேபவன், நான் வியாபாரியாய்திரிந்து சிலநாளைக்கு முன்னே காளையவனமென்னும் தீவைச்சேர்ந்து, அவ்விடமிருக்கும் நாளையில் காலகுப்தன் என்னும் தனவந்தன்மகளாகிய சௌரியவதி யென்பவளை மணம்புரிந்துசிலநாளில் அவள்கெர்ப்பமடையவும்,நான்மெத்தமகிழ்ந்து எனதுஜனனபூமியாகிய புஷ்பபுரிக்குப்போக யோசித்துமனேவியோடுகப்பலேறி வருகையில், பெருங்காற்றடித்து திசைதெரியாமலோடி எங்கள்கப்பல் ஒருமலையிற்பட்டு உடைந்து போய்விட்டது. அதிலுள்ள ஜனங்கள் பெருங்கூச்சலிட்டிறந்தார்கள் நானொருவன் மாத்திரம் மரத்துண்டுகளில் ஒன்றைப்பிடித்து நீந்திகாட்டின் கறைசேர்ந்து, பித்தனைப்போல் எனக்குநேரிட்ட அபாயத்தை நினைத்து மனேவியைப் போக்கடித்த துயரம் சகியாதவனாய் பிராணத்தியாகஞ் செய்துக்கொள்ளுவோமென்றுயோசித்து ஒருமலைமீதேறிப்போகையில் அவ்விடத்திலிருக்கும் ஒரு சித்துபுருஷன் யென்னைக் கண்டு நீயார்? இங்கு ஏன் வந்தாயென்று கேட்டார். அப்போதுநான் என்வரலாறு முழுதும் அவருடன் தெரிவித்து பிராணனைபோக்கடிக்க வந்தேனென்றுசொல்லவும் அவரென்மீது கருணைகூர்ந்து அப்பா! நீயேன் வீணாய் பிராணனைவிடுகிறாய் வேண்டாம், இன்னம் பத்தொன்பதாண்டுசென்றால் முன்போல் உன் பத்தினியோடுசேர்ந்து சுகித்திருப்பாய் அவளுயிரோடுதானிருக்கின்றாள் என் வார்த்தையை உண்மையாக நம்பியிருப்பாயென்று மனத்திருப்தி செய்து போய் விட்டார்.

அப்பால் நானும் அவர் திருவாக்கை நம்பி இதுகாலபரியந்தம் பற்பலயிடங்களைச்சுற்றி காலங்கழித்தேன், ஆனால் அவர் சொன்னதவணைப்படி பத்தொன்பதாண்டு சென்றும் என்மனக்கவலை தீரவில்லையே இனி இப்பிராணனைவைத்திருக்கலாகாதென்று இம்மலைமீதேறி உச்சியிலிருந்துவிழுந்தும் யென்பிராணன் நீங்காமலிருக்கின்றதல்லவாவென்றுதுக்கித்தார். என்னரசனே! இவ்வாறு சொன்னவுடன் என்தந்தையென்றறிந்தும் கிஞ்சிற்று

சந்தேக முடையவனாய் அவனைப்பார்த்து ஐயா! நான் தங்களுக்கிருக்கும் மனவருத்தங்களைத் தீர்த்து விடுகிறேனென்று அவருக்கு சமாதானஞ்சொல்லி கைலாகுகொடுத் தழைத்து வந்து ஓரிடத்திலுட்காரவைத்து, நான்வருகிறபரியந்தம் நீரிவ்விடத்திலிருமென்றுசொல்லி அவருக்குவேண்டிய ஆகாரவஸ்துக்களை சேகரித்துவரும்படி அருகிலிருக்கும் காட்டிற்சென்று பழவர்க்கங்களைப் பறித்துக்கொண்டுவருகையில், அவ்விடத்தில் யாரோ ஒரு ஸ்திரீயானவள் தடாகத்தில் விழப்போவதையும் ஒருகிழவி அவளைத்தடுத்து வஸ்திரத்தை பிடித்திழுப்பதையும் பார்த்து சீக்கிரமோடி அவர்களருகிற் சென்று அக்கிழவிக்கு சகாயமாய் அந்த்ஸ்திரீயைப்பிடித்து விழவொட்டாமல் தடுத்து சமாதானஞ்செய்துமுதியவளைநோக்கி அம்மா! நீயார்? இப்பெண் யார்? ஜலத்தில் விழவேண்டிய காரணமென்ன? இதன் முகாந்தரங்களை உண்மையாய் யெனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டேன் அதற்கம்முதியவள் சொல்லத்தொடங்கினாள்.

அப்பா குழந்தாய் நாங்களிருப்பது காளையவனம் இந்தம்மாள் காலகுப்தனென்னும் வியாபாரியின் புத்திரி இவள்பெயர் சௌரியவதி, சிலகாலங்களுக்கு முன் புஷ்பபுரியரசன் மந்திரியின் குமாரனாகிய இரத்திநோபவ னென்பவர் எங்கள் தேசத்திற்குவந்து இப்புண்ணியவதியை மணம் புரிந்து வாழ்ந்திருக்கும் நாளையில், இப்பெண்கெர்ப்பவதியானாள் இதைக்கண்ட மந்திரிகுமாரன் மெத்தமகிழ்ந்து இப்பெண்ணையும் என்னையும் அழைத்துக்கொண்டு தங்கள் தேசம்போகப் பிரயாணப்பட்டு கப்பலேறி வருகையில், பெரும்புயலடித்து எங்கள் கப்பலை வெகுதூரத்திற் கொண்டுபோய் பாறையில் தாக்கி கப்பலுடைந்தது அப்போது எங்களுக்குநேரிட்ட ஆபத்தால் நான் இப்பெண்ணின் கைப்பற்றி நாங்களிருந்தகப்பலின்பலகைத்துண்டோடுதேவானுகூலத்தால் கரைசேர்ந்து மந்திரிகுமாரனைக்காணாமல் விசனமுற்றிருக்கையில், இப்பெண்பிரசவவேதனைப்பட இவளையழைத்துக்கொண்டுபோய் ஒரு மரத்தடியில் தங்கி சற்றுநேரஞ் சென்று ஒரு ஆண்குழந்தையைப் பெற்றனள். நானிப்பெண்ணுக்கு வேண்டிய உபசரணைசெய்து விட்டு குழந்தையை யெடுத்துக்கொண்டு ஆகாரவஸ்துக்களைதாகிலும் தேடலாமென்று வருகை

யில், ஒருதபசியைக்கண்டு அவரோடு எங்கள்வரலாறு தெரிவித்தேன். அச்சமயத்தில் எங்களெதிர் ஓர் காட்டானைவரவும் நான் பயந்து அக்குழந்தையைப் போட்டுவிட்டோடி பின்பு வந்துபார்த்து தபசியையும் குழந்தையையுங்காணுமல் அவ்வனமெல்லாந்தேடி, இப்பெண்ணிடம்வந்து தெரிவித்து இவளை யழைத்துக்கொண்டு நாட்டைச்சேர்ந்து வாழலாமென்று வருகையில், ஓர் முனிவர் ஆசிரமத்தைக்கண்டு அவ்விடம் தங்கினேம் அவர்யெங்கள் வரலாறு முழுதும்கேட்டு இப்பெண்ணை நோக்கி அம்மா! நீ சஞ்சலப்படாதே, இன்னம்பத்தொன்பதாண்டு சென்றபின்பு உன்குமாரனையும் கணவனையும்கண்டு சுகமாய் வாழ்ந்திருப்பாய் என்றுசொன்னர். நாங்கள் மனக்களிப்புடன் அது முதலிதுவரையில் அங்கு வாசஞ்செய்திருந்தோம் முனிவர்சொல்லிய தவணைநாள்சென்றும் அபலமாய்விட்டதால் இப்பெண்ணினி உயிரை விடலாமென்று தடாகத்தில் விழப்போனுள், நான் தடுத்திழுக்கையில் நீர் நல்லசமயத்தில் தெய்வம்போல் வந்து எனக்குதவிசெய்து இப்பெண்ணை காப்பாற்றினீரென்று சொன்னுள்.

என்னரசனே! நானிதுகளையெல்லாங் கேட்டு என்தந்தை சொன்ன விருத்தாந்தங்களுக்குச்சரியாகவிருந்தமையால் என்தாயாகிய சௌரியவதியின் பாதம்பணிந்து அம்மணி! நான் தான் உன்குமாரன், யென்னைத்தான் இம்முதியவள் காட்டிலெறிந்து வந்தது, உன்புண்ணியவசத்தினல் நானிதுவரையில் உயிரோடிருந்து என் தந்தையைக் கண்டு பிடித்தேனென்று மனத்தேறுதல் செய்து, அவர்களை யழைத்துக்கொண்டு யென் தந்தையிருக்குமிடம்வந்து நான் கொண்டுவந்தகனிகளை அவருக்குக் கொடுத்து சாப்பிடச்செய்து என்தாயைப்பார்த்து அம்மணி! இதோ யென்தந்தையென்று சொல்லவும் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கட்டித்தழுவி நெடுநாளாய்ப் பிரிந்திருந்த விசனத்தை மாற்றினர்கள். பின்பு நானும் யென்வரலாறுமுழுதும் யென் தந்தைக்குத் தெரிவித்தேன். அவர் மனக்களிப்போடு யென்னைத் தழுவி முத்தமிட்டு ஆசீர்வதித்தார். அப்போது நானவரைநோக்கி ஐயா! நாமினி இங்கிருப்பதில் பயனில்லை, வாருமென்றுசொல்லி மூவரையுமழைத்துக்கொண்டு உச்சினிபட்டணஞ்சேர்ந்து ஓரிடத்திலிருக்கச்செய்து முனிவரளித்த குளிகைக்கல்லால் வே

ண்டிய திரவியங்களை சேகரித்து அவர்களுக்குக் கொடுத்து ஜீவிக்கச்செய்து, அவர்கள் விடைபெற்று உன்னைக்காணயோசித்து பற்பலயிடங்களைச்சுற்றி முடிவில் மராடதேசத்தைச் சேர்ந்து அங்கு வாசஞ்செய்து வரும்நாளையில், அவ்வரசன் புத்திரியான வனமாலினி யென்பவளின் பேரழகைச்சொல்லக் கேள்விப்பட்டு அவளைக்காணயோசித்து, அந்நகரத்தில் இரத்தினவியாபாரத்தில் சிறந்தவனென்று யாவரும் மதிக்கத்தக்க ஒன்பதுவகை இரத்தினங்களையும் அநேகமான ஆபரணங்களையும் குளிகையின் மகத்துவத்தால் சேகரித்துக்கொண்டு அரசனந்தப்புறஞ்சென்று வியாபாரம்செய்து வருகையில், ஒருநாள் வனமாலினியின் பாங்கியாகிய வசந்தவதியைக்கண்டு சிநேகித்து அவளனுமதியின்பேரில் இராஜபுத்திரியாகிய வனமாலினி இருக்குமிடத்திற்குச் சென்று, அருந்ததிபோலிருக்கு மவளழகைக்கண்டு மோகமீறி அவளுக்குவேண்டிய இரத்தினு பரணங்களை விற்பனைசெய்து என்னிருப்பிடம் வந்து அனங்கன் வேதனை சகியாமல் அடிக்கடி யவளிடம் சென்று முகதரிசனம்செய்து நேசித்து வருகையில், இராஜபுத்திரியும் என்மீது விரகமுற்றுவெளிக்குக் காட்டாமல் பாங்கியாகிய வசந்தவதியை யனுப்பி யென்னையடிக்கடி தன்னிடம் வரும்படிசொல்ல நானுமவ்விடஞ்சென்று என் கருத்தை ஒருவாறுதெரிவிக்க அவளுமதற்குச் சம்மதித்தாள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் நாங்களிருவரும் கொண்டவிரகம் பொருக்காமல் ஒருவரையொருவர் ஆலிங்கனம்செய்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் என்வரலாறு முழுதுந் தெரிவித்தேன். அப்போதவளு மதிக சந்தோஷ முற்றவளாய் என்னைப்பார்த்துச் சொல்லிய தென்னவெனில், என்மனோகரா! நாமிருவரும் கொண்டமோகத்திற்கு ஒருவாறுபின்னமுண்டாகுமென்று நினைக்கிறேன் அதெப்படியென்றால், நேபாளத்தரசனான தாருவர்மனென்பவன் என்தந்தையாகிய மஞ்சுரனிடம் வந்து என்னை மணஞ்செய்துக்கொள்வதாய் நிச்சயித்துப்போனான். அவனென்னிச்சைக்குரியவனல்ல, அவனோ மகாபாவிதுஷ்டன் அவன்பேரில் எனக்குக் கிஞ்சிற்றேனும்மனமில்லை அப்பாவியை மணம் செய்வதைப் பார்க்கிலும் என்னுயிரை போக்கடிப்பதே நலமாகும் அப்படி யல்லவென்று நாமிருவரும்கொண்ட வெண்

ணம் நிறைவேற வேறுநகரஞ்சென்று வாசஞ்செய்தாலும் அம்மூர்க்கன் நம்மைப்பிடித்துவந்து தெண்டிப்பானுகையால், முன்னம் அப்பாவியின் ஆவியைப் போக்கும்படியாகிய முயர்ச்சியைத்தேடுவீராகில் நாம் நாடியபடியே கூடிவாழலாமென்றுசொன்னுள். அதைக்கேட்டுநானவளைநோக்கி ஓ-என்னிருதயமணியே! உன்கோறிக்கை நிறைவேறும்படியாக நாஞெருதந்திரம் சொல்லுகிறேன் அதென்னவெனில், நீ இன்று முதற்கொண்டு பைசாசம் பிடித்தவள்போல் பாவனைகாட்டி நாளுக்குநாள் விகாரமானசெய்கைகளைச்செய்து பயங்கர முண்டாக்கினுல், இவ்விந்தைகளை உன்தந்தையாகிய மஞசுரன் கேள்விப்பட்டு பயமடைந்து உன்னை வதுவைசெய்துகொடுக்க நியமித்திருக்கும் நேபாளத்தரசனுகிய தாருவர்மனுக்குத்தெரிவிப்பான். அவனே அதர்வணவேதம் படித்தவன் உன்மேற்கொண்டகாதலால் இவ்விடம்வந்து உனக்கு வேண்டிய சிகிச்சைசெய்வான். அப்போது நீ பாங்கியாகிய வசந்தவதியை என்னிடமனுப்பினுல் அதற்கு வேண்டிய முயற்சியைத் தேடுகிறேனென்றுசொல்ல அதற்கவளும் சம்மதித்தாள். பின்பு நாங்களிருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிய மனமில்லாமல் அவளிடம் விடைபெற்று என்னிருப்பிடம் வந்துசேர்ந்தேன்.

இப்பால் நான்வந்தது முதல் வனமாலினி பலபலவிதமாய் விகாரமான பேயாட்டமாடி பாங்கிகளைத் துன்பப்படுத்தி விரட்டி தோந்திரவுசெய்யவும், பாங்கியாகிய வசந்தவதி அரசனுகிய மாஞசுரனிடம்போய் மகாராஜா! தங்கள் குமாரத்தியான வனமாலினியைப் பிரம்மராட்சதன்பிடித்து எங்களைதொந்திரவுசெய்கிறுள் தாங்கள்வந்துபார்த்து அதற்குவேண்டிய சிகிச்சையைத்தேடவேண்டுமென்றுள், அதைக்கேட்டரசன் மனம்நொந்து மகளிடம் வந்து அவளிருக்கும் கோலத்தைக்கண்டு பயந்துதன்னகரத்திலுள்ள மந்திரவாதிகளை யழைத்து சொஸ்தப்படுத்த உத்திரவளித்தான். அவர்களும் தங்களால் கூடியவரையிலும் பார்த்து பயனில்லாமற் போய்விடவும், மஞசுரன் மனக்கவலையடைந்தவனுய் யோசித்து தன்மகளைக்கொடுக்க நியமித்திருந்த நேபாளத்தரசனுகிய தாருவர்மனுக்கு இங்கு நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவிக்கவும், இதுகளைக்கேட்ட தாருவர்மன் முன்

னமே வனமாலியின்மீது மோகமுற்றிருப்பதால், தான் கற்றிருக்கும் அதர்வணமந்திரத்தால் சொஸ்தப்படுத்தி மணம் புரியலாமென்று ஆவலோடு காவலாளிகளுடன் புறப்பட்டு மராடதேசத்தைச்சேர்ந்து மனுசுரனைக்கண்டு அவனால் வனமாலினி யிருக்கும் ஸ்திதியைத்தெரிந்து வெகுசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தி விடுவதாய் அரசனுக்குத் தெரிவித்தான்.

இவ்வாறிருக்கையில் வனமாலினி பாங்கியாகிய வசந்தவதியால் தாருவர்மன் வரவையெனக்குத் தெரிவிக்கவும், நானும்பாங்கிவேடந்தரித்து வசந்தவதியோடுசென்று அந்தப்புரம் சேர்ந்து வனமாலினியைக்கண்டு அவளுக்குச் சொல்லியதென்ன வெனில், என்காதலியே! தாருவர்மன் இவ்விடம்வந்துனக்குவேண்டிய சிகிச்சைசெய்வான். அச்சமயத்தில் நான் உன்னுடனிருந்து எப்படியாவது அவனை முடித்துவிடுகிறேன், ஆனால்நீ மாத்திரம் மௌனமாகயிருந்துவிடு நாங்களெல்லாரும் இராஜபுத்திரியின் பேரில் இருக்கும் பூதம் மந்திரவாதியாகிய அரசனைக்கொன்று போட்டதென்று கூக்குரலிட்டு உன்தந்தையிடம் தெரிவித்து நான் முந்தியிருந்த விடத்திறகுப்போகிறேன். அதன்பின் நடக்கவேண்டியதைத் தெரிவிக்கிறேனென்று சொல்லவும் அவளும் சந்தோஷத்துடனிருந்தாள். இப்படி யிருக்கையில், நானுமவ்விடத்திலிருந்தேன் மறுநாளிரவில் தாருவர்மன் வனமாலினியிருக்கும் அந்தப்புரம்வந்து அவளைக்கண்டுசந்தேகமுற்றவனாய் எங்களையழைத்து இப்பெண்ணை ஓரறையிலழைத்து வாருங்களென்றுசொல்ல நாங்களுமப்படியே வனமாலினியை யழைத்துவர தாருவர்மன் அவளை உட்காரவைத்து ஓமத்தீவளர்த்தி மந்திர ஜெபம்செய்யவாரம்பித்தான். அப்போது ஓமப்புகையால் ஒருவரையொருவர் தெரியாமலிருக்கையில், என்னரசனே! இதற்கு முன்னமே நான் சித்தஞ்செய்திருந்தபடியே தாருவர்மனுக்குப் பின்புறஞ்சென்று என்கையிலிருந்த கத்தியினால் அவன்தலையைத்துண்டித்து அருகிலிருப்பவர்களுக்குந் தெரியாமலோடி மனுசுரனிடஞ்சென்று மகாராஜா! தங்கள் குமாரத்தியின் பேரிலிருந்த பூதம் மந்திரவாதியாகிய தாருவர்மனை வாயில் போட்டுக்கொண்டதென்று சொல்லவே அரசன்பயந்து மகளிடஞ்சென்றான். அப்போது நான் இனியிவ்விடத்தில் நடக்கும் சங்கதிகள் பாங்

கியால் தெரிந்துக்கொள்ளலாமென்று என்னிருப்பிடஞ்சேர்ந்து இனிநடக்கவேண்டியதை யோசித்திருந்தேன். மறுநாள் பாங்கியாகிய வசந்தவதி என்னிடம் வந்து அங்கு நடந்தவரலாறு தெரிவித்தாள் அதைக்கேட்டு நானவளைநோக்கிச் சொல்லியதென்னவெனில், அம்மா வசந்தவதி! இராஜபுத்திரியாகியவனமாலினியை முன்னிருந்ததைவிட அதிக விகாரமானசெய்கைகளைச் செய்துவரும்படி சொல்லுவையாகில் அதை மஞ்சுரன் கேட்டு மனம் வருந்துவான், அப்போதுநான் அரசனிடம்வந்து உன்குமாரத்தியின் பேரிலிருக்கும் பிரம்மராட்சதனை துலைத்து விடுகிறேனென்று அரசனை பேதிக்கச்செய்து மணம்புரிந்துக்கொள்ளுகிறேன் அதுவரையில் மனம்பொருத்திருக்கச்சொல்லென்று அவளுக்குச்சொல்லியனுப்பிவிட்டு அங்குவாசஞ்செய்துவருகையில், அந்நகரமெங்கும் அரசனாகியதாருவர்மனை வனமாலினியின்பேரிலிருந்த பூதம் கொன்றுவிட்டதென்னும் வதந்தியுண்டாய் மந்திரவாதிகள் முதலிய யாவரும் அவளைக்காண அச்சமுற்றிருந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் மஞ்சுரன் மனந்தளர்ந்து மந்திரிகளுக்குத்தெரிவித்து இதற்கென்ன யோசனையென்றுகேட்க, அவர்கள் அரசனைவணங்கி மகாராஜா! தங்கள் குமாரத்தியின் பேரிலிருக்கும் பூதத்தை எவன்வந்து துலைத்து விடுகிறானோ அவனுக்கே அப்பெண்ணை மணம்புரிவிக்கிறேனென்று பறைசாற்றினால் இந்நகரத்திலும் மற்றென்னகரத்திலுள்ளவர்களானாலும் வந்து பெண்ணாசையால் தீர்த்துவிடுவார்கள். இதைவிட வேறுயோசனைகிடையாதென்றுசொல்ல அரசன் சம்மதித்து பறைசாற்றும்படி உத்திரவளித்தான். இச்சங்கதி நகரமெங்கும் பிரசித்தமாகவிருந்தது அச்சமயத்தில் நான் மஞ்சுரனிடஞ் சென்று மகாராஜா தங்கள் குமாரத்தியைபிடித்திருக்கும் பேயைத்துலைத்துவிடவந்தேன் நான் பற்பலதேசங்கள் தோறும்சென்று பரிசுபெற்றவன் தாங்கள் பறைசாற்றிய வண்ணம் முடிப்பது நிச்சயமென்று சொல்லுவீராகில் இக்ஷணம் தீர்த்துவிடுவேனென்றுசொல்ல, வேந்தன்மகிழ்ந்து அப்படியே செய்கிறேனென்று பாங்கிகளைநோக்கி என்னைவனமாலினியிருக்கும் அந்தப்புரமழைத்துப் போகும்படிசொல்ல அவர்களும் என்னையழைத்துப்போய் ராஜ

புத்திரியிடம் விட்டார்கள். அப்போது நான் வனமாலினியைப் பார்த்து என் காதலியே! உன்கருத்தின்படியே முடித்து விட்டேன் இனி நாம்கொண்டவெண்ணம் முடிவுபெறும், ஆனல் நீ இன்று முதல்விகாரச்செய்கை மாறினவளாய் நாளுக்குநாள் நலி நீங்கினதுபோல ஆடையாபரணந்தரித்து மனக்களிப்போ டிருந் தால் உன்தந்தைதிருப்தியடைந்து எனக்குமணம்புரிவிப்பானெ ன்றுசொல்ல அவளும் களிப்படைந்தாள். மறுநாள் நான்மஞ்சுரனிடஞ்சென்று மகாராஜா! தங்கள் குமாரத்தியின்பேரிலிருந்த ராட்சதனை வெகுபிரயாசைப்பட்டு துரத்திசொஸ்தப்படுத்தி விட்டேன், தாங்கள்போய்பார்க்கலாமென்றுசொன்னேன் மஞ்சுரன்கேட்டு மகளிடஞ்சென்று விசாரித்து பாங்கிகளைகேட்க வசந்தவதியானவள் என்னைப் புகழ்ந்துபேசி மகாசாமர்த்திய னென்று அரசனுக்குத் தெரிவித்தாள். வேந்தன் கேட்டு சந்தோஷமடைந்து இராஜசபைக்குவந்து மந்திரிகளைநோக்கி நடந்தவரலாறுசொல்லி தன்குமாரத்தியை மணம்புரிய நிச்சயித்து நகரையலங்காரஞ்செய்து வேதவிதிப்படி நல்லசுபமுகூர்த்தத்தில் வனமாலினியை எனக்குமணஞ்செய்வித்தான்.

பின்பு நாங்களிருவரும்மனமகிழ்ந்து வாழ்ந்திருக்கையில் மஞ்சுரன் பார்த்து தனக்குப்பின் னரசுக்குப் புத்திரனில்லாமையால் அப்பட்டத்தையெனக்களித்து அரசாளச்செய்தான். என்னன்பனே! நானிவ்வகைப் பெருமையடைந்தும் நீ எங்களைவிட்டுப்பிரிந்துபோன துயரம் நீங்காமலிருக்கபட்டாபிஷேக நிரூபத்தைக்கண்ணுற்று இவ்விடம் வந்து தங்களைக் கண்டேனென்று இரத்தினவதனன் தன்வரலாறுதெரிவித்தான். அதைக்கேட்டு அமிர்தவசனன் ஆ-என்சகோதரா! நீ பஞ்சதந்திரமாகவே பட்டங்கட்டிக் கொண்டாயென்று சந்தோஷமடைந்தான்.

மித்திரசேகரன்.

தன்வரலாறுகூறுதல்.

ஆ-என்னன்பனே! நீர் எங்களைவிட்டுப் பிரிந்தபின் நானும் மற்ற சகோதரர்களைப்போலவே உன்னைத்தேடும்படி புறப்பட்டு பற்பலதேசங்களைச்சுற்றிமுடிவில், காஸ்மீரநகரத்தருகிலிருக்கும் வனாந்தரத்திற் பிரவேசித்து வழிதெரியாமலலைந்து சுற்றிக்கொண்டு ஒரு மைதானவெளியில் வரும்போது பசிதாகமேலிட்டு வருந்திநின்றேன். அச்சமயத்தில் எனக்கருகாமையில் பூமியிலிருந்து ஒருவாலிபன் கதவைத்திறந்துக்கொண்டு வெளியேவந்து நான்குபக்கங்களிலும் சுற்றிப்பார்த்துக்கொண்டிருந்தான். நானவனைக்கண்டு ஆச்சரியமுற்று அவனருகிற்சென்றேன், அப்போதவனென்னைப்பார்த்து நீயார்! எங்கிருந்து வந்தாயென்று கேட்டான். அதற்கு நானவனைநோக்கிச் சொல்லியதென்னவெனில், மித்திரா! என்சகோதரனைத் தேடிக்காணாமல்வருந்தி வழிதெரியாமலலைந்து திரிகிறேனென்றுசொல்லவே அதைக்கேட்டவன் ஐயா! நான் ஒருவனாய் தனித்திருக்கின்றேன் என்னுடன் துணையாயிருந்தால் நான்போகும்போது உன்னையும் எங்கள் தேசத்திற் கழைத்துக்கொண்டுபோகிறேன், இப்போர்க்கொற்ற மனிதசஞ்சாரமில்லாதிருக்கும் இடத்தில் நீ அவனை எங்குதேடப்போகிறாய் உன் கருத்தென்னசொல்லென்றுகேட்க, அப்போது நானும் அவன் விருத்தாந்தங்களைத் தெரிந்துக்கொள்ளச் சம்மதித்து அவனோடுசெல்ல அவன் என்னையழைத்துக்கொண்டு சுரங்கத்துட்

சென்றுஎனக்குவேண்டிய ஆகாரவஸ்துக்களைக்கொடுத்து சாப்பிடச்செய்தான். நானும்பசியாறி ஆயாசந்தீர்ந்து அங்கிருக்கும்வஸ்துக்களைப்பார்த்து அவனைநோக்கிமித்திரா! நீ ஒண்டியாய் இவ்வளவு ஆகாரவஸ்துக்களைசேகரித்துக்கொண்டு இங்கிருக்கவேண்டியகாரணமென்ன தெரிவியுமென்றுகேட்டேன் அதற்கவன் தன்வரலாறு சொல்லத்தொடங்கினன். ஐயா மித்திரா! நானிருப்பது காஸ்மீரதேசம் என்தந்தைபேர் மானபரன் பிரபலதனவந்தர் அவருக்கு சந்தானமில்லாமல் விரதமனுஷ்டித்து தேவானுகூலத்தால் யென்னைப்பெற்று மனக்களிப்புற்று ஜனனஜாதகமுதலியதை தெரிந்துக்கொள்ளும்படி எங்களுக்கு குருபீடமாயிருக்கும் வானசாஸ்திரி யொருவனை யழைத்துத்தெரிவித்தார், அவரும் ஜனனநட்சத்திரமுதலியதை ஆராய்ந்துபார்த்து எனக்கு உத்தமசீலனென்று நாமகரணமளித்து என்தந்தையைநோக்கி இப்பிள்ளைக்கு இருபத்தோராமாண்டில் இன்னதினத்தில் விபத்துநேரிடுமென்றுசொல்லவே, அவர்மனம்தளர்ந்து நான் ஏகபுத்திரனுதலால் வானசாஸ்திரியைவணங்கி சுவாமி! அந்தவிபத்துயாரால் நேரிடும் எப்படி நீங்குமென்றுகேட்க, அவர் சொன்னதாவது புஷ்பபுரியரசன் இரண்டாவது மந்திரியாகிய சுமத்திரனுக்கு மித்திரசேகரன்பிறப்பான் அவன் கையால் இவனுக்கு மரணம்நேரிடும் ஆனதால் இவனை அந்நாளில் பத்திரமாகப்பார்த்தால் பின்பு நூறுண்டுவரையில் ஜீவித்திருப்பானென்றுசொல்லிப்போனர்.

அப்பால் என்தந்தைமனக்கவலைதீர்ந்து என்னைப்போஷித்துவித்தியாப்பியாசஞ்செய்து பருவகாலமடைந்ததும் வானசாஸ்திரிகுறித்த நாள்களுக்குமுந்தியே இக்காட்டில் சுரங்கஞ்செய்து ஒருமாதத்திற்குவேண்டிய ஆகாரவஸ்துக்களோடு என்னையழைத்து வந்து இதிலிருக்கச்செய்து தவணைநாள் சென்றபின்பு வந்தழைத்துப் போகிறேனென்று சொல்லிப்போயிருக்கிறார், அவர் இன்னம் பத்துநாள் சென்று நமதுவேலைக்காரர்களோடு இவ்விடம் வருவார், இதுதானென் வரலாறென்றுசொன்னன். ஓ-என்னரசனே! நான் இவ்விந்தையைக்கேட்டவுடன் சிந்தைநொந்து எனக்குள் நினைத்ததென்னவெனில், இப்புண்ணியன் நமக்காபத்து வேளையில்போசனமளித்துக்காப்பாற்றினனே இவனைஏன்

நாம் கொலைசெய்யப்போகிறோம் இவனால் நமக்கென்ன தீங்கு நேரிட்டது, வானசாஸ்திரி இவனை விருதாவாய் பயமுறுத்தி விட்டான் ஆனதால் இவனுக்கு நாம் இன்னுமென்றுதெரிவித்தால் பிராணனைவிடுவானென்று நினைத்து என்வரலாறு அவனுக்குத்தெரிவிக்காமலிருந்து இவனோடு காஸ்மீரதேசம் போவதே நலமென்றுகருதி அவனோடு வாசஞ்செய்தேன்.

இவ்வாறிருக்கையில் பிரதிதினமும் காலையிலெழுந்து அவ்வாலிபனுக்குவேண்டிய தின்பண்டங்களைக் கொடுத்து நானும் புசித்து மஞ்சத்திலுட்கார்ந்து தேசவளப்பங்களைப் பேசிக்கொண்டிருக்கையில், அவனென்னைநோக்கி மித்திரா! நாம் நாளை ஒருநாள் இவ்விடங்கழித்து மறுநாள் நமதுதேசம்போக எனது தந்தை இங்குவருவாராகையால் நம்மிடம் மிச்சமாகயிருக்கும் பழவர்க்கங்களைக் கொண்டுவா நாமிச்சைதீர சாப்பிடலாமென்று சொல்ல நானுமெழுந்து புட்டிகைகளிலிருக்கும் பழங்களைக்கொண்டுவர அவன் சயனித்தபடியே என்னைப்பார்த்து மித்திரா! அதன்மேலிருக்கும் தோலைப்போக்கித் துண்டம்செய்து சீனிக் கலந்துகொண்டுவந்து கொடுமென்று சொன்னான். அப்போது நான் சூரி கைக்கொண்டு அவனருகிலுட்கார்ந்து அன்னாசிமுதலிய பழவர்க்கங்களையெல்லாம் தோலைக்கழித்துகொண்டே அவனோடு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கையில், என்னரசனே! நானென்னவென்று சொல்லுவேன் எனக்கொருவிதமயக்கமுண்டாய் கையிலிருந்த கத்தியுடன் என்னைமறந்து விழுந்து மூர்ச்சையடைந்தேன் பின்பு சற்றுநேரஞ்சென்று தெளிந்துபார்க்கையில் என்கையிலிருந்தகத்தி அவ்வாலிபன்மார்பில் நாட்டினபடியாகவே விழுந்திருக்கக்கண்டு எழுந்து ஆச்சரியமுற்று நாமிவ்விதமாக விழுந்தோமென்று தெரியாமல் பிர்மித்தவனாய் அவன்மார்பில் பட்டகத்தியால் பிராணன் நீங்கினதைக்கண்டு பயந்து ஒன்றுந்தோன்றாமல் எனது நிற்பாக்கியத்தை நினைத்து விசனமடைந்து அங்கிருக்கமனமில்லாமல் வெளியேவந்து யோசித்ததென்னவெனில், இவ்விடமிருந்தால் நாளையத்தினம் அந்த வாலிபன் தந்தைவருவான் நம்மைக் கண்டுவிட்டால் தன்குமாரனைக் கொலைசெய்தவனென்று புத்திரசோபத்தால் வருந்தி நம்மைக் கொன்றுவிடுவானென்று நினைத்து அவ்விடமிருந்துபுறப்

பட்டு அக்காட்டின் வழியாகவே மூன்றுநாள் நடந்து நாலாநாள் காளிங்காவென்னும் தேசத்தினருகிலிருக்கும் வனாந்திரத்திற்கு வந்து அன்றிரவு ஒரு விருட்சத்தினடியில்படுத்து நித்திரைபோகையில், அவ்விடமிருக்கும் மிருகங்களின் கூச்சலினால் விழித்துக்கொண்டு நித்திரைவராமலிருக்கையில் என்தோழனே! நீ விட்டுப்பிரிந்ததுமுதல் நானடைந்த வருத்தங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்குச்சமீபத்தில் யாரோ மனிதர் பேசுவதுபோல் சத்தங்கேட்டது, அதென்னவென்று நிதானித்துக்கேட்டேன் அவர்கள் சொல்லியதென்ன வென்றால், நாம் எத்தனைநாள் இந்தச்சண்டாளனிடத்தகப்பட்டுக் கொண்டு வருத்தமடைவது இவனையெல்லநம்மால் முடியவில்லையே எந்தப்புண்ணியவானாலும் இப்பாவியின் ஆவியைப்போக்கினால் நாம் சுகமாகவாழலாமேயென்னும் சத்தமுண்டாச்சுது, அதைக் கேட்டு நான் ஆச்சரியமுற்று இவ்வனாந்திரமானகாட்டில் எப்படி இத்தொனியுண்டாயிற்று இவ்விடத்தில் மனிதசஞ்சாரங்காணவில்லையே இதைப்போய்ப் பார்க்கலாமென்றெழுந்து சத்தங் கேட்டவழியேசென்று பார்க்கையில், சற்று தூரத்தில் வெளிச்சந்தெரியக்கண்டு அங்கு யாராகிலுமிருக்கலாமென நினைத்து அதனருகிற்போய் பார்த்தேன் அப்போதங்கு மகாபயங்கரமான உருவத்தோடு ஒருரிஷியானவன் தலைமயிர்விரித்து கழுத்தில் எலும்பு மாலையைத்தரித்துக்கொண்டு அக்கினி வளர்த்தி ஜெபத்திலிருந்தான். அவனருகில் ஆணும் பெண்ணுமாக இரண்டு ராட்தர்கள் கைகட்டி நிற்பதைக்கண்டு பயந்து அவர்களுக்குத்தெரியாமல் ரிஷியின்பின்புறமாகப்பதுங்கிப் பார்த்திருந்தேன்.

பின்பு அந்தரிஷியானவன் சற்றுநேரஞ்சென்று கண்விழித்து அவ்விரண்டு ராட்தாளையும் கோபக்குறியோடுநோக்கி நீங்களேன் இவ்வளவு நேரம்பொருத்து வந்தீரென்றதட்டிக் கேட்க, அவர்கள் சுவாமி! மன்னிக்கவேண்டுமென வணங்கினார்கள். அப்போதவன் சொல்லியதென்னவெனில், நீங்கள் காளிங்கா நகரத்திற்குப்போய் அவ்வரசன் குமாரத்தியான கனகலீலாவென்பவளை சீக்கிரமாக இவ்விடம் கொண்டுவாருங்களென்று சொல்லவே அவர்களும் நல்லதெனப்பணிந்து மறைந்து சற்றுநேரத்திற்கெல்லாம் ஓர் பெண்ணை மஞ்சத்துடன் கொண்டுவந்து அவ

னெதிரில்விட்டார்கள். அப்போதவன் ஆவலுடனெழுந்து அவ ளருகில்வந்து அடிபெண்ணே! என்னிருகண்ணே! உன்மேற்கொ ண்ட காதலைத்தீர்த்தாட் கொள்ளுமென்று வேண்டினன். அப் பொற்கொடியானவள் பத்தரைமாற்றுத்தங்கப்பதுமைபோல் த லைகுனிந்து கண்ணீர்விட்டு அவன் கருத்துக்கிணங்காமல் நிற்ப தைக்கண்ட ரிஷியானவன் கோபக்குறியோடு அவளைப்பயமுறு த்தி பலாத்காரஞ்செய்ய எத்தனித்து அவள் தலைமயிரை இட துகையால்பற்றி வலதுகையினல் வாளையெடுத்துவெட்டப்போ கையில் நான் அப்பெண்கொலைபார்க்கச் சகியாமல் பரிதாபப்பட் டு என்பிராணனை துரும்பாகமதித்து திட்டெனவெழுந்து வெ ட்டப்போன ரிஷிகையிலிருந்தவாளை சட்டெனப்பிடிங்கி அத்து ஷ்டனை ஒரேவெட்டாய்வெட்டி அவனெதிரில் எரிந்துக்கொண் டிருக்கு மக்கினியிற் போட்டுவிட்டேன். அப்போது இரண்டு ராட்சதாளும் ஓடிவந்து என்காலில்விழுந்து ஆண்டவனே! நாங் கள் இந்தச் சண்டாளனிடமகப்பட்டு மிகவும்வருந்தினேம் இன் று உம்மால்சுகமடைந்தோம் ஆனதால் எங்களால் தங்களுக்கு ஆகிவேண்டிய வேலைகளைத்தெரிவித்தால் தடையில்லாமல் செ ய்து வருகிறேமென்றார்கள். அதைக்கேட்டு நான் சந்தோஷம டைந்து எனக்காகவேண்டிய காரியங்களை பின்னல் தெரிவிக்கி றேனென்றுசொல்லி வாட்டமுற்றென்னெதிர் நிற்கும் வஞ்சிக் கொடியைநோக்கி ஓ-பெண்ணுயகமே! நீ வசிக்கும் நகரமெது உன்வரலாறென்ன வென்றுகேட்க, அப்பெண்ணனவள் சொல் லத்தொடங்கினள்.

ஐயா! உயிரளித்த உத்தமனே நானிருப்பது காளிங்காநக ரம் என்தந்தைபெயர் இந்திரசேனன் அவருக்கு நெடுநாள் சந் தானமில்லாமல் தேவானுகூலத்தால் யென்னைப்பெற்று கனக லீலாவென்று நாமகணரமிட்டு வேறுசந்ததிகிடையாதால் என் னைமேன்மையாக வளர்த்து பருவகாலமடைந்ததும் கன்னியா மாடத்திலிருக்கச்செய்தார் அதுமுதலிதுவரையில் ஒரு புருஷ ரையும் கண்ணிறைக் கண்டதில்லை என்வினைவசத்தால் இராத் திரிமஞ்சத்தில் படுத்தவள் இங்கு இச்சண்டாளனெதிர் அகப்ப ட்டு பரதவித்திருக்கையில் தெய்வம்போல்வந்து என்னை ரட்சி த்த உத்தமபுருஷன் நீ ராகையால் தங்களையொருமனுவு கேட்

டுக்கொள்ளுகிறேன் அதென்னவெனில், என்னையங்கீகரித்தழை த்துச்சென்று என் தந்தையிடம் விட்டு இங்கு நடந்த விந்தைக ளைத்தெரிவித்து மணஞ்செய்வீராகில் உயிரோடிருப்பேன் இல் லாவிடில் இதோயெரிகிற நெருப்பில் விழுந்து பிராணனை விடு கிறேனென்றாள். என்னன்பனே! இதுகளைக்கேட்ட நான் களிப் படைந்து (தானாய் வரும் சிதேவியைக் காலாலுதைத்துத் தள் ளலாகாதென்று) அவள்கருத்தின்படியே சம்மதித்து எங்களெ திர் நின்றராட்சதாளை நோக்கி நீங்கள் செய்யவேண்டிய உதவி யாதெனில், இப்பெண்ணை எவ்விடமிருந்து கொண்டுவந்தீர்க ளோ அவ்விடம் எங்களிருவரையும் எடுத்துக்கொண்டு போய் விட்டுவிட வேண்டுமென்று சொல்லவே இராட்சதாளும் அப் படியே நல்லதென்று எங்களிருவரையும் காளிங்காநகரத் தரச னாகிய இந்திரசேனன் அரண்மனையிற் கொண்டுபோய் விட்டுப் போனார்கள்.

மறுநாள் கனகலீலா யென்னை யழைத்துக்கொண்டு அவள் தந்தையிடஞ்சென்று நடந்தவர்த்தமானங்களைச்சொல்லி இவரு க்கென்னை மணம்புரிவித்தாலாச்சுது இல்லாவிடில் பிராணனைவி ட்டுவிடுவேனென்றாள். இதற்குமுன்னமே பாங்கிகளால் தன்மக ள் அகஸ்மாத்தாய் காணமற்போனசங்கதி கேட்டு விசனமுற்றி ருந்தவன் மகளைக்கண்டு ஆச்சரியமுற்று என்னைநோக்கி நீயார்? உன்பெயரென்ன? எவ்விடமிருப்பவர் காட்டிற்கு வரவேண்டிய காரணந்தெரிவியுமென்றுகேட்க, நான் விந்தியமலைச்சாரலிலிரு ந்து அரசனரண்மனையில் வந்தவரையில் நடந்தவரலாறெல்லாந் தெரிவித்தேன் அரசன்கேட்டு சந்தோஷப்பட்டு நகரையலங்கரி த்து தன்குமாரத்தியை நல்லசுபமுகூர்த்தத்தில் எனக்குக் கன் னியாதானமாகமணஞ்செய்து தன்னிடம்வைத்துக்கொண்டார். நானிவ்வகைப் பெருமையடைந்தும் என்னரசனே! உன்னைப்பி ரிந்தசோகம் நீங்காமலிருக்கையில் மகுடாபிஷேக நிரூபத்தைக்க ண்டு இவ்விடம்வந்து தங்களைக்கண்டேனென்றுசொல்ல இது களையெல்லாங்கேட்ட அமிர்தவசனன்சந்தோஷமுற்று ஆ-என் சகோதரா! நீ மகாதுன்பமடைந்து அரசைப் பற்றினையென்று மெச்சினன்.

அனந்தவர்மன்.

தன்வரலாறுகூறுதல்.

ஆ! எனதாவியைப்போன்ற அரசனே! நீர் எங்களை விட்டு பிரிந்துபோனபின்பு நாங்கள் ஒன்றுகூடி தங்களைத்தேடி வருந்தியகப்படாமல் தனித்தனியேசென்றோம். அப்போது யானோ பற்பலதேசங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு கடைசியில் மகேந்திரா நகரையடைந்து அதனலங்காரங்களைக் கண்ணுற்று வருகையில், அவ்விடத்தில் வாசஞ்செய்பவர்களால் அங்கோர் அற்புதம் சொல்லக் கேட்டேன். அதென்னவென்றால், அந்நகரத்தை பரிபாலித்துவரும் அர்த்தபதி யென்னும் அரசனுக்கும் அவன்மனைவியாகிய அஞ்சனவதனுவுக்கும் நெடுநாள்புத்திரசந்தானமில்லாமல் மெத்தவருந்தி பத்தினியுந்தானும் புத்திரனைப் பெற்றவர்களுக்கு பாதபூசை முதலிய தட்சணை தாம்பூல வஸ்திரங்களுங் கொடுத்து பூசித்து தேவாலயங்கள் தொழுதுவிசுவாசித்துவரும்காலத்தில், தேவானுகூலத்தால் ஓர் பெண்ணைப்பெற்று அப்பெண்ணுக்குச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் செய்துமுடித்து ஜெயமாலினி யென்று நாமகரணமிட்டு இராஜோபசாரமாக வளர்த்தார்கள். அப்பெண்ணோ வேதம்-சாஸ்திரம்- ஆகமம்-புராணம்-தர்க்கம்- உபநிடதம்- கைவல்யம்- கொக்கோகமுதலிய சமயநூல்களையும் படித்து விடைநாயகியா யிருந்து பருவகாலமடைந்தனள். அப்போது மன்மதன் வந்து கரும்பு வில்லை வளைத்து சுரும்புநாணேற்றி அரும்புகளைத் தொடுக்க

ஆரம்பித்தபோது அந்தப்பெண்ணின் தந்தையாகிய அர்த்தப திராஜன் மகளின் சவுந்தரியத்தைக்கண்டு மனமகிழ்வுகொண்டு பெண்ணைக் கன்னியாமாடத்திலிருத்தி பத்திரமாகப் பாதுகாத் துவந்தனர்.

அவ்வாறிருக்குமநாளையில் பற்பலதேசத்திலிருக்கும்மன்ன வர்களும் அப்பாவையின் அழகைச்சொல்லக்கேட்டு மணஞ்செ ய்ய விருப்பங்கொண்டுவந்தார்கள். அப்பெண்ணனவள் சம்மதி க்காமல் விவாகத்தை வெறுத்து விட்டனளென்று சொல்லக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தவனாய், அந்தப்பொற்கொடியை காணலாமென்றுகருதி யென்னாற் கூடியவரையிலும் பிரயத்தி னஞ்செய்து அகப்படாமல். ஒருநாள் வசந்தகாலத்தில் அப்பெ ண்ணனவள் உப்பரிகைமேலிருந்து உலாவக்கண்டு பிர்மித்தவ னாய் நான் நினைத்துக்கொண்ட தென்னவெனில், இவள் யார்! பூரணவாலையோ! மனோன் மணியோ! பொன்னுலகத் தரசன் புத்திரியோ! இந்தப்பூவுலகத்தில் இவளுக்குச் சமானமாக யா ரைச்சொல்லுவோமென்று காமவிடாயால் கருத்தழிந்து நெறி குலைந்து மெத்தவருந்தி சித்தங்கலங்கி, என்னரசனே! உன்னை மறந்து பித்தம் பிடித்தவனைப்போல் அந்த நகரத்தை விட்டுப் போக மனமில்லாமல் அங்கு சுற்றிக்கொண்டிருக்கும் நாளை யில், ஒருநாள் அத்தனுக் கொப்பாகிய ஓர் சித்தன் என்னெதிர் வர அவனைக்கண்டு நமஸ்கரித்து ஓ-சுவாமி குருநாதா! தாங்க ளெங்கிருந்து வருகின்றீர்? எவ்விடம்செல்வதென்றேன். அதற் கவன் அடாகுழந்தாய்! நானிருப்பதுகன்னியாகுமரி தவசித்திய டைந்து இமயகிரிபர்வதம் செல்லுகின்றேனென்றான். அதைக் கேட்டு நான் இவன்மகாதவசிரேஷ்டனாகயிருப்பதால் நம்முடை ய கருத்தைத் தெரிவிப்போமெனக்கருதி இராஜகுமாரத்தியின் மீதுகொண்டகாதலைத்தெரிவித்து, சுவாமி! என்கருத்தை நிறை வேற்றுவது தங்கள்கடமையென்றுவணங்கினேன். அதைக்கே ட்ட சித்தன் அடாகுழந்தாய்! அப்படியானால் முப்பத்திரெண் டுலட்சணமுள்ள முடித்தலையாவது சடைத்தலையாவது குடிலை யென்னும் பராசத்திக்குபலியிட்டால் நீகொண்ட எண்ணம்முடி வுபெறுமென்றான். அதைக்கேட்ட நான் சுவாமி! முடித்தலை யும் சடைத்தலையும் எனக்கெங்கேகிடைக்கும் தேவரீரதெரிசி

த்தவர்களுடைய மனச்சஞ்லமகலாதிருக்குமா? யெப்படியாவது அப்பெண்ணை மணம்புரிய அருள்செய்ய வேண்டுமென்றேன். அதற்கவன் ஆனல் என்னுடன் சிலநாள் வாசஞ்செய்தால் உன் கருத்துநிறைவேறுமென்றான். அப்போது நானும் சம்மதித்து அப்பெண்மீதுகொண்ட ஆசையால் அவனோடுசென்றேன். அவனென்னை யழைத்துக்கொண்டு நாடு-நகரம்-வனம்-வனந்திரங்களிலெல்லாம் சிலநாள் திரிந்து ஆகாரமுதலியதில்லாமல் வருந்தி கடைசியில் இமயகிரிபர்வதமடைந்து அங்கோர்மலையடிவாரத்தில் குகையொன்றிருக்கக்கண்டு அதனுள் பிரவேசித்தோம். அங்கு பராசத்தி சந்நிதானமும் தடாகமுமிருந்தது என்னையழைத்துப்போன சித்தன் அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து சந்நிதியை வலம்வந்துபணிந்து ஓரிடத்தில் ஆசனமிட்டு உட்கார்ந்து ஜெபத்திலிருந்தான் அப்படி மூன்றுநாளாகமௌனத்திலிருக்கையில், நானும் பசிதாகத்தால் வருந்தி சந்நிதியில் படுத்து நித்திரைசெய்தேன்.

என்தோழனே ! அப்போது நான் கண்டதென்னவெனில், விந்தியமலைச்சாரலில் வாசஞ்செய்யும் நமது தந்தையாகிய அம்லராஜன் எனது சொர்ப்பனத்தில் தோன்றி, அடா அனந்தவர்மா! நீ ஏன் இச்சித்தனோடு வந்தாய் இவனுன்னை இப்பராசத்திக்குபலியிட்டு அவனுக்குவேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளக்கருதி உன்னை யழைத்துவந்திருக்கிறான், ஆனதால் நீ அவனை தந்திரவசத்தினால் அப்பராசத்திக்கு பலியிட்டு அவனடையும்பலனை நீ பெற்றுக்கொண்டு நமதிடம்வந்து சேருமென்று சொன்னதுபோல் சொர்ப்பனங்கண்டு விழித்துப் பார்க்கையில், சித்தன் மௌனத்திலிருந் தெழுந்து என்னை மறுபடியும் தடாகத்திற் கழைத்துச்சென்று தன்னோடு ஸ்நானம் செய்யும்படிசொன்னான். நானுமப்படியேசெய்தேன் பின்பு என்னை நோக்கி அடா குழந்தாய்! நான் சொல்லுவதுபோல் அம்மனுக்குவேண்டிய பூசாதிரவியங்களை யெடுத்துப்போய் சோடசோபசாரத்துடன்பூசித்து அம்மனுக்கெதிரில் விழுந்து தெண்டம் சமர்ப்பித்தால் நமக்குப் பிரசன்னமாவாள், நாம் நாடிவந்தவரங்களைத்தருவாள், ஆனதால் நீசீக்கிரமாக நடத்துமென்றுசொன்னான் அதைக்கேட்ட நான் நமது தந்தைவந்து சொர்ப்பனத்தில்

சொன்னதை நினைத்துக்கொண்டு அவனைநோக்கி ஐயாசித்தரே! தாங்கள் சொல்லியவண்ணமே நடத்துகிறேன், ஆகிலும் நான் இதுவரையிலும் இவ்விதமான பூசைகள் செய்தவனல்ல இதன் விபரங்களையுந்தெரிந்தவனல்லஆனதால், நான்செய்யவேண்டிய முறைமைப்படி தேவரீர் காண்பித்தருளல் வேண்டுமென்றேன். அப்போதவனெழுந்து அம்மனெதிர்சென்று அபிஷேகமுதலிய அலங்கார நைவேத்தியமெல்லாம் நடத்திசாஷ்டாங்கமாய்விழுந் துசேவித்திருக்கையில், என்னிடமிருக்கும்வாளினுல் ஓரேவெட் டாய் அவன்முடியைத் தறித்தேன். பின்பு சற்றுநேரத்திற்கெல் லாம் சிங்கவாகனியென்னும் தேவி முப்பத்திரெண்டு ஆயுதங்க ளைத்தரித்து என்னெதிர் வருவதைக்கண்டு, பணிந்துகைகட்டி நின்று மயேஸ்வரி-வராகி-மாகாளி-ஓங்காளி-நாராயணி-பைரவி- பராசத்தி-மாதங்கி-அம்மணி - தயாபரியே சரணம். அடியேன் சஞ்சலத்தை யகற்றியாளவேண்டுந் தாயேயென்றுபணிந்தேன்.

அப்போது திரிபுராந்தகி அடாகுழந்தாய்! நீஎதைக்கோரி வந்தாய் உன்கருத்தென்ன சொல்லுமென்றுகேட்க, நான் சிர மேற்கரங்குவித்துவணங்கி, நாரணிக்கொப்பாகிய பூரணி! விண மணிபோன்ற அம்மணி! ஆபத்தைநீக்கும் அருள்வடிவாகிய ம னேன்மணி! வேண்டியபாக்கியந்தரும்நவமணியே! என்சஞ்சலம் யாதெனில், நானும் என்சகோதரர்களும் பூபிரதட்சணம் செய் துவருகையில் என்னைவிட்டுப் பிரிந்துபோனுர்கள். அவர்களைத் தேடிவருந்தி மகேந்திரநகரை யடைந்து அர்த்தபதியின் புத்தி ரியாகிய ஜெயமாலினியைக்கண்டு அவளை மணம்புரிய ஆசை மேலிட்டு இப்பிரயத்தினம் மானிடன்வல்லமையால் முடிவுபெ ருதெனக்கருதி துயரமுற்று தேவரீர் சந்நிதானமடைந்தேன். அடியேன் மனக்குறையையகற்றி அப்பெண்ணை மணம்புரிவிப்ப துடன் எனது சகோதரரையும் காணும்படிக்கு அனுக்கிரகம் புரியவேண்டும் ஆதிபராசத்தியென்று பாதகமலங்களில் விழுந் துபணிந்தேன். அப்போது பைரவி அடா குழந்தாய்! உன்னெ ண்ணம்போல் சித்தியாகக்கடவதென்று என்கையில் மாத்திரை க்கோலளித்து இதைக்கொண்டு மகேந்திரநகரம்சென்று, ஜெய மாலினியை மணஞ்செய்து, அந்நகரத்துக்கரசனுகி பின்பு உன் சகோதரரைக் காணுவாயென்று ஆசீர்வதித்து மறைந்தனள்.

நான் சந்தோஷமாக மாத்திரைக்கோலைக்கைக்கொண்டு வந்தவழியேதிரும்பி சந்நியாசிவேடம்பூண்டு தேசதேசங்களைச் சுற்றிக் கடைசியில் மகேந்திரநகரையடைந்து ஓர் பூங்காவனத்திலுட்கார்ந்து அந்நகரத்திலுள்ளவர்களுக்குவேண்டிய நன்மை துன்மைகளையெல்லாம் அவரவர்களிச்சைப்படி சொல்லிக்கொண்டு வந்தேன் இச்சங்கதிகளெல்லாம் நகரமுழுதும் பிரகாசித்து வருகையில், ஒருநாள் ஓர் முதியவள் ஒரு பெண்ணையழைத்துக்கொண்டுவந்து என்னைப்பணிந்து கண்களில் ஜலம்பெருக நின்றாள்.

அப்போது நான் அம்முதியவளைநோக்கி அம்மா நீயார்? என்னகாரியமாகவந்தாய் ஏன்விசனப்படுகிறாயென்று கேட்டேன். அதற்கவள் சொன்னதாவது ஓ-சுவாமி! நான் இந்நகரத்து தாசி இவளென்குமாரத்தி இவளுக்கு காமமஞ்சரியென நாமஞ்சூட்டி வெகுதிரவியங்கள் செலவழித்து சங்கீதங்கள் பரதநாட்டிய முதலியதைகற்பித்து எங்கள் குலத்தொழில் செய்யும்படி சொல்ல இவளதைவிரும்பாமல் ஞானமார்க்கமடைந்து எங்களுக்கு விரோதமாகநடப்பதால் தேவரீர் இவளைத்திருத்தி எங்கள் குலத்தொழில் புரியும்படி அருள்செய்யவேண்டுமென்று அவளை யென்னிடம்விட்டுப்போயினள். அப்போது நான் அவளுக்குவேண்டிய நீதிமார்க்கங்களைப்போதித்து கிழவியின் கருத்தைப்போல் நடக்கும்படிசொல்ல, அவளும் சம்மதித்து பிரதிதினமும் என்னிடம்வந்து பேசிக்கொண்டிருந்து தன்னிருப்பிடம் போவாள் இப்படியிருக்கையில், ஒருநாள் அவளென்னைநோக்கி ஓ-சுவாமி! தாங்களேன் இம்மைதான வெளியிலிருந்து வருத்தப்படுகிறீர் எங்கள் வீட்டிற்குவாரும் தங்களுக்குவேண்டிய பணிவிடைகளைச் செய்கிறேனென்று வேண்டினள். நானும் சம்மதித்து அவளுடன்சென்று அங்குவாசஞ்செய்துவருகையில், அவளென்னிடமிருக்கும் மாத்திரைக்கோலை கவர்ந்துகொள்ள யோசித்து ஒருநாளிரவில் எனக்குத்தெரியாமல் மாத்திரைக்கோலைத்திருடிக்கொண்டு மறுநாள் காலையில் நகர்காவலரையழைத்து என்னையவர்களிடம் ஒப்பிவித்து, இராத்திரிஇவன் என்வீட்டில் களவு செய்யவந்தவனென்று நிஜம்சொல்ல அவர்களும் என்னை அரசனிடம் கொண்டுபோய்விட்டு காமமஞ்சரி சொல்லியபடி தெரிவித்தார்கள். அதைக்கேட்டவேந்தன் நியாயம்விசாரியாமல்

என்னை யழைத்துக்கொண்டுபோய் நகரத்துக்கு வெளியே விட்டுவர உத்திரவளித்தான், அவர்களுமவ்வாறே நடத்திப்போனார்கள். அப்பால் நான்மனம்நொந்து பழையபடியேபராசக்தி சந்நிதானஞ்சென்று பணிந்து அம்மணி பைரவி தாங்களளித்தமாத்திரைக்கோலை கணிகையாகிய காமமஞ்சரி என்னை வஞ்சித்து அபகரித்துக்கொண்டமையால் தேவரீர் அதை வரவழைத்து தந்தாலாச்சுது இல்லாவிடில் இதோவாளினால் என்சிரசைவெட்டி உன்சன்னதியிற்றானே போட்டுவிடுகிறேன் பாருமன்னையே யென்றுசொல்லி வாளைக் கையிலெடுத்தேன். அம்மன் கண்டு மகிழ்ந்து என்னெதிர் வந்து அப்படியே நல்லதென்று மாத்திரைக்கோலை வரவழைத்துக் கொடுத்தனள். அதைப் பெற்று அம்மனைப்பலதரம்வணங்கி பழயபடியேவந்து மகேந்திரநகரைச் சேர்ந்து ஓர்பள்ளிக்கூடம் யேற்படுத்தி அவ்விடத்தில் வாசஞ்செய்யும் சிலதனவான்களுடைய பிள்ளைகளுக்கு வில்வித்தை முதலிய தனுர்சாஸ்திரங்களை கற்பித்துவந்தேன்.

இவ்வாறிருக்கையில் அந்த நகரமெல்லாம் என்னைப்புகழ்ந்து பேசுவதை இறைவனாகிய அர்த்தபதி கேள்விப்பட்டு என்னைக் காவலாளர்களால் வரவழைத்து என்விருத்தாந்தங்களைத் தெரிந்து தன்சேனைகளுக்குப் போர்வீரனாக நியமித்திருக்கச் சொல்ல நானும் சம்மதித்து அவ்விடமிருக்கும் நாளையில், எனது சாதுர்ய பராக்கிரமத்தைக் கண்டு வேந்தனாகிய அர்த்தபதி களிப்படைந்து சிலநாளைக்கெல்லாம் தன்முதன்மந்திரியாக நியமித்தான். நானும்மந்திரியாகி மனவருத்தமில்லாமல் வாழ்ந்திருக்கும்போது மாராடதேசத்தரசர்களில் ஒருவனாகிய மதனதேவனென்பவன் ஜெயமாலினியை மணஞ்செய்ய பிரயத்தினப்பட்டு தூதுவரையனுப்ப வேந்தனாகிய அர்த்தபதி தன்குமாரத்தியின் கருத்தை முன்னமே தெரிந்தவனாதலால் அவனுக்குப் பெண்ணைக்கொடுப்பதில்லையென்றுசொல்லவே, அதனைக்கேட்ட மதனதேவன் கோபித்து தனது நால்வகைச்சேனைகளோடு மகேந்திர நகரத்தின்பேரில் படையெடுத்து வந்தான், அச்சமயத்தில் வேந்தனாகிய அர்த்தபதி என்னை யழைப்பித்து இதற்கெப்படி யோசனையென்றுகேட்க, நான்வணங்கி ஓ-மகாராஜா! தங்களுக்கு கவலையேன்? எனக்கு உத்திரவளித்தால் பகைவரை வென்

று வெற்றியடைந்து வருகிறேனென்றுசொல்ல வேந்தன் சம்மதித்திருந்தான். பின்பு நான் படைகளைக் கூட்டிச்சென்று காமதேவனைமாட்டி போர்புரிந்து பகைவரையோட்டி பட்டணம் வருகையில், இதற்குமுன்னமே நான் வெற்றியடைந்த சங்கதிகளெல்லாம் தூதுவர்களால் அரசன்கேட்டு ஆனந்தங்கொண்டு என்னெதிர்வந்தழைத்துப்போய் வேண்டிய வெகுமதிகளை நடத்தி தனது நகரமுழுதுமலங்கரிக்க திட்டஞ்செய்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தன்குமாரத்தியான ஜெயமாலினியை எனக்கு மணஞ்சூட்டிவைத்தார். நானும் மகாதேவியின் அநுக்கிரகத்தினால் மகேந்திரநகரில் வாசஞ்செய்து வந்தேன்.

இப்பால் அரசனாகிய அர்த்தபதி சிலநாளைக்கெல்லாம் காலகதியால் விண்ணுலகடையவும் அவருக்குவேண்டிய கருமக்கிரிகளைச் செய்வதற்கு சந்ததியில்லாமையால் அவ்வேலைகளை யெல்லாம் நானேமுடித்து மகேந்திர நகரைப் பட்டங்கட்டி மனமகிழ்ந்திருந்தேன். அப்படியிருக்கும்போது என்னை வஞ்சித்து மாத்திரைக்கோலை யபகரித்துக்கொண்ட கணிகைமாதாகிய காமமஞ்சரியை பிடித்துவரச்செய்து அவளுக்குத்தக்கதெண்டனை விதித்து சண்டனைப்போல் எண்டிசையிலும் கீர்த்திமானாய் மண்டலமாளுகையில், என்தோழனே! தங்களைப்பிரிந்த வருத்தம் என்னைவிட்டு நீங்காமலிருக்கையில், மாதங்கிகன்னி சொல்லியவண்ணமே தங்கள் மகுடாபிஷேக நிரூபத்தைக்கண்டு இவ்விடம் வந்தேனென்று அனந்தவர்மன் தன்வரலாறுதெரிவிக்க, இதுகளைக்கேட்ட அமிர்தவசனன் சந்தோஷமடைந்து என் சகோதரா! நீ மகாசாமர்த்தியவானென்று கொண்டாடினான்.

தேசங்களைவிட்டுப் புறப்பட்டு மலை-வனம்- வனாந்திரங்களைக் கடந்து மகா ஆடம்பரத்துடன் அவந்திதேசத்தைச்சேர்ந்து நகரத்துக்குவெளியில் நால்வகைப் படைகளையும் நிறுத்திவிட்டுத் தாங்கள் மாத்திரம் பாதசாரியாக நடந்து அரண்மனைக்குட் சென்று அமிர்தவசனனைக்கண்டு வணங்கினார்கள். அப்போது அரசன் அவர்களைக்கட்டி யாலிங்கனம்செய்து ஆசனங்களிலிருக்கச் சொல்லி தனது சேவகனையழைத்து மந்திரிபிரதானிகளை இவ்விடமழைத்துவர உத்திரவளித்து தன்சகோதரர்களோடு போஜனசாலைசென்று அறுசுவை பதார்த்தத்துடன் சாப்பிட்டிளைப் பாறிகலவைச்சாந்தணிந்து தாம்பூலந்தரித்து வீற்றிருந்தார்கள்.

அச்சமயத்தில் மந்திரிபிரதானி இருவரும்வந்து அமிர்தவசனனைவணங்கி தேவரீர் வரவழைத்தகாரியம் யாதோ தெரிவிக்கவேண்டுமென்றுகேட்க, அரசன் தனதுமந்திரியைநோக்கி மந்திரி நானும் என்சகோதரர்களும் விந்தியமலைச்சாரலுக்குப்போய் எங்கள் குருமூர்த்தியாகிய வாமதேவரை தெரிசித்து மாளவதேசத்தரசனாகிய மதனசேனனை வெற்றியடைந்துவர யோசித்திருக்கின்றேன். ஆனதால் நான் வருகிறவரையிலும் நமதுபட்டணத்தை வெகுஜாக்கிரதையோடு பாதுகாத்து வரவேண்டியதென்று உத்திரவளித்து பிரதானியைநோக்கி, நமது நால்வகைப்படைகளையும் நாளையத்தினம் பிரயாணப்படுத்தி நீயும்வரவேண்டுமென்றுசொல்லி அவர்களிருவரையும் அனுப்பிவிட்டு தன் சகோதரர்களுடன் விநோதமாக அன்றிரவைக்கழித்து மறுநாளுதயத்தில் தன்மனைவி அவந்திசுந்தரியை சகோதரர்களுடைய மனைவிகளோடு பிரயாணப்படுத்தி வெகுசந்தோஷமாய் தானும் தன் சகோதரர்களும் நால்வகைப்படைகளோடு அவந்திதேசத்தைவிட்டுப் புறப்பட்டு காடு மலை வனம் வனாந்திரங்களிலெல்லாம் தங்கி விந்தியமலைச்சாரலையடுத்து வாமதேவர் ஆசிரமத்தருகில்வந்து ஓரிடத்தில்படைகளை நிறுத்திவிட்டுத்தானும் சகோதரர்களும் அவரைவலம்வந்துபணிந்து ஏ-குருநாதா! தாங்கள் ஆக்கியாபித்தவாறு பூமிபிரதட்சணஞ்செய்து மகுடாபிஷேகராய் வந்துசேர்ந்தோம் இனிநாங்கள் செய்யும்வாறு தெரிவிக்கவேண்டுமென்று பணிந்துநின்ற நவகுமாரர்களையும் தவசிரேஷ்டராகிய வாமதேவர்கண்டு, அப்பா அரசர்களே! விந்திய

மலைக்கோட்டையில் இருக்கும் உங்கள் தந்தையாகிய அம்ஸரா ஜனிடம்சென்று அவரடைந்த புத்திரசோபத்தைமாற்றி மாளவதேசத்தரசனை ஜெயமடைந்து உங்களுக்குப் புராதனமாகிய புஷ்பபுரியை அடையக் கடவீர்களென்று ஆசீர்வதித் தனுப்பினூர். அவ்வுத்திரவைப்பெற்றுப்பணிந்து தங்கள் நால்வகைப்படைகளோடு புறப்பட்டு தந்தையிடம்வருகையில், இவர்கள் வரும் ஆடம்பரத்தை மந்திரிமுதலிய மன்னனும் கண்டு சிந்தைகலங்கி பகைவனுகிய மதனசேனன் படையெடுத்து வந்துவிட்டானென்று பயந்து அவ்விடமிருந்து தப்பித்துக் கொண்டுபோக யோசித்திருக்கும்போது நவகுமாரரும் படைகளை கோட்டைக்குவெளியே நிறுத்தி தாங்கள்பாதசாரியாக நடந்து தந்தையைக்காணவந்தார்கள். அப்போது இவர்களைக்கண்டமந்திரிகள் அரசகுமாரனோடு நமது குமாரர்களும் பூபிரதட்சணம் செய்து வந்தார்களென்று சிந்தைமகிழ்ந்து ஓடிவந்து பயமடைந்திருக்கும் அம்ஸராஜனிடம்போய் பணிந்து ஏ-மகாராஜா! நமக்கின்று தான் நல்லகாலம் பிறந்தது எப்படியெனில், இப்போது நம்மை நாடிவந்த படைகளெல்லாம் எதிரிகளல்ல. உமது புண்ணியவசத்தாலுதித்த புத்திரர்கள் வந்து விட்டார்கள் வாருமென்று சொல்லவே பயப்பிராந்தியோடு புத்திரசோபத்தினுல் தத்தளித்திருக்கும் அம்ஸராஜன்கேட்டு பிரம்மானந்தமடைந்து (ஆவி நீங்குங் காலத்தில் அமிர்தசஞ்சீவி கிடைத்ததைப்போல்) தன்னிலைமறந்து ஓடிவந்து ஒன்பது குமாரரையும் கட்டித்தழுவி முத்தமிட்டு அப்பா குமாரர்களே! என்னை இதுகாலம் பிரிந்திருக்க எப்படிமனந்துணிந்தது என்று விசனமடைந்தனர். அச்சமயத்தில் தாயாகிய வசுமதிவந்து குமாரர்களைத்தழுவி உச்சிமுகர்ந்து அஸ்தங்களைப்பிடித்து கண்களிலொத்தி என்நவரத்தினங்களே! என்சோபம் நீங்க இன்னுநாளாயிற்றோ வென்று விசனமடைந்தனள்.

இவ்வாறு ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு தாங்கள் போய்வந்த வரலாற்றை யெல்லாம் தந்தைதாய் முதலிய மந்திரிகளிடத்திலும் தெரிவித்தார்கள். யாவரும் அவ்விந்தைகளைக் கேட்டு சிந்தைமகிழ்ந்து சந்தோஷமுற்றிருக்கையில், அம்ஸராஜன் மிதுலாநகரத்தரசனுகிய பிரகாரவர்மனைக் கட்டித்தழுவி

க்ஷேமசமாச்சாரங்களை விசாரித்துக்கொண்டிருந்தார். அச்சமய த்தில் அமிர்தவசனன்மனைவி முதலிய பட்டத்து ஸ்திரீகளெல் லாம்வந்து மாமனாரையும் மாமியாரையும் வலம்வந்து பணிந்தார் கள். அப்போது அரசன் யாவரையும் ஆசீர்வதித்து குமாரர் கள் முதலியபந்துவர்க்கங்களுடன் போஜனமருந்திசந்தோஷமாக வீற்றிருந்தார்கள். அச்சமயத்தில் அமிர்தவசனன் தந்தையைப் பணிந்து ஐயா ! தாங்கள் ஏன் இன்னம் இம்மலைச்சாரலில் வரு ந்துவது நாமின்றே சென்று மதனசேனனை வென்று நமது புஷ் பபுரியை யடைவோமென்றான். அதைக்கேட்ட அம்ஸராஜன் குமாரனைத்தழுவி அடா நவமணிகளே ! இனி நமக்குப் புஷ்ப புரியும் வேண்டாம் எதிரிகளைப்பகைக்கவும் வேண்டாம் நீங்க ளொன்பதுபேரும் என்னெதிர்வந்து நின்றதே நான் புஷ்பபுரி யை அரசுசெலுத்திய பெரும்பாக்கியம் பெற்றேன். நாம் யாவ ரும் இங்கிருப்பதே நலமென்றுசொல்ல அதனைக்கேட்ட அமிர் தவசனன் தந்தையைவணங்கி ஐயா! தாங்கள் சொன்னதை தடு த்துப்பேசுவதை மன்னிக்கவேண்டியது ஏனெனில், நம்மையெ திர்த்த சத்துருக்களை நாமெதிர்க்காமல் சும்மாவிடலாமா நீரிவ் விடத்திற்றானே இருமென்றுசொல்லி, தன் துணைவர்களோடு நால்வகைப் படைகளையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டு மாளவ தேசத்தைச்சேர்ந்து நகரத்துவெளியில் நின்று தூதுவனையனுப் பி தான் போருக்குவந்தசேதியை மதனசேனனிடம்போய்த்தெ ரிவித்துவாருங்களென்றனுப்பினான்.

அவ்வுத்திரவைப்பெற்று தூதுவர் மதனசேனனிடம் செ ன்று மகாராஜா தமது கோட்டைக்குவெளியில் அவந்திதேசச் சக்கிரவர்த்தியாகிய அமிர்தவசனராஜன் யெட்டு இளவரசருட ன் தங்களிடம்போர்புரியவந்திருக்கிறார்கள் அதுசங்கதி தெரிவி க்கவந்தோமென்றுசொல்லிப்போனார்கள். அதைக்கேட்ட மதன சேனன்பயந்தவனாய்தனதுமந்திரிகளையழைத்து இதற்கெப்படி யோசனையென்றுகேட்க, அவர்கள் அரசனைநோக்கி மகாராஜா உலகத்தரசர்கள் தன்பலத்தையும் எதிரியின்பலத்தையும் நிதா னித்தல்லவோ போர்செய்ய முயர்ச்சிதேடுவார்கள் அப்படிக்கி ருக்க இப்போதுஎட்டு அரசர்களோடு அவந்திதேசச் சக்கிரவர் த்தி பூசலுக்கு வந்திருப்பதால் அவர்கள் மகாதிடவான்கள் தே

விசகாயம் பெற்றவர்கள் அவர்களைவெல்ல நம்மால் முடியாது ஆனதால் தாங்கள் அவர்களைக்காணும்படியான மரியாதைகளு டன்சென்று சமாதானமாய்ப்பேசி அவர்கள் நகரமாகிய புஷ்ப புரியை சுவாதீனப்படுத்தி இதுமுதல் மாளவதேசத்துக்கும் ப குதி செலுத்திஞல் பகைவரில்லாமல் வாழலாமென அமைச்சர் கள் கூறினர்கள்.

அதைக்கேட்டு மதனசேனன் சம்மதித்து அவ்வாறே மந் திரிகளோடுசென்று அமிர்தவசனனுக்கு வேண்டிய மரியாதை செய்து வணங்கினன். அதுகளைக்கண்ட அமிர்தவசனன் சந் தோஷமடைந்து மதனசேனனையு மழைத்துக்கொண்டு சகோ தரருடன் புறப்பட்டு புஷ்பபுரிக்கு வந்து ஜெயசிம்மனை நோக் கி நீ விந்தியமலைச் சாரலுக்குச்சென்று நமது தந்தை தாய் முதலிய யாவரையும் இவ்விடமழைத்துவா வென்று, சொல் அவனுமவ்வாரே யழைத்துவந்தான். அப்போது மதனசேன அம்ஸராஜனைக்கண்டு தேவரீர் அடியேன்செய்தகுற்றம் மன் த்தருளவேண்டுமெனவணங்க, வேந்தன் அவனை யாதரித்து தோஷமாகயாவரும் வீற்றிருந்தார்கள். அச்சமயத்தில் நவகு ரரும் தந்தையைப்பணிந்து ஐயா! தாங்கள் பழையபடியே ப பபுரியை மகுடாபிஷேகஞ் செய்துகொள்ளுமென்றுசொ அம்ஸராஜன் அவர்களைநோக்கி அப்பா குமாரர்களே! நா வயதுசென்றவன் இனி என்னல் இந்த பூமிபாரம் சுமக்க யாது ஆனதால் நீங்கள் ஒன்பதுபேருக்குள் யாராவது பபுரியை பட்டங்கட்டிக்கொள்ளுங்களென்று சொன்னர். கேட்டு நவகுமாரரும் தந்தைசொன்னதை தடுத்துச் சொ மல் தமது குருமூர்த்தியாகிய வாமதேவரை யழைப்பித்து தையின் கருத்தைத்தெரிவித்து ஏ-குருநாதா! இப்பட்டத் எவர் தரித்துக்கொள்ளுவதோ திருவாய்மலர்ந்தருளல் வே மென்று யாவரும்பணிந்தார்கள். அப்போது வாமதேவர் ஸராஜனைநோக்கி அரசனே உனது குமாரர்களில் ஜேஷ்ட கு இப்பட்டத்தையளித்து சிலகாலமிருந்துமனைவியுடன் ச லோகமடையக் கடவாயென்று ஆசிர்வதித்துச்சென்றனர். பு அம்ஸராஜன் தன் மந்திரிகளைநோக்கி புஷ்பபுரிநகரத்தை மராவதிக்கொப்பாக அலங்காரஞ்செய்ய திட்டஞ்செய்து அது

முதல் முப்பத்திரெண்டு தானங்களை குறைவில்லாமல் நடத்தி தேவாலயங்களுக்கெல்லாம் திருவிழாமுதலிய பஞ்சபர்வங்களை நடப்பிக்கச் செய்து தமது குலமுதல்வராகிய பிராமணர்களையழைத்து முகூர்த்தநாள் நியமித்து அத்தினத்தில் கங்கை யமுனைமுதலிய தீர்த்தங்களினால் அமிர்தவசனனுக்குஸ்நானஞ்செய்வித்து நவரத்தினபரணங்களணிந்து ஒன்பது குமாரர்களோடு பதினெட்டுவகை வாத்தியங்களுடன் நகர்பிரதட்சணஞ் செய்வித்தழைத்து வந்து சிம்மாசனத்திலிருத்தி சுபமுகூர்த்தத்தில் அமிர்தவசனனுக்கு மறைவல்லோர்களால் மகுடந்தரித்து இளவரசர்களாகிய அனந்தவர்மன்- அஸ்வசேனன்- பிறைமதி- ஜெயசிம்மன்-வியர்த்தபாலன்- இரத்தினவதனன்-புஷ்கரன்- மித்திரன் முதலியகுமாரர்களை இருபாரிசத்திலும் வீற்றிருக்கச்செய்து ஐம்பத்தாறுதேசத்துக்கும் முதன்மையான அவந்திதேசச் சக்கிரவர்த்தியென்று ஆசீர்வதித்து மக்களைப்பார்த்து மனக்களிப்படைந்து பிராமணர்களுக்கெல்லாம் அபரிமிதமாக தானமளித்து மதனசேனன் பிரகாரவர்மன் மந்திரிகள் முதலியபந்துவர்க்கங்களுடன் சென்று அறுசுவைபோன்ற போசனமருந்தி யாவரும் சுகித்திருந்தார்கள்.

அப்பால் மாளவதேசத்தரனகிய மதனசேனன் அம்ஸராஜன் அமிர்தவசனன் முதலிய அரசர்களிடத்திலும் விடைபெற்றுத் தன்னிருப்பிடஞ்சென்றான். பின்பு சிலநாள்சென்று அமிர்தவசனன் தந்தையின் மந்திரிகளாகிய சுமந்திரன்-சுமத்திரன்-சுமதி இம்மூவரையுமழைத்து புஷ்பபுரியைபரிபாலித்துவர திட்டம்செய்து தந்தைதாய்முதலிய சகோதரர்களோடு நால்வகைப்படைகளைக் கூட்டிக்கொண்டு அவந்தி தேசத்தைச்சேர்ந்து சகோதரர்களுக்கெல்லாம் வேண்டியமரியாதை நடத்தி அவரவர்கள் தேசங்களுக்கனுப்பிவிட்டு தனது தந்தைதாய் முதலிய மந்திரிகளுடன் நிந்தையில்லாமல் சிந்தைமகிழ்ந்து செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தார்கள்.

அம்ஸராஜன் கதை

சம்பூரணம்.

அட்டவணை.

கதை.	பக்கம்.
முற்பாதி.	1
அமிர்தவசனன்.	15
பிறைமதி.	38
புஷ்கரன்.	46
வியர்த்தபாலன்.	55
அஸ்வசேனன்.	67
ஜெயசிம்மன்.	83
இரத்தினவதனன்.	89
மித்திரசேகரன்.	99
அனந்தவர்மன்.	105
பிற்பாதி.	112

முகவுரை.

அறிவினாலும் வலிமையினாலும் மிகுந்து சிறப்புற்றுவிளங்கிய கிஷ்கிந்தைவாசராகிய எனது நண்பர் திருவரங்கம் பிள்ளை என்பவர் பலகாலும் என்னைக்கண்டு வற்புறுத்தி தாங்கள் வாசித்தறிந்த பாஷைகளினால் தேர்ச்சி யடைந்திருப்பதால் லோகோபகாரமாய் யாவரும் வாசிக்கத்தக்க மிக்க சாதுர்ய சாமர்த்திய தந்திரங்களாயும் யெளிதில் எல்லோரும் தெரிந்துக்கொண்டு மனக்களிப்பை யடையும் படியாகவும் ஓர் சரித்திர மியற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டமையால் யானும் என்னாற் கூடிய சிற்றறிவைக் கொண்டு இச்சரித்திரமியற்றி அச்சிடத்துணிந்தேன் இதிலுள்ள சொற் குற்றம் பொருட் குற்றங்களைக் கற்றுணர்ந்தோர் சீர்திருத்தி இகழாமல் வாசிக்கும்படி கோருகின்றேன்.

இங்ஙனம்,

பூ-சு- தங்கவேலுமுதலியார்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுயந்திரசாலைத் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்குந்தெரிவிப்பது யாதெனின், பூவிருந்தவல்லி தங் கவேலுமுதலியாரால் இயற்றப்பட்ட நவகுமார சரித்திரமென் னும் அம்ஸராஜன் கதையாகிய இந்நூலை தி - சடகோபநாயு டென்னும் என்னால் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் எனது அனு மதியின்றி யாவரேனும் அச்சிற் பதிப்பாராயின் 1887 வூத்தி ய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின் 6-வது விதியின்படி யான் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும், கோர்ட்டாரவர் களால் விதிக்கும் சட்டத்திற்கும் உட்பட வேண்டியதாயிருக்கு மென்பதையும் உண்மையென் றறிவீராக.

இங்ஙனம்,

தி. சடகோபநாயுடு.